ௐ

சிவாகம மரபு

நிலைத்தனவும் அழிந்தனவும்

பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்

ௐ

சிவாகம மரபு

நிலைத்தனவும் அழிந்தனவும்

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்

தலைவர், சம்ஸ்கிருதத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளியீடு:

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்

முன்னேஸ்வரம்.

சிலாபம்.

2017

நூல்	:	சிவாகம மரபு நிலைத்தனவும் அழிந்தனவும்
ஆசிரியர்	:	பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் B.A (Hons), PG Dip.Edu., M.Phil. தலைவர், சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
வெளியீடு	:	ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம் முன்னேஸ்வரம், சிலாபம்.
பக்	:	146
அச்சமைப்பு	:	மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ் நல்லூர், யாழ்ப்பாணம்.
ISBN	:	978-955-43962-1-0

முகவுரை

சைவ சமய மரபின் நிலைக்களனான நூல்கள் சிவாகமங்கள். சிவாகமங்களின் மொழிமரபு சம்ஸ்கிருத மரபுடன் ஒன்றிணைந்தது. சிவாகமங்களின் பரந்த தன்மை சிவாகமப்பண்பாட்டிற்குரிய தனித்துவமான அடையாளமாகும். சிவாகமங்கள் சார்ந்த தன்மை சம்ஸ்கிருத மொழிமூலம் அமைந்து விளங்குவதும், சைவ சமய மரபையும் சைவசித்தாந்த தத்துவத்தை அறிய விழைவோர் சமஸ்கிருத மொழியை அறியாதிருப்பதும் மறை பொரு ளான தன்மையை சிவாகமங்களுக்குத் தேடித்தந்தது. அவ்வகையில் சைவமரபின் உயர்ந்த மரபு சிவாகமங்களை மட்டுப்படுத்தியதோடு அழிவை யெதிர்நோக்குவதற்குமான கோலத்தையும் தோற்றுவித்தது. அந்நிலையில் சிவாகமங்களின் மிகப்பரந்த தன்மை இன்று எத்தகைய நலிவையெதிர்நோக்கி யுள்ளது எனும் ஏக்கத்துடனான நோக்கே சிவாகம மரபு - நிலைத்தனவும் அழிந்தனவும் எனும் இந்நூலை எழுதவேண்டும் எனும் ஆவலைத் தூண்டி யது; காரணமாகவும் அமைந்தது.

சிவாகம மரபின் பரந்தபண்பாடு சைவ வாழ்வியலின் பல்வேறுபட்ட பரிணாமங்களையும் எடுத்துக்காட்டி நிற்கின்றன. அந்நிலையில் விஞ்ஞானம், பொறியியல், புவியியல், கட்டடக்கலை, சிற்பக்கலை ஓவியக்கலை, நடக்கலை, இசைக்கலை, திட்டமிடல், எனப் பரந்த தன்மைகளில் பல்வேறு வித்தைகளை யும் கூறிநிற்கும்வேளை சைவ சிந்தாந்த மூல ஊற்றுக்களாகவும் விளங்குகின் றன. இத்தகைய பரந்ததன்மையை உணர்த்தும் நோக்கில் சம்ஸ் கிருதமொழி மரபுடன் இணைந்ததன்மையில் சிவாகமங்களது தோற்றம் பற்றிய சிந்தனை களுடன் பதிப்பு முயற்சிகள், கால நிர்ணயம் பற்றிய சிந்தனைகள், உரை யாசிரியர் மரபு என்பன மிகவும் ஆழமான கருத்தாடல்களாக நோக்க வேண்டிய தன்மையன.

சம்ஸ்கிருத இலக்கிய வரலாற்றில் சைவ சமயங்களின் சாஸ்திரங்கள் என்னும் சிவாகமங்கள் மற்றும் கிரியை எனும் கலைநூல்கள், சிற்ப சாஸ்திர நூல்கள், கட்டடக்கலை நூல்கள் என்பன எவையும் சுட்டிக்காட்டப்படாது விளங்குகின்றமை மனம் வருந்தத்தக்க விடயமாக விளங்குகிறது. சிவாகமங்

கள் சார்ந்த மரபானது சைவமரபில் தனித்துவமான மொழி மரபையும் கலைச்சொல் மரபையும் தன்னுட் தாங்கி விளங்குவது கவனத்திற்கொள்ளத் தக்கது. இந்நிலையில் சம்ஸ்கிருத மொழியில் புலமையுடையவராக விளங் கினாலும் சைவ சமயப் புலமையின்றி அணுகுவது பயனற்றதாகவே அமையும் என்பதனையும் உணர முடிகின்றது.

சைவசித்தாந்த தத்துவமரபின் உயர்ந்த சிந்தனைகள் சிவாகம மரபின் ஞானபாதங்களை அடியொற்றி மிகப்பரந்த தன்மையில் உரையெழுதப்பட்டு விளங்குகின்றமை கவனத்திற்கொள்ளத்தக்கது. இந்நிலையில் சம்ஸ்கிருத மொழியின் மூல ஊற்றுக்களாக அஷ்டப்பிரசரணநிகள் எனும் சைவசிந்தாந்த மூலங்கள் மிகப்பரந்த உரைகளையுடையதாக விளங்குகின்றன. அவற்றுடன் வேறுபல தொகுதி நூல்களும் சிவாகமங்களின் ஞானபாதச் செய்திகளை யடியொற்றி சைவ சித்தாந்த தத்துவத்தின் மிகச் சாரமானதும் நுட்பமானதுமான விடயங்கள் பலவற்றை இலைமறைகாயாகக் கூறி நிற்கின்றன. இந்நூல் மரபு களை கைவர்கள் சம்ஸ்கிருத மொழியின் அறிவைப்பெறாது விளங்குகின்றனர் எனும் காரணத்தினால் அறியாது காணப்படுவது மனவருத்தத்தக்க விடய மாகும்.

தென்னிந்தியாவில் விந்தியமலைக்கு தெற்காக விளங்கும் சைவசித் தாந்த மரபு சிவாகம மரபினையும் வைதிகமரபினையும் நிலைக்களனாக உடையனவாகும். சிவாகமங்களின் ஞானபாதச் சிந்தனைகள் காஷ்மீரதேசத் தில் வளம்பெற்ற தன்மையும் சம்ஸ்கிருதமொழி வளத்தில் உரைகள் பெருகி யும் வந்தமை கவனத்திற்கொள்ளத்தக்கன. இத்தகைய சிந்தனைமரபுகள் சுமார் 1400 ஆண்களுக்கு முன்னதாகவே நிலைபெற்றதன்மையும் சமமான நோக்கில் தமிழ்மொழியிலும், சம்ஸ்கிருத மொழியிலும் உயர்சிந்தனைகள் வளம் பெற்றனவாக இலக்கிய வடிவமும் சிந்தனைத்தெளிவு பெற்றதன்மை யினையும் காணமுடிகின்றது. இவ்வகையில் உயர்ந்த ஞானச்சிந்தனைகளை யும் அத்தகைய பதிவுகளையும் அறியாது போதல் சைவசித்தாந்திற்கு இழப்பேயன்றி சம்ஸ்கிருத மொழிவளத்திற்கு இல்லை என்பது உறுதியாகும்.

காலத்தின் தன்மைகருதி சைவ சமயத்தவர்கள் சமய சிந்தனையுடன் சிவாகம மரபுகளை அழியாது பாதுகாக்கவேண்டியது தலையாய

கடமையாகின்றது. அவ்வகையில் சிவாகம மரபுகளை இயன்றளவு தமிழ் மக்களும் அறியும் வகையில் வெளிக்கொணரும் பணியானது அவசியமானது என உணரப்படுகின்றது.

இந்த அடிப்படையில் மனதிற்பதிந்த எண்ணங்களை கட்டுரைகளாக ஆக்கி அவற்றினை ஒன்றாகத் தொகுத்து சிவாகம மரபு நிலைத்தனவும் அழிந்தனவும் எனும் சிந்தனையைத் தூண்டும் வகையில் சிவாகமங்கள் பாது காக்கப்படவேண்டியன என்றும் தொனிப்பொருளோடு இந்நூலை வெளிக் கொணர்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இந்நூல் ஆக்கத்திற்கு பல்வேறு வழிகளிலும் உதவிய சைவ அன்பர் கள் அனைவருக்கும் சிவப்பரம்பொருளின் திருவருள்கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

ச. பத்மநாபன்

தலைவர்
சம்ஸ்கிருதத்துறை,
கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பிரதமகுருவும், தர்மகர்த்தாவும்
ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம், சிலாபம்.
06.02.2017

பொருளடக்கம்

1. சிவாகமங்களின் தோற்றமும் வளர்ச்சியும் 01

2. சிவாகமங்களின் இன்றைய நிலையும் பதிப்பு முயற்சியும் 15

3. சிவாகமங்களின் மொழிநடையும் உரைமரபும் 19

4. சிவாகமங்களின் காலம் 36

5. திருமந்திரமும் சிவாகம மரபும் 42

6. கிரணாகமமும் ஞானாமிர்தமும் – ஓர் ஒப்பியல் நோக்கு 63

7. சிவாகமங்கள் கூறும் கிராமநகரத் திட்டமிடல் –சிவாலயங்களை மையப்படுத்திய ஓர் நோக்கு 76

8. கிரணாகமம் புலப்படுத்தும் இந்துசமய வாழ்வியல் – ஓர் ஆய்வு 94

9. சிவாகம மரபில் விஷ்ணு 101

10. வடமொழிச் சைவ சித்தாந்த வளத்திற்கு சத்யோஜ்யோதி சிவாச்சாரியாரின் பங்கும் பணியும் 107

11. திருக்கோவிற் கிரியை மரபில் மஹோற்சவம் (பிராயச்சித்த விதியூடான பார்வை) 113

12. ரத சங்கிரஹரணவிதி படலம் பூர்வ காரணாகமம் 142வது படல தமிழ்மொழி பெயர்ப்பு 133

01. சிவாகமங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

அறிமுகம்

சிவாகமம் என்பது சமஸ்கிருத மொழிச் சொல். சைவம் சார்ந்தது. "சிவம் என்பது! சிவம் ஆகமம் எனும் இரு சொல்மரபில் உணர்த்தப்படுகின்றது. ஆகமம் என்பது பெயர் வழியிலும், வினைவழியிலும் பொருள் தருவதாக அமை கின்றது.[2] அதன்வழி "ஆகம" எனும் பெயர்ச்சொல் ஆண்பால் சொல் லாகும். இது வருதல், சேர்தல், சேர்த்தல், சொத்தின் சேமிப்பு, விஞ்ஞானம், சாஸ்திரம் (தர்சனம்), வேதம், தர்மசம்பந்தமான நூல் என்று பொருள் தருகின்றது.[3] வினைச் சொல்லின்வழி 'ஆ–கம்,? என்பது (ஆகச்சதி), வர, அருகில் வர, ஒரு இடத்தை அடைய, தெரிந்துகொள்ள எனப் பொருள் தருகின்றது.[4] இதனடிப் படையில் நோக்குகையில் சிவம் சைவ விஞ்ஞான சாஸ்திரம், என்றும் சிவதர்மம் சம்பந்தமான நூல் என்றும் பொருள் கொள்ளலாம். இம்மரபில் சிவனிடமிருந்து வந்த சிவவிஞ்ஞான சாஸ்திரமே சிவாகமம் ஆகின்றது.

சிவாகமங்கள் எத்தனை என்பது பற்றியும் அவை எவ்வாறு தோற்றம் பெற்றன என்பது பற்றியதுமான விடயத்தினை சிவாகமங்களே எடுத்தியம்புகின்றன. அதன் வழி இம்மரபு சமய மரபு சார்ந்த நிலையில் தெய்வீகவியல் வரலாற்று மரபாக கொள்ளப்படுகின்றது. அம்மரபினை சிவாகமங்களின் தந்திராவதாரபடலங்களில் மிகவிரிவுபடக் கூறியிருப் பதனைக் காணலாம்.

சிவாகமங்கள் இரண்டு வகைப்படுகின்றன. அவை மூலசிவாகமங் கள், உபாகமங்கள் என்பதாகும். மூல சிவாகமங்கள் இருபத்தெட்டு.[7] உபாகமங்கள் இருநூற்றேமு என்பதாகும்.

இச்சிவாகமங்கள் எவ்வாறு தோற்றம்பெற்றன என்பதனை அறி வதற்கு சைவசமயம் சார்ந்த நிலையில் முதலில் ஆழமானதும் சாஸ்திரபூர்வ மானதுமான அறிவும் தெளிவும் அவசியமானதாக அமைகின்றது. அதனை நோக்குவோம்.

சதாசிவ வடிவம்

சிவனது வடிவங்கள் மூன்று நிலையில் கொள்ளப்படுகின்றன. அவ்வடிவங்கள் அருவம், உருவம் அருவுருவம் என்பனவாகும். இதில் அருவம் எனும் வடிவம் தோற்றமற்ற வடிவமாகும். அவ்வடிவம் மந்திரத்தால் தோத்தரிக்கவும், தியானத்தால் பாவனை செய்வதற்குமே உகந்தவையாகும். அவ்வடிவமாகும். இவ்வடிவத்தில் எண்ணப்படும் சிவனது வடிவம் சதாசிவ வடிவம் ஆகும்.[12] இவ்வடிவத்தின் பரந்த தன்மை மிக விரிவுபட்ட கருத் தாழத்தை எடுத்தியம்புவதாக அமைகின்றது. இம்மரபை சாதாக்யம் எனும் தன்மையில் சிவாகமங்கள் விரிவுபடக் கூறுகின்றன.[13] சதாசிவவடிவம் பற்றி சிவாகமங்களிலும் சிவாகம சார்பு நூல்களிலும் எடுத்தியம்பப்படுகின்றன.[15] அதன்வழி சதாசிவ தியானம் எவ்வாறு எடுத்தியம்பப்படுகின்றது என்பதனை நோக்குவோம்.

"சுத்தமான படிகநிறமும், முப்பத்திரெண்டு லக்ஷணங்களுடன் கூடியவரும், பத்மாசனமிட்டு இருப்பவரும், ஐந்து முகங்களையுடையவரும், ஒவ்வொரு முகமும் மும்மூன்று கண்களையுடையவரும், இச்சை, ஞானம், கிரியை என்பனவற்றை உணர்த்தும் பரந்த கண்களையுடையவரும், ஞான சந்திகலையைத்தரித்தவரும், (ஐந்து முகங்களில்) ஈசானமும் வெண்மை நிறமும், தற்புருஷமுகம் மஞ்சள் நிறமும், அகோரமுகம் கறுப்பு நிறமும், வாமதேவமுகம் சிவப்பும், சத்யோஜாதருகம் தூய வெண்மையும் உடைய தாகவும், (இம்முகங்கள் முறையே மேலும், கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய திக்குகளை நோக்குவனவாகவும் உடையன), அம்மூர்த்தியானவர் நாகத்தினை உபவீதமாக அணிந்தவரும், சாந்தமானவரும், ஜடையில் சந்திர கலையைத் தரித்தவரும், இடது ஐந்துகைகளில் (மேலிருந்து கீழாக) சக்தி, வாள், சூலம், கட்வாங்கம், வரதம் என்பவைகளையும்; வலது ஐந்துதைகளில் டமருகம், மாதுளம்பழம், நாகம், அக்ஷமாவை, நீலோம்பலம் என்பவைகளை யுடையவராகவும் விளங்குவார்.

நெரிக்கும் புருவங்களையுடையது. பயங்கரமான தோற்றமும் கோரைப்பற்களிரண்டையும் கொண்டிருப்பது. துடிக்கும் உதடுகளையுடைய இம்முகம் மிகவும் பரிபூரணமான காளைப் பருவத்துடன் கூடியிருக்கும். ஐந் தொழில்களுள் இம்முகம் அழித்தல் எனும் செயலைப்புரியும். வடக்கு நோக்

கிய திருமுகம் வாமதேவம் அல்லது வாமம் எனப்படும். இது புதிய பவளத்தின் ஒளியையுடையதாகவும், கரிய வண்டுக்கூட்டம் போன்ற சுருண்ட கூந்தல்களால் பிரகாசிப்பதாகவும், யாவரையும் கவரக்கூடியதாகவும், பார்வதியின் முகம் போன்று தோன்றுவராகவும், கொடிபோன்ற மெல்லிய புருவங்களையுடையதாகவும் தோற்றமளிக்கவும். இம்முகம் கூந்தல் எனும் தொழிலைச் செய்யும். மேற்கு நோக்கிய திருமுகம் சத்யோஜாதல் எனப்படும். இது சந்திர ஒளி பொருந்தியதாகவும், ராஜ லக்ஷணங்களுடன் கூடியதாகவும், சந்திரா பரணம் உடையதாகவும், அசைவற்ற கண்களை யுடையதாகவும் தோற்றமளிக்கும். ஐந்தொழில்களுள் இம்முகம் படைத்தல் எனும் தொழிலைப் புரியும்" என விவரிக்கப்படுகின்றது.

சதாசிவ வடிவத்தின் இயல்புகளை வேறு பலவிதமாகவும் தியான சுலோகங்கள் விபரிக்கின்றன. அதனடிப்படையில் சதாசிவ வடிவம் உயர்தத்துவார்த்தத்தை உணர்த்தும் சூக்ஷ்மவடிவமாகும். 'சதாசிவன் ஐந்து திருமுகங்களும் பத்துக் கரங்களும் உடையவர். ஒவ்வொரு முகத்திலும் மூன்று திருக்கண்கள், வலக்கரங்களில் மேலிருந்து கீழாக முறையே வலது கரங்களில் சூலம், வச்சிரம், கத்தி, பரசு அபயமுத்திரை என்பனவற்றையும்; இடது கரங்களில் மேலிருந்து கீழாக நாகம், பாசம், மணி, அக்கினி, அங்குசம் என்பனவற்றையும் தாங்கியிருப்பவர். பாம்பைப் பூணூலாக அணிந்திருப் பவர். மூன்றாம் பிறைச் சந்திரனால் அலங்கரிக்கப்பட்ட ஐடாமகுடம் உடையவர். சாந்தமான தோற்றத்தினர்" எனக் காமிகாகமம் கூறுகின்றது.[14] சதாசிவம் பெருமானுக்குரிய ஐந்து திருமுகங் களுள் மேல்நோக்கிய திருமுகம் ஈசானம் எனப்படும். இம்முகம் அழகாகவும் தெளிவாகவும் படிகம் போன்று நிர்மலமான ஒளியுடையதாகவும் குழந்தைத் தன்மை உடைய தாகவும் விளங்கும். ஐந்து முகங்களுள் இம்முகம் அருளல் எனும் செயலைப்புரியும். கிழக்கு நோக்கிய திருமுகம் தத்புருஷம் எனப்படும். இம்முகம் உருக்கிய தங்கத்தின் நிறத்தை உடையதாகவும், கம்பீரமாகவும், சாந்தமாகவும், காளைப்பருவத்துடன் கூடியதாகவும் விளங்கும். இம்முகம் ஐந்து முகங்களுள் மறைத்தல் எனும் செயலைப்புரியும். தெற்குநோக்கிய திருமுகம் அகோரம் எனப்படும். இது கருமை நிறமுடையது.

வரதம் என்பனவும், வலது ஐந்துகைகளில் மேலிருந்து கீழாக டமருகம், மாதுளம்பழம், நாகம், அக்ஷமாலை அபயகரம் என்பவை யுடையவராக மணோன்மணியை யுடையவராக விளங்குவார்?

இவ்விதமான சதாசிவ வடிவம் சிவனது இருபத்தைந்து மூர்த்தி பேதங்களும் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தன. அதன்வழி

ஈசான முகத்திலிருந்து சோமாஸ்கந்தர், நடராஜர், விருஷய ரூடர், கல்யாணசுந்தரர், சந்திரசேகர் ஆகியமூர்த்திகள் தோன்றினர்.[16]

தற்புருஷ முகத்திலிருந்து பிக்ஷாடனர், காமதகனர், காலசம்ஹாரர், ஜலந்தரவதர், த்ரிபுராந்தகர் ஆகிய மூர்த்திகள் தோன்றினர்.[17]

அகோர முகத்திலிருந்து கஜசம்ஹாரர், வீரபத்திரர், தக்ஷிணா மூர்த்தி, இராதர், நீலகண்டர் ஆகிய மூர்த்திகள் தோன்றினர்.[18]

வாமதேவ முகத்திலிருந்து சுங்காளர், சக்ரதானர், கஜமுக அனு ரஹர், சண்டேச அனுக்ரஹர், ஏகபாதர் ஆகிய மூர்த்திகள் தோன்றினர்.[19]

சத்யோஜாத முகத்திருந்து லிங்கோத்பவர், சுகாசனர் உமாமகேஸ் வரர், சங்கர நாராயணர், அர்த்த நாரீஸ்வரர் ஆகிய மூர்த்திகள் தோன்றினர்.[20]

எனச் சிவாகமங்கள் தெளிவு படுத்துகின்றன.

மூல சிவாகமங்கள்

சதாசிவ வடிவத்திலிருந்தே சிவாகமங்கள் தோன்றியதாகவோ உபதேசிக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுகின்றன. அதன்வழி நோக்குவோம்.

ஈசான முகத்திலிருந்து

காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம் அஜிதம் என்பன தேற்றம் பெற்றன.[21]

தந்புருஷ முகத்திலிருந்து

தீப்தம், சூக்ஷ்மம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்பன தோற்றம் பெற்றன.[22]

அகோர முகத்திலிருந்து

விஜயம், நிஸ்வாசம், ஸ்வாயம்புவம், அருலம், வீரம் என்பன தோற்றம் பெற்றன.[23]

வாமதேவ முகத்திலிருந்து

ரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகபிம்பம் என்பன தோற்றம் பெற்றன.[24]

சத்யோஜாத முகத்திலிருந்து

புரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என்பன தோற்றம் பெற்றன.[25]

இவ்வாறு தோற்றம் பெற்ற சிவாகமங்கள் சிவகணங்களுக்கும், உருத்திரகணங்களுக்கும் உபதேசிக்கப்பட்டன.[26] அதன்வழி சிவகணங் களுக்கு உபதேசிக்கப்பட்ட சிவாகமங்கள் சிவபேதம் என்றும்,[27] உருத்திர கணங்களுக்கு உபதேசிக்கப்பட்டவை உருத்திரபேதம் என்றும்[28] கொள்ளப் படுகின்றன. அதன் வழி காமிகம் முதல் அப்பிரபேதம் வரையான பத்து (10) மூலசிவாகமங்கள் பிரணவர் முதல் சசிவரையாக ஒவ்வொரு சிவாகமங் களுக்கும் மூவர் வீதம் முப்பது சிவகணங்களுக்கு உபதேசிக்கப்பட்டது.[29] விஜயம் முதல் வாதுளம் வரையான பதினெட்டு (18) மூலசிவாகமங்கள் அநாதிருத்ரர் முதல் மஹாகாளர் வரையாக ஒவ்வொரு சிவாகமத்திற்கும் இருவர் வீதம் முப்பத்தாறு உருத்திரகணங்களுக்கு உபதேசிக்கப் பட்டது.[30]

இம்மூல சிவாகமங்கள் சதாசிவ வடிவத்தின் அங்கமாகக் கொள் ளப்படுகின்றன. அவ்விதமே சிவாகமங்களின் தந்திரவதார படலங்கள் கிரந்த சங்கியைகளையும் கூறுகின்றன.[31]

மூல உபாகமங்களின் பிரிவுகள்

சிவாகமங்களின் மூலசிவாகமங்களும், உபாகமங்களும் சர்யாபாதம், க்ரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் வித்யாபாதம் எனும் நான்கு பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டவையாக விளங்குகின்றன.32 இவற்றுள் க்ரியாபாதம் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு விடயங்களைக் கூறுவனவாக விளங்குகின்றன.[33]

மூல சிவாகமங்களும் உபாகமங்களும்

1. காமிகம் எனும் ஆகமம் பரார்த்தம் எனும் எண்ணிக்கையையுடையது. சதாசிவமூர்த்தியின் இருபாதங்களைச் சுட்டப்படுவது. இவ்வாகமத்தை பிரணவர், த்ரிகலர், ஹரர் ஆகிய மூவரும் கேட்டவர்களாவர். இவ் வாகமத்திற்கு வக்த்தாரம், பைரவோத்தரம், நாரசிம்மம் எனும் மூன்று உபாகமங்கள் உண்டு.[34]

2. யோகஜம் எனும் ஆகமம் லக்ஷம் எனும் கிரந்த சங்கியையுடையது சதாசிவமூர்த்தியின் கணுக் கால்கள் இரண்டுமாகச் சுட்டப்படுவன. இவ்வாகமத்தை சதாக்யர், பஸ்மர், விபு ஆகிய மூவரும் கேட்டவர் களாவர். இவ்வாகமத்திற்கு தாரம், வீணாசிவோத்தரம், ஆத்மயோகம், சந்தம், சந்ததி எனும் ஐந்து உபாகமங்கள் உண்டு.[35]

3. சிந்தியம் எனும் ஆகமம் லக்ஷம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் கால்விரல்களாகச் சுட்டப்படுகின்றன. இவ்வாக மத்தை தீப்தர், கோபதி, அம்பிகா ஆகிய மூவரும் கேட்டவர்களாவர். இவ்வாகமத்திற்கு சுசிந்தியம், சுபகம், வாமம், பாபநாசனம், பரோத்பவம், அம்ருதம் எனும் ஆறு உபாகமங்கள் உண்டு.[36]

4. காரணம். எனும் ஆகமம் கோடி எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் இரு கெண்டைக்கால்களாக சுட்டப்படுகின்றது. இவ்வாக மத்தை காரணர், சர்வர், பிரஜாபதி ஆகிய மூவரும் கேட்டவர்களாவர். இவ்வாகமத்திற்கு பாவனம், மாரணம், தௌர்க்யம், மாஹேந்திரம், பீமசம் ஹிதா, காரணம், வித்வேஷம் எனும் ஏழு உபாகமங்கள் உண்டு.[37]

5. <u>அஜிதம்</u> எனும் ஆகமம் ஆயுதம் எனும் கிரந்தசங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் முழந்தாள் களிரண்டாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை சுசிவர், சிவர், அச்சுதர் எனும் மூவர் கேட்டவர்களாவர். இவ்வாகமத்திற்கு <u>ப்ரபூதம், பிரோத்பூதம், பார்வதீசம்ஹிதா, பத்மசம் ஹிதா</u> ஆகிய நான்கு உபாகமங்கள் உண்டு.[38]

6. <u>தீப்தம்</u> எனும் ஆகமம் நியுதம் எனும் கிரந்தசங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் இரு தொடைகளாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை ஈசர், த்ரிமூர்த்தி, குதாசனர் எனும் மூவர் கேட்டவர்களாவர். இவ்வாகமத்திற்கு அமேயம், அப்தம், ஆச்சாத்யம், அசுங்கியம், அமீதௌஜசம் ஆனந்தம், மாதவோத்பூதம், அத்புதம், அக்ஷயம் ஆகிய ஒன்பது உபாகமங்கள் உண்டு.[39]

7. <u>சூக்ஷ்மம்</u> எனும் ஆகமம் பத்மம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவமூர்த்தியின் குஹ்யமாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை சூக்ஷ்மர், வைஸ்ரவணர், ப்ரபஞ்சனர் எனும் மூவர் கேட்டவர்களாவர். இவ்வாகமத்திற்கு சூக்ஷ்மம் எனும் ஒரு உபாகமம் உண்டு.[40]

8. ஸஹஸ்ரம் எனும் ஆகமம் சங்கம் எனும் கிரந்தசங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் இருப்பாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை காலன், பீமன், தர்மன் எனும் மூவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு அதீதம், மங்களம், சுத்தம் அப்ரமேயம், ஜாதிபாக், ப்ரபுத்தம், விபுதம், ஹஸ்தம், அலங்காரம், சுபோதகம் ஆகிய பத்து உபாகமங்கள் உண்டு.

9. அம்சுமத் எனும் ஆகமம் பஞ்சலக்ஷம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் பிற்பகுதியாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை அம்சு, உக்ரன், ரவி எனும் மூவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு வித்யா புராணதந்த்ரர் வாசவம், நீலலோஹிதம், பிரகரணம், பூததந்திரம், ஆத் மாலங்காரம், காச்யபம், கௌதமம், ஐந்திரம், ப்ராஹ்மம், வாஸிஸ்டம், ஈசாணேத்தரம் ஆகிய பன்னிரெண்டு உபாகமங்கள் உண்டு.[42]

10. சுப்ரபேதம் எனும் ஆகமம் கோடித்ரயம் எனும் கிரந்தசங்கியையுடையது. சதாசிவமூர்த்தியின் தொப்பூழ் ஆகச்சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை

திசேச, கணேச, சசி எனும் மூவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு உபாகமம் இல்லை.[43]

11. விஜயம் எனும் ஆகமம் கோடித்ரயம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் வயிறாகச் சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை அநாதி ருத்ரர், பரமேஸ்வரர் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு உத்பவம், சௌம்யம், அகோரம், ம்ருத்ய நாசனம், கௌபேரம், மஹாகோரம், விமலம், விஜயம் ஆகிய எட்டு உபாகமங்கள் உண்டு.[44]

12. நிஸ்வாசம் எனும் ஆகமம் கோடி எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் இருதயமாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை தசார்ணர், சைவசம்பவர் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு நிஸ்வாசம், நிஸ்வாசோத்தரம், நிஸ்வாசமுகோதயம், நிஸ்வாச நயனம், நிஸ்வாசகாரிகா, நிஸ்வாசகோரம், நிஸ்வாசகுஹ்யம், மந்த்ர நிஸ்வாசம் ஆகிய எட்டு உபாகமங்கள் உண்டு.[45]

13. ஸ்வாயம்புவம் எனும் ஆகமம் சார்த்ததோடி எனும் கிரந்த சங்கியை யுடையது. சதாசிவ கிரந்த மூர்த்தியின் இருமார்புகளாகச் சுட்டப்படு கிறது. இவ்வாகமத்தை நிதனர், பத்மசம்பவர் எனும் இருவர் கேட்ட வராவர். இவ்வாகமத்திற்கு பிரஜாதிமதம், பத்மம் நலினோத்பவம் ஆகிய மூன்று உபாகமங்கள் உண்டு.[46]

'14. அநலம் எனும் ஆகமம் வ்யயுதம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவமூர்த்தியின் கண்ணாகச்சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை வ்யோமர், குதாசனர் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு ஆக்னேயம் எனும் ஒரு உபாகமம் உண்டு.[47]

15. வீரம் எனும் ஆகமம் நியுதம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் கழுத்தாகச் சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை தேஜர், ப்ரஜாபதி எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு ப்ரஸ்தரம், புல்லம், அமலம், ப்ரபோதகம், அமோஹம், மோஹசமயம், சகடகம், சகடாதிகம், பத்ரம், விலேகனம், வீரம், ஹலம், போதபோதகம் எனும் பதின்மூன்று உபாகமங்கள் உண்டு.[48]

16. ரௌரவம் எனும் ஆகமம் அர்புதாஷ்டகம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் இருகாதுகளாகச் சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை பிரம்மனேசர், நந்திகேஸ்வரர் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு காலாக்யம், காலதஹனம், ரௌரவம், ரௌரவோத்தரம், மஹாகாலமதம், ஐந்திரம் ஆகிய ஆறு உபாகமங்கள் உண்டு.[49]

17. மகுடம் எனும் ஆகமம் லக்ஷம் எனும் கிரந்தசங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் தலையாகச் சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை சிவன், மஹாதேவன் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு மகுடம், மகுடோத்தரம் ஆகிய இரு உபாகமங்கள் உண்டு.[50]

18. விமலம் எனும் ஆகமம் லக்ஷத்ரயம் எனும் கிரந்தசங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் தோள்களாகச் சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை சர்வாத்மன், வீரபத்திரன் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு அனந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷபிங்கம், வ்ருஷோதரம், விருஷோத் பூதம், ரௌத்ரம், சுதந்தம், தாரணம், ஆரேவதம், அதிகிராந்தம், அட்டஹாஸம், பத்ரவிதம், அர்ச்சிதம், அலங்கிருதம், விமலம் ஆகிய பதினாறு உபாகமங்கள் உண்டு.[51]

19. சந்திரஞானம் எனும் ஆகமம் கோடித்ரயம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் மார்பாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை அனந்தன், பிரகஸ்பதி எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு ஸ்திரம், ஸ்தாணு, மஹாந்தம், வாருணம், நந்திகேஸ்வரம், ஏகபாதபுராணம், சாங்கரம், நீலருத்ரகம், சிவபத்ரம், சல்பபேதம், ஸ்ரீமுகம், சிவ சாசனம், சிவசேகரம், தேவீமதம் ஆகிய பதினான்கு உபாகமங்கள் உண்டு.[52]

20. முகபிம்பம் எனும் ஆகமம் லக்ஷம் எனும் கிரந்தசங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் முகமாகச் சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை பிரசாந்தன், ததீசி எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு சதுர்முகம், சமஸ்தோமம், பிரதிபிம்பம், அயோகஜம், ஆத்மாலங்காரம், வாயவ்யம் தௌடிகம், துடிநீரகம், குட்டிமம், துலாயோகம், கலாத்யயம், மஹாசௌரம், பட்டசேகரம், நைர்ருதம், மஹாவித்யா ஆகிய பதினைந்து உபாகமங்கள் உண்டு.[53]

21. ப்ரோத்கீதம் எனும் ஆகமம் லக்ஷ்த்ரிதயம் எனும் கிரந்தசங்கியை யுடையது. சதாசிவ மூர்த்தியின் நாக்காகச் சுட்டப்படுகிறது. இவ்வாக மத்தை சூலின், கவசன் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு வாராஹம், கவசம், பாசபந்தம், பிங்கலா மதம், அங்குசம், தண்டதரம், தனுர்தரம், சிவஞானம், விஞ்ஞானம், ஸ்ரீ காலஞானம், ஆயுர்வேதம், தனுர்வேதம், சர்ப்பதம்ஷ்ட்ர விபேதனம், கீதகம், பரதம், ஆதோத்யம் ஆகிய பதினாறு உபாகமங்கள் உண்டு.[54]

22. லலிதம் எனும் ஆகமம் அஷ்டசஹஸ்ரம் எனும் கிரந்த சங்கியை யுடையது. சதாசிவமூர்த்தியின் இரு கன்னங்களைச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை ஆலயன், ருத்ரபைரவன் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு லலிதம், லலிதோத்தரம், கௌமாரம் ஆகிய மூன்று உபாகமங்கள் உண்டு.[55]

23. ஸித்தம் எனும் ஆகமம் சார்த்தகோடி எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவமூர்த்தியின் நெற்றியாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை பிந்து, சண்டேஸ்வரர் எனும் இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு ஸாரோத்தரம், ஔசநசம், சாலபேதம், சசிமண்டலம் ஆகிய நான்கு உபாகமங்கள் உண்டு.[56]

24. ஸந்தானம் எனும் ஆகமம் ஷட்சஹஸ்ரம் எனும் கிரந்த சங்கியை யுடையது. சதாசிவமூர்த்தியின் இரு குண்டலங்களாக சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை சிவநிஷ்டன், சம்சயாயனன் எனும் இருவர் கேட்டவ ராவர். இவ்வாகமத்திற்கு லிங்காத்யக்ஷம், சுராத்யக்ஷம், அமரேஸ்வரம், சங்கரம், அஸம்க்யம், அநிலம், த்வந்த்வம் ஆகிய ஏழு உபாகமங்கள் உண்டு.[57]

25. சர்வோக்தம் எனும் ஆகமம் லக்ஷத்வயம் எனும் கிரந்தசங்கியையுடையது. சதாசிவ மூர்த்தியின் உபவீதமாகச் சுட்டப்படுகிறது. இவ்வாகமத்தை சோம தேவன், நருகிம்ஹன் ஆகிய இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு சிவதர்மேந்தரம், வாயுப்ரோக்தம், திவ்யப்ரேர்தம், ஈசானம், சர்வோத் கீதம் ஆகிய ஐந்து உபாகமங்கள் உண்டு.[58]

26. பாரமேஸ்வரம் எனும் ஆகமம் லக்ஷத்வாதச எனும் கிரந்த சங்கியை யுடையது. சதாசிவ மூர்த்தியின் மாலையாகச் சுட்டப்படுகிறது. இவ்வாக மத்தை ஸ்ரீதேவீ, உசனஸ் ஆகிய இருவர் கேட்டவராவர். இவ்வாகமத் திற்கு மாதங்கம், யக்ஷிணீபத்மம், பாரமேஸ்வரம், புஷ்கரம், சுப்ரயோகம், ஹம்சம், ஸாமான்யம் ஆகிய ஏழு உபாகமங்கள் உண்டு.[59]

27. கிரணம் எனும் ஆகமம் கோடிபஞ்சகம் எனும் கிரந்த சங்கியையுடையது சதாசிவ மூர்த்தியின் அலங்காரங்களாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாக மத்தை தேவதார்க்ஷ்யன், ஸம்வர்த்தகன் ஆகிய இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு காருடம், நைர்ருதம், நீலம், ரூக்ஷம், பானுகம் தேனுகம், காலாக்யம், ப்ரபுத்தம், புத்தம் ஆகிய ஒன்பது உபாகமங்கள் உண்டு.[60]

28. வாதுளம் எனும் ஆகமம் லக்ஷம் எனும் கிரந்த சங்கியையுடையது. சதாசிவமூர்த்தியின் ஆடையாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாகமத்தை சிவன், மஹாகாலன் ஆகிய இருவர் கேட்டவராவர். இவ்வாகமத்திற்கு வாதுளம், வாதுலோத்தரம், காலஞ்ஞானம், ப்ரரோஹிதம், ஸர்வம், தர்மாத்மகம், நித்யம், ஸ்ரேஷ்டம், சுத்தம், மஹாநரும், விஸ்வம், விஸ்வாத்மகம் ஆகிய பன்னிரெண்டு உபாகமங்கள் உண்டு.[61]

இவ்வாறாக மூலசிவாகமங்கள் இருபத்தெட்டும் உபாகமங்கள் இருநூற்றேழும் காணப்படுகின்றன.

உபதேசக்கிரமம்

சிவாகமங்கள் உபதேசக்கிரமத்தில் கையளிக்கப்பட்ட செவிவழி இலக்கியங்களேயாகும். சிவாகமரபில் சிவாகமங்களை அருளிய பெரு மைக்குரியவர் சிவபெருமானேயாவார். சிவபிரானிடமிருந்தே செவிவழி உபதேசமாக சிவாகமங்கள் மானுடரை வந்தடைந்தன. இவ்வாறாக சிவ னிடமிருந்த வந்த உபதேசகிரமத்தையும் அதற்கான உறவினையும் சம்பந்தம் என்பர். அவ்வகையில் இச்சம்பந்தம் ஆறு ஆகும். அவையாவன.

1. பரசம்பந்தம் 2. மஹத் சம்பந்தம் 3. அந்தராள சம்பந்தம்
4. திவ்யசம்பந்தம் 5. திவ்யாதிவ்யசம்பந்தம் 6. அதிவ்ய சம்பந்தம்

என்பனவாகும்.[62] இதன்படி சதாசிவன் சிவாகமங்களை அனந்தேஸ்வரருக்கு உபதேசித்தார். இதனால் இவர்களிருவருக்கிடையான சம்பந்தம் பரசம்பந்தம் ஆகும்.[63] அவ்வாறே அனந்தேஸ்வரருக்கும் ஸ்ரீ கண்டருக்கும் தேவேந்திரனுக்குமிடையே மஹத்சம்பந்தம்,[64] ஸ்ரீ கண்டருக்கும் தேவேந்திரனுக்குமிடையே அந்தராள[65] சம்பந்தம், தேவேந்திரனுக்கும் ரிஷிகளுக்கும் திவ்ய சம்பந்தம்,[66] ரிஷிகளுக்கும் மனிதர்களுக்கும் திவியாதிவிய சம்பந்தம்,67 மனிதருக்கும் மனிதருக்கும் அதிவ்ய சம்பந்தம்[68] என இவை தெளிவுபடுத்தப்படுகின்றன.

இவ்வாறாக சிவனது உபதேசச் சிறப்பினால் செவிவழி இலக்கியமாக விளங்கும் சிவாகமங்கள் சிவனது பஞ்சமுகங்களிலிருந்தும் சிவகணங்களுக்கும் ருத்ரகணங்களுக்கும் உபதேசிக்கப்பட்ட சிறப்பினால் சிவபேதம், ருத்ரபேதம் எனப் பாகுபடுத்தப்படுகின்றன. அதேவேளை இம்மூலசிவாகமங்கள் ஒவ்வொன்றிற்குமாக இருநூற்றேமு உபாகமங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான சிவாகம மரபு பற்றிய தெளிவினையும் விளக்கங்களையும் சிவாகமங்களின் தநதிராவதரபடலங்களே தெளிவாகின்றன.[69]

அதன்வழி சர்யை, கிரியை, யோகம் ஞானம் அல்லது வித்யாபாதம் எனும் பாகுபாட்டினை யுடைய சிவாகமங்கள்[70] கிரியாயதத்தில் கர்ஷணம், பிரிஷ்டை, உற்சவம் பிராயச்சித்தம் எனும் நான்கு வகைகளைக் கூறிநிற்கின்றன.[71] அம்மரபில் முழுமையும் விரிவும் பெற்ற சிவாகமங்களின் மூல நூற் தன்மை மிகவும் பரந்த தன்மையதாக எல்லையற்றது விளங்கி நிற்பதனை தெளிவுபட உணரமுடிகின்றது.

அடிக்குறிப்பு

1. நோக்குக.சைவோத்பத்தி விதிபடலம், சுப்ரபேதாகமம், சர்யாபதம்
2. சம்ஸ்கிருத தமிழ் அகராதி ப.52,
3. மேலது ப.52
4. மேலது ப.52
5. சிவாகமங்களின் தந்திராவதார படலம்
6. காரணாகமம் I.1
7.காரணாகமம் I.1
8.காரணாகமம் I.1
9. காரணகமம் I.11.1
10. காரணாகமம் I.11.2
11. நோக்குக சதாசிவதியானம்
12. மேலது
13. சுப்ரபேதாகமம், யோகபாதம் 3 ஆதாரதேய விதிபடலம்
14. காம்காமம் III (327-334)
15. பரார்த்த சிவாலய நிதியது வதி
16. சிவாலயத் திருமேனிகள், ப.10
17. மேலது ப.10
18. மேலது ப.10
19. மேலது ப.10
20. மேலது ப.10
21. மகுடம், 1, 1.84
22. மேலது 1.1.85
23. மேலது 1.85
24. மேலது 1.86
25. மேலது 1.86
26. மேலது 1.1.29,30
27. மேலது 1.1.31-36
28. மேலது 1.1.36-41
29. மேலது 1.1.32
30. மேலது 1.1.36-40
31. மேலது 1.1.95 - 102 (அங்கம்), மேலது 1.87-94 (இரந்த சங்கியை)
32. நோக்குக ஶ்ரீமத் கிரணாகமமஹாதந்திரம்
33. நோக்குக. காரணாகமம் (பூர்வபாகம்)
34. மடுடாகமம் 1.1.49
35. மேலது 1.1.50

36. மேலது 1.1.51
37. மேலது 1.1.52
38. மேலது 1.1.53
39. மேலது 1.1.54
40. மேலது 1.1.55
41. மேலது 1.1.55, 56
42. மேலது 1.1.57, 58
43. மேலது 1.1.59
44. மேலது 1.1.59, 60
45. மேலது 1.1.60 – 62
46. மேலது 1.1.62
47. மேலது 1.1.63
48. மேலது 1.1.63, 64
49. மேலது 1.1.65, 66
50. மேலது 1.1.66
51. மேலது 1.1.67, 68
52. மேலது 1.1.69–71
53. மேலது 1.1.71–73
54. மேலது 1.1.74–76
55. மேலது 1.1.76, 77
56. மேலது 1.1.78
57. மேலது 1.1.79
58. மேலது 1.1.80, 81
59. மேலது 1.1.81
60. மேலது 1.1.81
61. மேலது 1.1.82, 83
62. சைவபூஷணம் (1925), ப.164, 165
63. மேலது ப.164
64. மேலது பக்.164, 165
65. மேலது ப.165
66. மேலது ப.165
67. மேலது ப.165
68. மேலது ப.165
69. நோக்குக. சிவாகமங்களின் தந்திராவதாரபடங்கள்
70. நோக்குக. உதாரணமாக சுப்ரபேதாகமம்
71. நோக்குக. உதாரணமாக காரணாகமம், பூர்வம், உத்தரம்
விபரங்கள் பின்னிணைப்பு 01ல் இணைக்கப்பட்டுள்ளது

காரணாகமம் கூறும் மூலாகம உபாகம உபதேச விபரங்கள்

	பேதம்	முகம்	கிரந்த எண்	அங்கம்	கேட்டோர்	உபாகமம்	
1. காமிகம்	சிவபேதம்	சத்யோஜாதம்	பரார்த்தம்	பாதம்	ப்ரணவர், த்ரிகாலர், ஹரர்,	வக்தாரம், பைரவோத்தரம், நாரசிம்மம்,	03
2. யோகஜம்			லக்ஷம்	கணுக்கால்	சதாக்கியர், பஸ்மர், விபு,	தாரம், வீணாசிரோத்தரம், ஆத்மயோகம், சந்தம், சந்ததி	05
3. சிந்தியம்			லக்ஷம்	கால் விரல்	தீப்தர், கோபதி, அம்பிகா	சுசிந்தியம், சுபகம், வாமம், பாபநாசம், பரோத்பவம், அம்ருதம்	06
4. காரணம்			கோடி	ஜானு	காரணர், சர்வர், ப்ரஜாபதி	பாவனம், மாரணம், தௌர்க்கியம், மாஹேந்திரம், பீமசம்ஹிதா, காரணம், வித்வேஷம்	07
5. அஜிதம்			அயுதம்	முழங்கால்	சுசிவர், சிவர், அச்சுதர்,	ப்ரபூதம், பரோம்பூதம், பார்வதீசம்ஹிதா, பத்மசம்ஹிதா	04
6. தீப்தம்		வாமதேவம்	நியுதம்	தொடை	ஈசர், திருமூர்த்தி, குதாசனர்	அமேயம், அப்தம், ஆச்சாத்யம், அசங்கியம், அமிதௌஜசம், ஆனந்தம், மாதவோத்பூரம், அற்புதம், அக்ஷயம்	09
7. சூக்ஷ்மம்			பத்மம்	குஹ்யம்	சூக்ஷ்மர், வைஸ்ரவணர், ப்ரபஞ்சனர்	சூக்ஷ்மம்	01
8. ஸஹஸ்ரம்			சங்கம்	இடுப்பு	காலன், பீமன், தர்மன்	அதீதம், மங்களம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக், ப்ரபுத்தம், விபுதம், ஹஸ்தம், அலங்காரம், சுபோதகம்	10
9. அம்சுமான்			5 லக்ஷம்	பிற்பகுதி	அம்சு, உக்ரன், ரவி	வித்யாபுராணதந்த்ரம், வாசவம், நீலலோஹிதம், பிரகரணம், பூததந்திரம், ஆத்மாலங்காரம், காச்யபம், கௌதமம், ஐந்திரம், ப்ராஹ்மம், வாஸிஷ்டம், ஈசானோத்தரம்	12
10. சுப்ரபேதம்			3 கோடி	தொப்புழ்	திசேசர், கணேசர், சசி,		00
11. விஜயம்	ருத்ர பேதம்	அகோரம்	3 கோடி	வயிறு	அனாதிருத்ரர், பரமேஸ்வரர்,	உத்பவம், சௌம்யம், அகோரம், ம்ருத்ய நாசனம், கௌபேரம், மஹாகோரம், விமலம், விஜயம்	08
12. நிஸ்வாசம்			கோடி	இதயம்	தசார்ணர், சைல சம்பவர்	நிஸ்வாசம், நிஸ்வாசோத்ரம், நிஸ்வாசமுகோதயம், நிஸ்வாசநயனம், நிஸ்வாசகாரிகா, நிஸ்வாசகோரம், நிஸ்வாசகுஹ்யம், மந்த்ர நிஸ்வாசம்	08
13. ஸ்வாயம்புவம்			அரைக்கோடி	மார்பு	நிதனர், பத்மசம்பவர்	பிரஜாபதிமதம், பத்மம், நலினோத்பவம்	03
14. ஆக்நேயம்			வ்யயுதம்	கண்	வ்யோமர், குதாசனர்	ஆக்னேயம்	01
15. வீரம்		தத்புருஷம்	நியுதம்	கழுத்து	தேஜர், ப்ரஜாபதி	ப்ரஸ்தரம், புல்லம், அமலம், ப்ரபோதகம், அமோஹம், மோஹசமயம், சகடகம், சகடாதிகம், பத்ரம், விலேகனம், வீரம், ஹலம், மோகபோதகம	13
16. ரௌரவம்			அற்புதாஷ்டகம்	காது	ப்ரம்ம நேசர், நந்திகேஸ்வரர்	காலாக்யம், காலதஹனம், ரௌரவம், ரௌரவோத்தரம், மஹாகாலமதம், ஐந்திரம்	06
17. மகுடம்			லக்ஷம்	தலை	சிவன், மஹாதேவர்	மகுடம், மகுடோத்தரம்	02
18. விமலம்			3 லக்ஷம்	தோள்	சர்வோத்தமன், வீரபத்ரர்	அனந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷலிங்கம், வ்ருஷோதரம், விருஷோத்பூதம், ரௌத்ரம், சுதந்தம், தாரணம், ஆரேவதம், அதிக்ராந்தம், அட்டஹாஸம், பத்ரவிதம், அர்ச்சிதம், அலங்க்ருதம், விமலம்	16
19. சந்திரஞானம்			3 கோடி	மார்பு	அனந்தர், ப்ரஹஸ்பதி	ஸ்திரம், ஸ்தாணு, மஹாந்தம், வாருணம், நந்திகேஸ்வரம், ஏகபாதபுராணம், சாங்கரம், நீலருத்ரகம், சிவபத்ரம், சல்பபேதம், ஸ்ரீமுகம், சிவசாசனம், சிவசேகரம், தேவீமதம்	14
20. முகபிம்பம்		ஈசானம்	லக்ஷம்	முகம்	ப்ரசாந்தர், ததீசி	சதுர்முகம், சம்ஸ்தோமம், பிரதிபிம்பம், அயோகஜம், ஆத்மாலங்காரம், வாயவ்யம், தௌடிகம், தாடிநீரகம், குட்டிடட், துவயோகம், கலாத்யயம், மஹாசௌரவம், பட்டசேகரம், நைர்ருதம், மஹாவித்யா	15
21. ப்ரோத்கீதம்			3 லக்ஷம்	நாக்கு	சூலின், கவஜன்	வாராஹம், கவசம், பாசபந்தம், பிங்கலாமதம், அங்குசம், தண்டதரம், தனுர்தரம், சிவஞானம், விஞ்ஞானம், ஸ்ரீகாலஞானம், ஆயுர்வேதம், தனுர்வேதம், சர்ப்ப தம்ஷ்ட்ர விபேதனம், கீதகம், பரதம், ஆதோத்யம்	16
22. லலிதம்			எண்ணாயிரம்	கன்னம்	சூலயன், ருத்ரபைரவர்	லலிதம், லலிதோத்ரம், கௌமாரம்	03
23. சித்தம்			அரைக்கோடி	நெற்றி	பிந்து, சண்டேஸ்வரர்	ஸாரோத்தரம், ஔசநசம், சாலபேதம், சசிமண்டலம்	04
24. சந்தானம்			ஆறாயிரம்	தோடு	சிவநிஷ்டன், சம்ச பாயனன்	லிங்காத்யக்ஷம், சுராத்யக்ஷம், அமரேஸ்வரம், சாங்கரம், அஸம்க்யம், அநிலம், த்வந்தவம்	07
25. சர்வோக்தம்			2 லக்ஷம்	உபவீதம்	சோமதேவன், நருசிம்மர்	சிவதர்மோந்தரம், வாயுப்ரோக்தம், திவ்யப்ரோக்தம், ஈசானம், சர்வோத்கீதம்	05
26. பாரமேஸ்வரம்			12 லக்ஷம்	மாலை	ஸ்ரீதேவி, உசினஸ்	மாதங்கம், யக்ஷிணீபத்மம், பாரமேஸ்வரம், புஷ்கரம், சுப்ரயோகம், ஹம்சம், ஸாமான்யம்	07
27. கிரணம்			5 கோடி	அலங்காரம்	தேவதார்க்ஷ்யன், சம்வர்த்தகர்	காருடம், நைர்ருதம், நீலம், ரூக்ஷம், பானுகம், தேனுகம், காலாக்யம், ப்ரபுத்தம், புத்தம்	09
28. வாதுளம்			1 லக்ஷம்	ஆடை	சிவன், மஹாகாளன்,	வாதுளம், வாதுலோத்தரம், காலக்ஞானம், ப்ரரோஹிதம், ஸர்வம், தர்மாத்மகம், நித்யம், ஸ்ரேஷ்டம், சுத்தம், மஹாநநம், விஸ்வம், விஸ்வாத்மகம்	12 207

02. சிவாகமங்களின் இன்றைய நிலையும் பதிப்பு முயற்சியும்

சிவாகமங்கள் சிவதீக்ஷை, உபதேசம், குருமரபு எனும் தன்மையில் உபதேசக்கிரமமாக கையளிக்கப்பட்ட மரபுகளையே சிவாகமங்கள் எடுத்தியம்புகின்றன. இவ்வகையில் பரந்துவிரிந்த சிவாகமங்களின் உள்ளடக்கமும், பரந்ததன்மையும், கலைச்சொற்பயன்பாடும், அவசியமும் ஓர் கட்டமைக்கப்பட்ட தன்மையிலேயே கையளிக்கப்பட்டதுடன் பயன்பாட்டிலும் இருந்துவந்தது. இந்திய சமுதாயத்தின் பண்பாட்டு மரபில் வைதிக சைவம் எனும் தன்மையும், சிறப்பாக தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் சிவாகமப் பண்பாடும் சிறப்புற்று விளங்கின. விந்தியமலையினை வடக்கெல்லையாகக் கொண்டு பரவிய சித்தாந்த சைவமரபிற்கு சிவாகமங்களே அடித்தளமாக விளங்கின. புராணச் செல்வாக்குகளும், மரபுகளும், ஐதீகங்களும் கொண்ட சிவாலயங்களும் ஏனைய வழிபாட்டு மரபுகளும் ஒழுங்கமைக் கப்பட்டன. அவ்வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட கிரியைமரபு, கட்டடம், சிற்பம், ஓவியம், சமயம், தத்துவம், நகர அமைப்பு, கிராம அமைப்பு சமூக நம்பிக்கைகள் மற்றும் இன்னோரன்ன தன்மைகளுக்கு சிவாகமங்களும் சிவாகமம் சார்ந்த நூல்களுமே அடிப்படையாக விளங்கின. அத்தகைய சிவாகமங்களை அழியாது பாதுகாக்கவும், அதேவேளை அதிற்கூறப்பட்ட விடயங்களை சமுதாயத்தவர்கள் விளங்கிக்கொள்ளவும் பெரிதும் ஆர்வம் கொண்டவேளை சிவாகமங்களின் உள்ளடக்கம் கொண்டு விளங்கிய சமஸ்கிருத மொழி மரபும், சிவாகமங்களுக்கேயுரிய கட்டமைப்பும், சிவாகமங்களின் கலைச் சொல்மரபும் சிவாகமங்களை அணுகவும், பொருள் விளக்கம் கொள்ளவும், பெற்றுக்கொள்ளவும் பெருந்தடையாக அமைந்தன. அத்தகைய சந்தர்ப்பத்தில் கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதியிலும் சிவாகமங்கள் பதிப்பிக்கத்தக்க தன்மையைப் பெற்றுக்கொண்டன.

சிவாகமங்கள் விந்தியமலைக்கு தெற்கே தென்னிந்திய பிரதேசத்து சைவசமுதாய மூல நூலாக விளங்கியதன் சிறப்பால் சிவாகமப் பண்பாடு

தனித்துவம் மிக்கதாகப் பேணப்பட்டது. சமுதாய மாற்றம் சிவாகம மரபை வெளிப்படுத்திக் கொண்டுவரவேண்டிய தேவையை உணர்ந்தது. இந்நிலையில் மேலை நாட்டால் இந்திய சமுதாயத்தில் பண்பாடு, புராதன இலக்கியம் என்பவை மீது கொண்ட ஆர்வம் தனித்துவம் மிக்கதாகக் காணப்பட்டது. எனினும், அத்தகைய ஆர்வம் சிவாகமங்களை அணுகுவதற்கு பெருந் தடையாகவும் அமைந்தது எனலாம். இந்நிலையில் கி.பி 19ம் நூற்றாண்டின் இறுதியில் சிவாகமங்களை நூலுருவம் பெற வைப்பதில் ஒருவகையான மாற்றத்தினையும் மறுமலர்ச்சியினையும் ஏற்படுத்தியவர் மயிலை கொ.ஷண்முக சுந்தர முதலியார் அவர்களே ஆவார். இவர், மிகுந்த முயற்சியுடன் தமிழ்க்கருத்துரையுடன் முதன்முதலில் வெளியிட்ட நூல் காமிகாகமம் பூர்வபாகம் ஆகும். அத்துடன் காமிகாகமம் உத்தரபாகம், காரணாகமம் பூர்வபாகம், காரணாகமம் உத்தரபாகம், மிருகேந்திர ஆகமம் வியாக்யானத்துடன், குமாரதந்திரம், சகலாகம சாரசங்கிரகம், ஆகிய நூல்களும், சித்தாந்த சாராவளி, அகோரசிவாச்சாரியாரின் பத்ததிகள், பிரதிஷ்டா அஷ்டாதச கிரியாவளி, சிவஞானபோத விருத்தி, தேவீகாலோத்தர விருத்தி எனும் சமஸ்கிருத மொழி மூலத்தில் அமைந்த நூல்களை பல்லவ கிரந்த வரிவடிவத்தில் மிகுந்த முயற்சியுடன் பதிப்பித்து வெளியிட்டு வைத்த பெருமை தனித்துவமுடையதும், முதன்முயற்சியுமாகும் இந்நிலையின் சிவாகமப்பயன்பாட்டு ஆர்வலர்களிடையே ஓர் மறுமலர்ச்சியையும், விழிப் புணர்வையும் ஏற்படுத்தியது.

சிவாகமங்களையும் சிவாகம சார்பு நூல்களையும், பத்ததி நூல்களையும் சுவடி வடிவிலிருந்து அழியாது பாதுகாக்கவேண்டும் எனும் எண்ணமும் முயற்சியும் விரிவுபெற்றன. இத்தகைய முயற்சியின் வெளிப்பாடாக உருவாகிய சங்கமாகவே தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் தோற்றம் பெற்றது.

சுவடிகளாகவும், கையெழுத்துப் பிரதிகளாகவும் ஒழுங்கமைக்கப் படாது விளங்கிய சிவாகமம், மற்றும் சிவாகமச் சார்புடைய நூல்களை வெளியிட்டுவைக்கும் மரபில் நிறுவனம் சார்ந்த செயற்பாடுகளைவிட தனித்தனியான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய முயற்சி களின் வெளிப்பாட்டில் சிவாகமம் மற்றும் சிவாகமம் சார்ந்த நூல்மரபுகள்

பல வெளிக் கொணர வேண்டியதன் அவசியத்தையும், ஆய்வுசெய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து தென்னிந்தியாவின் பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனத்தைச் சார்ந்த N.R.பாட் என்பவரின் தலைமையில் சிவாகமங்கள் பலவற்றையும் பத்ததி நூல்களையும் ஒன்றுதிரட்டும் பணியில் ஈடுபட்டதோடு சிவாகமங்களை ஆய்வு நூலாகப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அதன் விளைவாக அழிந்துபோன நிலையிலுள்ள பல்வேறு சிவாகமம், சிவாகமம் சார்ந்த நூல்கள் மற்றும் கிரியை நூல்கள் பாதுகாக்கப்பட்டன. இத்தகைய முயற்சியின் விளைவாக சிவாகமங்கள் ஓர் ஆய்வியல் சார்ந்த நிலையில் உயரிய இடத்தைப் பெற்றது. இதன் விளைவாக சிவாகமங்களும் மற்றும் சிற்ப சாஸ்திர நூல்கள் மற்றும், சிவாகமச் சார்பு நூல்கள், பத்ததிகள் தத்துவ நூல்கள் போன்றன மூல நூலாகவும் மொழிபெயர்ப்புடனும், கருத்துரைகளுடனும், வெளியிடப் பட்டன. அம்முயற்சியில் தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின் முயற்சிகளும் பெரிதும் உதவியாக அமைந்தன.

தென்னிந்தியர் அர்ச்சகர் சங்கத்தின் செயற்பாட்டில் 1970களில் சிவாகமங்கள் மற்றும் பத்ததி நூல்களின் பதிப்பு முயற்சி ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இச்சங்கத்தினரின் முயற்சியினூடாக குமார தந்திரம், காமிசம் பூர்வம் உத்தரம் சகலாகம சாரசங்கிரகம் ஆகிய நூல்கள் தேவநாகரி லிபிடால் வெளியிடப்பட்டன. அதேபோல் காமிகம் பூர்வபாகம் தமிழ் சதகையுடனும், மகுடாகமம் (பூர்வபாசம்) மூலம் மாத்திரமும் வெளி யிடப்பட்டன. இதற்கிடையில் சிவாகமம் சார்ந்த நூல்களில் சித்தாந்த சேகரம், வாதூளசுத்தம் முதலிய நூல்கள் தேவநாகரி பியிலினால் பதிப்பிக்கப்பட்டன. இவற்றையடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் பின்வரும் வகையீடு களில் சிவாகமப்பதிப்பு முயற்சிகளை நோக்கலாம்.

1. மயிலை கொ.ஷண்முகசுந்தர முதலியார்
2. மயிலை அழகப்ப முதலியார்
3. தேவகோட்டை சிவாகம சைவசித்தாந்த பரிபாலன சங்கம்
4. பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்
5. தென்னிந்தியன் அர்ச்சகர் சங்கம்

என்பன மிகுந்த முக்கியத்துவமுடையனவாகின்றன.

இத்தகைய முயற்சிகளின் உயர்பயனாக அல்லூர் விஸ்வராத சிவாச்சாரியர் கறியர் காமிகாகமம் பூர்வபாகம், உத்தரபாகம், குமாரதந்திரம் ஆகியனவற்றிற்கு தமிழ் பொழிப்புரையுடனான மொழி பெயர்ப்புடனும் காரகமம் பூர்வபாகத்தையும் பதிப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட இலங்கையிலும், இந்தியாவிலும் பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப பிரயோக பத்ததிகள் பல பதிப்பிக்கப்பட்டுள்ளமை சிவாகம மரபின் தொடர்ச்சியென்றே கருதப்படுகின்றது.

தென்னிந்தியாவின் இத்தகைய மரபுகளுக்கு மேலாக அடையார் நூலகமும் ஆய்வு நிறுவனம், பங்களூர் கல்பதரு ஆய்வு நிறுவனம், மயிலாபூர் குப்புசுவாமி சாஸ்திரிகள் ஆய்வு நிறுவனம் என்பனவற்றின் சிவாகமம் சார்ந்த மரபுகளின் தொகுப்பு, பதிப்பு, ஆய்வு, கருத்தரங்கு முயற்சிகள் தனித்துவம் மிக்கனவாக அமைகின்றன.

இவ்வாறாக நோக்குமிடத்து சிவாகமக் கல்வி மரபு குறைந்த நிலையில் விளங்குவதனையும் மூலசிவாகமங்களின் பதிப்புமுயற்சிகள் காலத்திற்கு ஏற்றவகையில் ஆய்வுமுறையியல்களுடன் மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்புமுயற்சிகள் ஏற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துவனவாக அமைகின்றன.

03. சிவாகமங்களின் மொழிநடையும் உரைமரபும்

சிவாகமங்களின் மொழிநடை

சம்ஸ்கிருதமொழியில் அமைந்த கலைக்களஞ்சியங்களாகச் சிவாகமங்கள் திகழ்கின்றன. சிவாகமங்கள் சுலோக அமைப்பில் விளங்கு வன. அனுஷ்டுப் சுலோக அமைப்பில் விளங்குவன. சிவாகமங்களில்மரபு நிலை சார்ந்ததும், கலைச்சொல் மரபு சார்ந்ததுமான சொற்கள் பல கையாளப்படுகின்றன. சிறப்பாக சிவாகமங்களின் பின்புலத்தில் இதி ஹாசங்கள் புராணங்களுடனான உறவுகளும் செல்வாக்குகளும் சிவாகம மொழி நடையில் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றன.

சிவாகமங்களைப் புரிந்து கொள்வதற்கு புராணங்களின் அறிவு அவசியமாகின்றது. சிவாகமங்களின் சமய, பண்பாட்டு, கிரியை மரபு களுடன் நெருங்கிய உறவினைப் புராணங்களே வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வகையில் புராணங்களினுடைய மொழிநடையின் செல்வாக்கும் புராணங்களின் விடயப்பரப்புக்களின் செல்வாக்கும் சிவாகமங்களில் அதிகம் காணப்படுகின்றன. சிறப்பாகத் திருவுருவங்கள் மற்றும் லக்ஷணங்கள், அங்க அமைதிகள், ஆடைகள், அணிகலன்கள், ஆயுதங்கள் போன்றன பற்றி சிவாகமங்கள் எடுத்துக்கூறும் விடயங்கள் அனைத்திற்கும் புராணங்களே விடை பகிர்வனவாக உள்ளன. இவை புராண மரபில் தெய்வீகவியல் வரலாறுகளாகின்றன[1].

அவ்விதமே விரதங்கள் பற்றிய விடயங்களில் அவை தோற்றம் பெற்ற மரபுகளைப் புராணங்களே கதைளாகக் கூறுகின்றன. சிவாகமங்கள் பூஜைமுறைகளை மிகச்சிறப்பான தன்மைக்கு விளக்கமுற்படுவதனை அவதானிக்கலாம். இவற்றினூடாக நோக்குகையில் சிவாகமங்கள் விளக்கம் பெறுவதற்கும் வளம் பெறுவதற்கும் புராணங்களே அடித்தளம் என்பதனைத் திட்டவட்டமாகக் கூறமுடிகின்றது[2].

சிவாகமங்களின் மொழிமரபிற்கும், புராணங்களின் மொழி மரபுக்கு மிடையே மிக நெருங்கிய உறவு காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலை யில் சிவாகமங்களினையும் சிவாகமப் பண்பாட்டு அம்சங்களையும் விளக்கு வதற்கென்று எழுந்த நூல்களே புராணங்கள் என்றுகூடக் கூறலாம்.

சிவாகமங்களின் மொழி மரபில் கடினமற்ற சொன்மரபும் காணப் படுகின்றது. அதிகம் அணிகள், அலங்காரங்கள், சமாசங்கள் அற்றதும் சிறப் பாக அசைச்சொற்களற்றதுமான மொழிப் பயன்பாடு காணப்படுகின்றன.[3] சமுதாய வழக்கில் தொன்றுதொட்டு பேணப்பட்டுவந்த வழக்காறுகளே சிவாகமங்களில் பதிவுசெய்யப்பட்ட விடயங்களாகவும் காணமுடிகின்றது. இந்நிலையில் உபதேச மரபில் கேள்விகளுக்கு விளக்கமளிக்கும் தன்மை யில் சிவாகமங்கள் சிறப்பாக, புராணங்களை நிகர்த்தவையாகவே காண விளங்குகின்றன.

சிவாகமங்களின் சொற்பயன்பாட்டில் பல்வேறுபட்ட கலைச்சொல் மரபுகள் அவ்வாறே கையாளப்படுகின்றன. அவை சிவாகமங்களுக்கும் சிற்ப சாஸ்திரங்களுக்குமுரிய சொன்மரபாகவும், சிவாகம மரபில் கிரியைகளுக் கான தனிச்சொன்மரபாகவும், சில தனித்துவம் மிக்க கலைச்சொற்களாகவும் விளங்குவதனையும் இனம்காண முடிகின்றது. அதேவேளை சிவாகமங் களுக்கான சில தனித்துவம் மிக்க அடையாளங்களையும் இனம் காண முடிகின்றது. சிறப்பாக பிரதிமாலக்ஷண மரபில் சிற்பசாஸ்திர மரபின் தாக்கமும் செல்வாக்கும் சிவாகம மரபில் பிரதிபலித்து நிற்பதனையும், அதேபோல் யோகபாத, ஞானபாத மரபில் சிறப்பாக யோகக்கலைச்சொல் கையாடலும் சைவசித்தாந்த சொன்மரபின் கையாடலும் தனித்துவம் மிக்க அடையாளங்களாக சிவாகமங்களில் சிதறிக்கிடக்கும் தன்மைகளை சிவாகமங்களின் மொழிமரபின் கோலங்களாக இனம்காணுவது தனித்துவ மான தன்மையாகின்றன.

சிவாகமமரபில் கலைக் களஞ்சியங்களாக விளங்கும் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், புவியியல், சோதிடம், பொறியியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், உயிரியல், மருத்துவவியல், ஒலியியல், மொழியியல், யாப்பியல், இலக்கணவியல், அணியியல் எனப்

பல்வேறுபட்ட விடயங்கள் மிகப்பரந்த நோக்கில் எடுத்தியம்பப்படுகின்றன. அவ்வேளை சிவாகமங்களில் சமயம், தத்துவம், வாழ்வியல் போன்ற அம்சங்கள் கலைமரபுகள் என்பன தனித்துவம் மிக்கவையாக அமைகின்றன.

சிவாகமங்களை இலக்கணங்களாகக் கொள்ளும் சமய மரபில் திருக்கோவில்கள் இலக்கியங்களாக அமைகின்றன. அத்தகைய மரபுகளைச் சிவாகமங்கள் பிரதிபலித்துக் காட்டுவனவாக விளங்குகின்றன.

சிவாகமங்களின் உரைமரபு

சிவாகமங்களின் பொருள் மரபினைத் தெளிவுபடுத்தும் நோக்கில் எழுந்தனவே உரைமரபுகளாகும். பொதுவாக உரை என்பதனுடைய தேவை இரண்டுவிதமான பொருள் விளக்கத்தைத் தருகின்றன. ஒன்று வாசகர் நினைக்கும் கருத்து தெளிவற்றதாக அமையவேண்டும் என்பதனையும், இரண்டாவதாக பரந்தபண்பாட்டு மரபுகளுடனேயே சிவாகமங்களின் பொருள் விளக்கங்களைக் கொள்ளலாம் என்பதனையும் நோக்கலாம். அதேவேளை சிவாகமங்கள் கூறும் பொருளை, சமுதாயம் சரியான வழியில் புரிந்துகொள்ளாதுபோதலை மறுத்துத் தெளிவுபடுத்தும் நோக்கில் எழுந் தனவாகவும் கருத இடமுண்டு.

சிவாகமங்களுக்கு சாஸ்திரம் எனும் நிலையிலும், சூத்திரம் எனும் நிலையிலும் மூலநூட் பொருட்கள் கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் சாஸ்திரம் என்றால் என்ன? என்பதனை,

शास्त्रलक्षणम्

प्रवृत्तिर्वा निवृत्तिर्वा नित्येन कृतकेन वा
पुंसां येनोपदिश्येत तच्छास्त्रमभिधीयते ॥

என சாஸ்திரலக்ஷணம் விளக்குகின்றது. அது எவ்வாறெனில்; 'மன ஈடுபாட்டுடன் இருந்ததாகவோ மன ஈடுபாடற்றதாகவோ நாளாந்தத் தன்மை யில் செயற்படத்தக்கவகையில் உருவாக்கப்பட்டதாகவோ எந்த மனிதரால் எது வழிகாட்டப்படுகின்றதோ அதனைச் சாஸ்திரம் என்று அறிந்துகொள்ள வேண்டும்' எனக் கூறப்படுகின்றது. பொதுவாக சாஸ்திரம் என்பது கட்டளை, விதி, விஞ்ஞானம் என அகராதிகள் பொருள்கொள்கின்றன.[4]

இவ்வகையில் சிவாகமங்கள் சைவ சமயம் சார்ந்த சாஸ்திரங்களாகவே கொள்ளப்படுகின்றன. எனினும், சிவாகமம் என்பது எத்தகைய தன்மையது என்பதனை நோக்குகையில்,

आगतं पञ्चवक्त्रात्तु गतं च गिरिजानने ।
मतं च वासुदेवस्य तस्मादागममुच्यते ॥
सृष्टिश्च प्रलयश्चैव देवतानां तथार्चनम् ।
साधनं चैव सर्वेषां पुरश्चरणमेव च ॥
षट्कर्मसाधनं चैव ध्यानयोगश्चतुर्विधः ।
सप्तभिर्लक्षणैर्युक्तं त्वागमं तद्विदुर्बुधाः ॥

'சிவனது ஐந்து முகங்களிலிருந்தும் பெறப்பட்ட இவ்வாகமங்கள் கிரிஜா ஆகிய பார்வதியினுடைய வாயைச் சென்றடைந்தன. பின்னர் வாசுதேவனுடைய எண்ணமாக வெளிப்பட்டதன் காரணத்தினால் அவை ஆகமம் என்று கூறப்படுகின்றது' என பத்மசம்ஹிதையை மேற்கோள்காட்டி விளக்கப்படுத்தப்படுகின்றது.[5]

பொதுவாக ஆகமம் என்பது சம்ஹிதை, தந்திரம், எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அதனை பௌஷ்கர சம்ஹிதை தெளிவுபடுத்துகையில்,

द्विषट्सहस्रपर्यन्तं संहिताख्याख्यं सदागमम् ।
ये चान्ये चान्तराला वैशास्त्रार्थेनाधिका शतैः ॥
सर्वेषां संहितासंज्ञा बोद्धव्या कमलोद्भव ॥

'பன்னிரெண்டாயிரம் சுலோகங்கள் வரையான கொள்ளளவைக் கொண்ட ஆகமம் சம்ஹிதை என அழைக்கப்படும். இதற்கு மேலாக உள்ளடக்கத்தினையுடையவை சாஸ்திரங்கள் எனும் பொருளில் நுணுக்கு அதிகமாக உள்ளன. விரம்மனே! இவை அனைத்தும் சம்ஹிதை என்பதனை அறிந்து கொள்ளவேண்டும்! எனக் கூறுவது கருத்தில் கொள்ளத்தக்கது.[6]

தந்திரம் என்பது எத்தகைய உள்ளடக்கமுடையது என்பதனை சப்தார்த்த சிந்தாமணி எனும் நிகண்டு தெளிவுபடுத்துகையில்;

सर्गश्च अतिसर्गश्च मन्त्रलक्षणमेव च ।
देवतानां च संस्थानं तीर्थानां चैव वर्णनम् ॥
तथैवाश्रमधर्मश्च मन्त्रसंस्थानमेव च ।
संस्थानं चैव भूतानां यन्त्राणां चैव निर्णयः ॥
उत्पत्तिर्विबुधानां च तरुणां कल्पसंज्ञितम् ।
संस्थानं ज्योतिषां चैव पुराणाख्यानमेव च ॥
कोषस्थ कथनं चैव व्रतानां परिभाषणम् ।
शौचाशौचस्य चाख्यानं नरकाणां च वर्णनम् ॥
हरचक्रस्थ चाख्यानं स्त्रीपुंसोश्चैव लक्षणम् ।
राजधर्मोदानधर्मो युगधर्मस्तथैव च ॥
व्यवहारः कथ्यते च तथाचाध्यात्मवर्णनम् ।
इत्यादि लक्षणैर्युक्तं तन्त्रमित्याभिधीयते ॥

'உலகின் படைப்பு, உலகின் மீள்படைப்பு, மந்திரலக்ஷணம், தேவதைகளுடைய ஸ்தாபனம், தீர்த்தங்களின் வர்ணனை, அவ்விதமே ஆச்சிரம தர்மங்கள், மந்திரங்களின் நிர்ணயம், தேவர்களின் தோற்றம், மரங்களின் கல்பம், ஜோதிஷங்களின் ஸ்தானம், இவ்விதமே புராணங்களின் விளக்கம், செல்வம் தோன்றியிருக்கும் கதை, அவ்விதமே விரதங்களின் கலைச்சொல் விளக்கம், சுத்தம், ஆசௌசம் என்பனவற்றின் விளக்கம், அரசர்களின் வர்ணனை, சிவன், விஷ்ணு, (இந்திரன்) ஆகியோரது கதைகள், பெண் ஆண் என்பனவற்றின் லக்ஷணம், ராஜ்ய தர்மம், தானதர்மம், யுகதர்மம், வேதங்களின் வர்ணனை பற்றிய செய்தி பேசப்படுவதுமாக இத்தகைய லக்ஷணங்களுடன் கூடியது தந்திரம் என்று அறிந்துகொள்ள வேண்டும்.'

सर्वेऽर्था येन तन्यन्ते त्रायन्ते च भयाज्जनाः ।
इति तन्त्रस्य तन्त्रत्वं तन्त्रज्ञाः परिचक्षते ॥

எனும் லக்ஷணம் சிவாகமங்கள் தந்திரம் என்று அழைக்கப்படுகை யில் அவை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கவேண்டிய விடயங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

'எல்லாவிதமான பொருட்களும் எதனால் தொடரப்படுகின்றதோ அதேவேளை மக்கள் பயத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றனரோ இவ்வித மாக தந்திரத்தினுடைய தந்திரத்தன்மையானது தந்திரத்தை அறிந்தவர் களால் பரிந்துரைக்கப்படுகின்றது'[8] என்பதிலிருந்து சிவாகமம் 'பின்பற்று பவரைக்காப்பது' தந்திரம் எனும் பொருளுடையதாக விளக்குவது தொடர்பு டையதாகக் காணப்படுகின்றது.

சிவாகமங்கள் சூத்ரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இதற்கு உதாரணமாக நிஸ்வாசம் எனும் ஆகமம், நிஸ்வாச சூத்ரம்' என அழைக்கப் படுகின்றது. இதில் சூத்ரம் எத்தகைய லக்ஷணமுடையது என்பதனை,

सूत्रलक्षणम्

अल्पाक्षरमसन्दिग्धं सारवत् विश्वतोमुखम्
अस्तोभमनवद्यं च सूत्रं सूत्राविदो विदुः

'குறைந்த எழுத்துக்களும், மாறுபாடற்ற கருத்துக்களும், எங்கும் பரந்த சாரத்தையுடையதும், தோற்றமும் முடிவுமற்றதுமாக எது விளங்குகின்றதோ அது சூத்ரம் என சூத்திரத்தை அறிந்தவர்கள் அறிகிறார்கள்!, எனப் பொருளும் கூறுகின்றது. இவ்விதமாக நோக்குகையில் மிகுந்த ஆழம் நிறைந்த பொருளை யுணர்த்தும் சிவாகமங்கள் விரிக்க விரிக்க விரிந்து செல்லும் தன்மையில் மிகுந்த செறிவுடைய பொருளுடையதாக விளங்குவது சுட்டிக்காட்டத்தக்கது.

இவைகளினடிப்படையிலேயே சிவாகமங்களின் உரைகள் எவ் வாறு விரிந்து செல்லத்தக்கது எனும் உரைமரபினை நோக்குகையில் அவை வார்த்திகம், 'விருத்தி, பாஷ்யம், வியாக்யானம் என வேறு வேறு பெயர்களில் உரை விளக்கப்படுத்தப்படும் விடயப்பரப்பு அமைய வேண்டியமுறைமை யைச் சுட்டிக்கட்டிநிற்பது கவனத்திற்கொள்ளத்தக்கதாக ஆகின்றது. அதனடிப் படையில் வார்த்திகம் என்பது,

वार्तिकलक्षणम्

उक्तानुक्तदुरुक्तार्थ, व्यक्ति (चिंता) कारि तु वार्तिकम्

'கூறப்பட்டதில் கூறப்பட்டதும் அவ்வாறு கூறப்பட்டதில் காணப்படும் பொருளை விபரித்துக் கூறுவது வார்த்திகம் என்பதன் லக்ஷணமாகும், அதே போன்று விருத்தி என்பது,

वृत्तिलक्षणम्

सूत्रप्रधानो ग्रन्थो वृत्तिः

'சூத்திரத்தை முதன்மைப்படுத்திய நூலானது விருத்தியின் லக்ஷணமாகும்', பாஷ்யம் என்பது,

भाष्यलक्षणम्

सूत्रार्थो वर्ण्यते यत्र वाक्यैर्वाक्यानुकारिभिः
स्वपदानि च वर्ण्यन्ते भाष्यं भाष्यविदो विदुः ॥

'சூத்திரத்தின் பொருள், அதன் வாக்கியங்களில் வாக்கியங்களின் பொருள் அப்பதங்கள் உணர்த்தும் பொருள் என்பதாக விளங்குவதே பாஷ்யம் என பாஷ்யத்தை அறிந்தவர்கள் கூறுகின்றனர்.?

இவ்விதமான தன்மையின் வளர்ச்சி சமஸ்கிருத இலக்கணமரபில் கைக்கொள்ளப்படுகின்றன. அத்தலிகபதன்மையின் அடிப்படையில் சிவாகம உரைகளையும் கேமாவது பொருத்தமுடையதாக அமையும்.

இவ்வகையில் நோக்குகையில் சிறப்பாக சிவாகமங்களுக்கான உரைகள் என்பது சாதாரண தன்மையதாக அமையவில்லை. உரை என்பது பொதுவாக பாஷ்யம் என அழைக்கப்பட்டது. அதனை பதஞ்சலி தெளிவு படுத்துகையில்,

व्याख्यानलक्षणम्

पदच्छेदः पदार्थोक्तिः विग्रहो वाक्ययोजना
तात्पर्यवचनं चेति व्याख्यानं पञ्चलक्षणम् ॥

न केवलं चर्चापदानि व्याख्यानं वृद्धिः आत् ऐच् इति । किं तर्हि उदाहरणं प्रत्युदाहरणं वाक्याध्याहार इत्येतत्समुदितं व्याख्यानं भवति

— महाभाष्य

1. பதம்பிரித்துக் கூறுதல், 2. பதங்களில் கூறப்பட்ட பொருள், 3. சமாசங்களை விளக்குதல், 4. வாக்கியங்களின் ஒன்றிணைப்பு, 5. கூறவிளையும் பொருள் என வியாக்கியானம் பஞ்சலக்ஷணமுடையது எனத் தெளிவுபடுத்துகின்றது.[9]

சிவாகமங்கள் மற்றும் சைவசித்தாந்த மரபுடைய தத்துவநூல்கள் என்பனவற்றிற்கு எழுதப்பட்ட உரைகள் விருத்தி என்றே அழைக்கப்படு கின்றன.

சம்ஸ்கிருத இலக்கிய மரபில் உரைகளும், உரைவளமும் இலக் கியங்களையும், இலக்கியங்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்ற உண்மையான பொருளையும் உணர்த்துவனவாக உள்ளன. இம்மரபு ஒரு வகையில் விமர்சனமாகவே கொள்ளத்தக்கன. சிறப்பாக சம்ஸ்கிருத இலக்கியமரபில் காவியத்திற்கான உயிரோட்டத்தினை உரைகள் தான் வழங்குகின்றன.[10] அவ்விதமே உரைகள் பல்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றன. அவற்றின்வழி பாஷ்யம், வியாக்யானம், வார்த்திகம், விருத்தி என்றவாறாக பல்வேறு பெயர் மரபைக் கொண்டிருந்தாலும் அவை ஒரேபொருளையே உணர்த்துகின்றன. எனினும் அப்பெயர்கள் ஒவ்வொன்றும் தமக்கென ஓர் தனித்துவமான வரையறைகளையும் கொண்டு விளங்குகின்றன. இவை யெல்லாவற்றிற்கும் மேலாக சம்ஸ்கிருத உரைமரபில் உரைகளுக்கு உரையெழுதும் மரபும், உரைகளுக்கு பெயர் சூடும் மரபும் தனித்துவம் மிக்க சிறப்பியல்புகளாகும். இத்தகைய மரபில் சிவாகமங்களை விளங்கிக் கொள்வதற்கு பல்வேறு உரைகள் தோன்றின. அவ்வுரையாசிரியர்களையும், அவர்களது உரைத்திறனையும் அறிமுகமாக இங்கு நோக்குவது பொருத்த முடையதாக அமையும்.

சிவாகமங்களின் உரையாசிரியர் வரிசையில்

1. சத்யோஜ்யோதி சிவாச்சாரியார்
2. பட்ட நாராயண கண்டர்
3. பட்ட ராமகண்டர்
4. அகோரசிவாச்சாரியார்
5. உமாபதி சிவாச்சாரியார்

6. ஞானப்பிரகாச முனிவர்
7. வாதுளாகத்தின் உரையாசிரியர்

ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள், இவர்கள் சிவாகமங்களுக்கு சம்ஸ்கிருத மொழியில் எழுதிய உரைமரபுகளை நோக்குவோம்.

1. சத்யோஜ்ஜோதி சிவாச்சாரியார்

காஷ்மீர தேசத்து அறிஞரான இவர் கி.பி.8ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். உக்ரஜோதி சிவாச்சாரியாரின் மாணவரான இவர் ரௌரவாகமத்திற்கு சுவிருத்தி, சத்விருத்தி எனும் பெயர்களில் உரையெழுதியுள்ளார். மேலும் ஸ்வாயம்புவம் எனும் ஆகமத்திற்கும் உரையெழுதியுள்ளார். இவரது உரைத்திறனை கீழ்வரும் உதாரணம் மூலம் நோக்கலாம்.[11]

आत्मव्याख्यानोपसंहाराय मलादिव्याख्यानोपक्रमाय च – इत्यमात्मेत्यादि ।

इत्थमात्मा [२०५]समाख्यातः सर्वावस्थास्ववस्थितः ।
साम्प्रतं प्रोच्यते ब्रह्मन् [२०६]पाशजालमनन्तकम् ॥ २० ॥

इति स्वायम्भुवसूत्रसंग्रहे [२०७]पशुविचारपटलः प्रथमः ॥

आगन्तुकानां पाशानामानन्त्यात्तत्समुदायापेक्षया [२०८]मलादीनां पाशानां संघातो जालमनन्तकम् । यदा तु पाशा एव पुंस्त्वावरणत्वाज्जालमिव जालम् [२०९]तच्चान[न्त]कमिति, तदा तु प्रत्येकमनन्तत्वं व्याख्यातव्यम् । तत्र [२१०]तावन्मलस्यापरिमितत्वादनन्तकम् । अपरिमितत्वं चाण्वानन्त्यव्यापकत्वादनन्तशक्तित्वाच्च । पुरुषगुणनिरोधिकाः [२११]शक्तयस्तस्य विद्यन्ते । ताश्च प्रतिपुरुषवर्तिन्यः । पुरुषाणामानन्त्यात् [२१२]ता अप्यनन्ता भवन्ति । मायातत्त्वमप्येवमपरिमितत्वादनन्तकम् । अपरिमितत्वं च विकारानन्त्यव्यापकत्वात् [२१३]किंचानन्तशक्तित्वाच्च । विकारोत्पत्तिशक्तयस्तस्मिन् वर्तन्ते । विकाराणामानन्त्यात्ता अप्यनन्ता इति । [२१४]मायेयान्यपि तत्वभावभुवनरूपाणि प्रतिपुरुषवर्तीन्यनियतत्वादनन्तकानि । भुवनरूपाण्यपि प्रतिस्रोतोवर्तीनि, स्रोतसां चानन्त्यादनन्तकानि । कर्माण्यपि प्रतिपुरुषवर्तीन्यनियतत्वादनन्तकानि किं [२१५]चानन्तव्यक्तित्वाच्चेति ॥

इति स्वायम्भुवसूत्रसंग्रहे प्रथमस्य [पटलस्य] सद्योज्योतिष्कृता टीका समाप्ता ॥[२१६]

இவற்றைவிட சம்ஸ்கிருத மொழியிலமைந்த சைவசித்தாந்த அஷ்டகங்கள் எட்டினுள் தத்துவ த்ரயநிர்ணயம், தத்துவ சங்கிரகம், போக காரிகை, மோக்ஷகாரிகை, பரமோக்ஷ நிராசகாரிகை எனும் ஐந்து நூல்களின் ஆசிரியரான இவர் மெய்கண்ட தேவருக்கு முன்னரே சைவசித்தாந்த தத்துவத்தை சம்ஸ்கிருதமொழியில் தெளிவுபடுத்திய பெருமைக்குரியவர். இவர் நரேஸ்வர பரீக்ஷை, மந்திரவார்த்திகம் எனும் நூல்களையும் எழுதியுள்ளார்.[13]

2. பட்ட நாராயண கண்டர்

வித்தியாகண்டரது மகனான இவர் கி.பி. 10ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். ம்ருகேந்திர ஆகமத்தின் நான்கு பதங்களுக்கும் உரையெழுதியுள்ளார். இவரது உரைவளத்தை கீழ்வரும் பகுதியிற் காணலாம்.

[3]उपसंहरन् मन्त्रफलातिशयकथनार्थमाह—

[4]इत्युक्ता मन्त्रसंघाता उपयोगार्थमाहृताः[5] ।
सत्यक्रियाः [6]शुचीज्याकृद्धोतृशुद्धक्षमानुगाः ॥ ११ ॥

[इत्युक्ताः] इत्थमस्मत्प्रदर्शिताः [मन्त्रसंघाताः] मन्त्रराशयो यथावसरम् उपयोगार्थमाहृताः पूजाद्यर्थमुपस्थापिताः सत्यक्रियाः सफलकर्माणो मन्त्रा भवन्तीति शेषः । कीदृशा इत्याह—शुचीज्याकृद्धोतृशुद्धक्षमानुगाः शुचिर्वक्ष्यमाणस्नानादिकर्मणा योऽसौ इज्याकृत् पूजयिता होता च. तेन यासौ शुद्धा संशोधिता क्षमा अभिमताध्वभूस्तदनुगाः । यमनियमसंपन्नस्य क्रियाक्रमज्ञस्य च प्रयोक्तुस्तत्रतत्राध्वन्यव्याहतफलदा मन्त्रा भवन्तीत्यर्थः ॥ ११ ॥

इति श्रीभट्टविद्याकण्ठात्मजभट्टनारायणकण्ठविरचितायां मृगेन्द्रवृत्तौ क्रियापादे [8]
मन्त्रोद्धारप्रकरणं प्रथमं समाप्तम्

[इति प्रथमः पटलः]

இவற்றைவிட சத்யோஜ்யோதி சிவாச்சாரியாரின் தத்துவ சங்கிரகம் எனும் நூலுக்கு பிருஹத்டீகை எனும் உரையெழுதியுள்ளார்.

3. பட்ட ராமகண்டர்

பட்ட நாராயணகண்டரின் புதல்வரான இவர் கி.பி 11ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் கிரணாகம விருத்தி, மதங்கபாரமேஸ்வர விருத்தி, ரௌரவவிருத்தி என மூன்று சிவாகமங்களுக்கு உரையெழுதியுள்ளார்[16]. இவரது உரைவளத்தை கீழ்வரும் பகுதியில் காணலாம்.[17]

सार्धत्रिशतिकालोत्तरम्

[१]"ईशानाद्यास्तु 'सद्यान्ता मूर्ध्नं आरम्य विन्यसेत्।" इति।

अत एव "मुद्राया इवात्रैषां संहारक्रम एव युक्तः" 'इत्यव्याख्यैव। विन्यासश्रुतेरत्र तत्क्रमस्यैवा-पेक्षि'तत्वाद् न तु विद्यान्यासार्थे सिद्धिस्तस्याः। अत एव 'वहिरङ्गन्यासोऽसाविति पूर्वैव व्याख्या युक्ता। तथैवाङ्गानि इति तेषामुद्धारविन्यास'क्रमो हृदयादिभिः सदृश 'एवेत्युक्तः। अस्त्रं तु 'प्राग्विशिष्टकर्मार्थत्वेनात्र विनियुक्तम्। अधुना 'त्वङ्गान्तरवत्तत्कर्म हस्त''शाखाधिष्ठातृत्वेनेत्य-विरोधः। पश्चात् प्रासादं सकलं हस्तव्यापकत्वेन ''विन्यसेत्। न च तस्यां विन्यासगतिरस्ति इति। अत्र च —

[१३]"नेत्रं दत्त्वा तदावाह्यो देवदेवः सदाशिवः।"

इति ''वक्ष्यमाणश्रुत्या पूर्वं नेत्रं विन्यसेत्। पाशुपतस्याप्यत्र न्यासोपन्यासोऽनुपपन्न एव निषिद्ध-त्वादिति ''दर्शितः॥१७–१८॥

इति भट्टनारायणकण्ठात्मजभट्टरामकण्ठविरचितायां'' ''श्रीमत् [सार्धत्रिशति]
कालोत्तरवृत्तौ मन्त्रोद्धारप्रकरणं [प्रथमं समाप्तम्]

इति प्रथमः पटलः

இவர் மேலும் சார்த்தத்ரிசதி காளோத்தரவிருத்தி, மோக்ஷகாரிகை விருத்தி, பரமோக்ஷ நிரசகாரிக விருத்தி, நரேஸ்வர பரீக்ஷாப்பிரவேசம், நாத காரிகை, சாதி நிர்ணய பூர்வக ஆலயப் பிரவேச விதி, வியோமவியாபிஸ் தவம், மந்திவார்த்திகடீகை, ஆகம விவேகம் எனும் உரைகளையும் நூல்களையும் இயற்றியுள்ளார்.

4. அகோர சிவாச்சாரியர்

சர்வாத்ம சம்பு என்பவரின் மகனான இவர் பரமேஸ்வரன் எனும் இயற்பெயரையும் அகோர சிவாச்சாரியார் எனும் தீக்ஷாநாமத்தையும் உடையவர். இவர் கி.பி 12ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். லக்ஷத்வய அத் யாபகர் எனப் பெருமைபெறும் இவர் கிரணாகம விருத்தி, ம்ருகேந்திர விருத்தி என சிவாகமங்களுக்கு உரையெழுதியுள்ளார்.[18]

இவரது உரைவளத்தை உதாரணமாக கீழ்வரும் பகுதியிற் காணலாம்.[19]

तत्त्वत्रयनिर्णयः

स द्यो ज्यो तिः शि वा चा यं प्र णी तः

अघोरशिवाचार्यकृतवृत्तिसहितः

सिद्धानि यत्प्रसादाद् दृष्टादृष्टानि वाञ्छितान्यचिरात् ।
नत्वा शिवं विधास्ये तत्त्वत्रयनिर्णये वृत्तिम् ॥

तत्र तावदाचार्यः प्रारिप्सितप्रकरणस्याविघ्नपरिसमाप्त्यर्थं तत्प्रतिपाद्येनार्थेन विशेषयन् परमेश्वरमेव प्रणमति—

पुंभ्यः फलं विचित्रं ददाति संवीक्ष्य बन्धवैचित्र्यम् ।
स्वमहिम्नाऽनाद्युदयोऽनायत्तो नमो नमस्तस्मै ॥ १ ॥

अनादिरुदयः सर्वविषयज्ञानक्रियाप्रकाशो निर्मलत्वेन यस्य सोऽनाद्युदयः, तस्यापि आदिमुक्त्वाभ्युपगमेऽनवस्था स्यादिति भावः । अत एव चासौ न कस्यचिदायत्तः, स्वतन्त्र इत्यर्थः । एवंविधो यः शक्त्यात्मना स्वेन महिम्ना बन्धवैचित्र्यमालोक्य मलावृतत्वेनास्वतन्त्रेभ्यः पुरुषेभ्यो विचित्रं फलं ददाति । तत्र पक्वमलेभ्यस्तत्पाकवैचित्र्यानुगुणं परापरमोक्षं ददाति, अपक्वमलेभ्यस्तत्परिपाकार्थमेव कर्मवैचित्र्यानुगुणं भोगरूपं फलं ददातीत्यनेनास्य सर्वानुग्राहकत्वं सिद्धम् । स च शिव एव, तस्यैव सर्वज्ञत्वसर्वकर्तृत्वात्मनाऽनादिसिद्धेन शिवत्वेन योगो यस्तस्मै शिवाय नमो नम इति ॥ १ ॥

க்ரியாக்ரம ஜ்யோதிகை எனும் பத்ததி நூலினூடாக பிரசித்தி பெற்ற இவர் சர்வஞானோத்தர விருத்தி, சர்வவித்யோசினி, தத்துவப் பிரகாசிகாவிருத்தி, தத்துவ சங்கிரக லகுடீகை, தத்துவத்ரய நிர்ணயவிருத்தி, ரத்னத்ரய உல்லேகனீ, போக காரிகை வ்யாக்யை, நாதகாரிகை வ்யாக்யை, ஆச்சாரிய சாரம், பாசண்ட அபநயம், பக்தப் பிரகாசம், நாட்ய அப்யுதம், சிவபஞ்சாவரண ஸ்தோத்திரம் ஆகிய உரைகளையும் நூல்களையும் ஆக்கியவராவார்.[20]

5. உமாபதி சிவாச்சாரியார்

தமிழ் மரபுச் சைவசித்தாந்த சந்தான ஆசாரியார் பரம்பரையில் நான்காமவராக விளங்குபவர் உமாபதி சிவாச்சாரியார். இவர் தென்னிந்தியாவிலுள்ள சிதம்பரத்தில் தில்லைவாழ் அந்தணர் மரபில் கி.பி 13ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி 14ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் இவர் பௌஷ்கராகமத்திற்கு விருத்தி உரையெழுதியுள்ளார்.

இவரது உரைத்திறனை கீழ்வரும் பகுதியிற் காணலாம்.



இதனைவிட சதரத்ன சங்கிரகம் என சைவசித்தாந்தத்துவம் சார்ந்த சிவாகமக்கருத்துக்களை ஒன்றுதிரட்டியுள்ளார். இவற்றைவிட குஞ்சிதாங்ரிஸ்தவம், நடராஜத்வனி மந்திர ஸ்தவம், யந்திர விதானடீகை, வாயுசம்ஹிதை விருத்தி, ஸ்ரீருத்ர விருத்தி, என்பனவற்றை சம்ஸ்கிருத மொழியிலும், சிவப்பிரகாசம் திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை நெஞ்சுவிடு தூது, கொடிக்கவி, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் எனும் சித்தாந்த அஷ்டகத்தினையும், கோயிற்புராணம் எனும் நூலினை தமிழ் மொழியிலும் எழுதியுள்ளார்.[23]

6. ஞானப்பிரகாசர்

யாழ்ப்பாணத்து திருநெல்வேலியைச் சேர்ந்த இவர் கி.பி 17ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் பௌஷ்கராகமத்திற்கு விருத்தியுரை எழுதியுள்ளார்.[24]

இவரது உரைவளத்தை கீழ்வரும் பகுதியிற் காணலாம்.[25]



இதற்கு மேலாக சம்ஸ்கிருத மொழியில் சிவயோகரத்னம், சிவயோகசாரம், சிவஞானபோத விருத்தி, சித்தாந்தசிகாமணி, பிரமாண தீபிகா, பிரமாண தீபிகா விருத்தி, அஞ்ஞான விவேசனம், சிவாகமாதி மகாத்மிய சங்கிரகம் எனும் நூல்களின் ஆசிரியர் ஆவார். தமிழ்மொழியில் சிவஞான சித்தி யாருக்கு உரையெழுதியுள்ளார்.

வாதுளாகம உரையாசிரியர்

வாதுளம் எனும் மூலாகமத்தின் வாதுளாகம சுத்தாக்பம் எனும் உபாகமத்திற்கு எழுதிய உரையாசிரியரின் பெயர்மரபு அறியப்படவில்லை.[26]

இவ்வுரையாசிரியரின் உரைவளத்தினை கீழ்வரும் பகுதியினூடாகக் காணலாம்.[27]



இவ்வாறாகச் சிவாகமங்களின் மூலாகமங்களுக்கும் உபாகமங்களுக்கும் பல்வேறு உரைகள் எழுந்துள்ளமையைப் போன்று சிவாகம சார்பு நூல்களுக்கும் உரைகள் எழுந்துள்ளன. இத்தகைய மரபுகள் பல வெளிக் கொணரப்படாமலும், அறியப்படாமலும் ஏட்டு வடிவமாகவோ கையெழுத்துப் பிரதிகளாகவோ மறைந்து காணப்படுகின்றமை இங்கு மனம்கொள்ளத் தக்கது.

அடிக்குறிப்பு

1. கைலாசநாதக்குருக்கள், கா, (1960) தென்னாட்டின் சைவக்கருவூலம் பதினெண்புராணங்கள், அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள் பாராட்டுவிழா மலர், யாழ்ப்பாணம், பக். 96-99

2. கைலாசநாதக்குருக்கள், கா.(2009) சைவத்திருக்கோவிற் கிரியைநெறி, ஸ்ரீ.கிருஷ்ணானந்தசர்மா (பதி.), நல்லூர். பக் 45-49.

3. நோக்குக, காரணாகமம், பூர்வபாகம்

4. Radhakrishna Sastri, S.V., (2013), A Learner's Sanskrit-Tamil-Engligsh, Dictionary, Sanskrit Educetim Society, Chennai. P.447.

5. Isana sivagurudeva Paddhati (1988), Ed.T.Ganapathi Sastri, Introduction, Dr.N.P.Unni, Bhorotiya vidya Prrekasen, Delhi, p.3

6. Ibid. p.3

7. Ibid

8. Ibid. p.2

9. பதஞ்சலி மஹாயஷ்பாத்தின் குறிப்பு

10. நோக்குக. மல்லிநாதரின் சஞ்ஜீவினி உரைகள்

11. The Tantra of Svayambhu (1994), vidya pada, with the Commentary of Sadyojyoti, Kapila Vatsyayan (Generairal editor), Pierre-sylvain Filliozat (Editor), Indragandhi National Center for the Arts, Newdelhi, p.30.

12. Ibid - Introduction, pp.XXXiii - XXXVi

13. சபாரத்தினம், எஸ்,பி., (2002), சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. பக் 93,94.

14. மேலது, பக், 94, 95

15. Mrgendragama (1962), (Kriya Pada and Carya pada) with the commentary of Bhatta Narayanakanda, N.R.Bhatt (Editor), Institute of Indology - French, Pondichery. p.6

16. சபாரத்தினம், எஸ், பி.(2002) மு.கு.நூ, பக்-95-97

17. Sardhatrisatikalottaragama (1979), with the commentary of Bhatta Ramakanda, N.R.Bhatt (Editor), Institute of Indology - French, Pondichery. p.26

18. சபாரத்தினம், எஸ்.பி., (2002) மு.கு.நூ, பக்.97,98

19. Astaprakarana (1988), P.T.Sri Vrajavallabhe Dvivedi, (Editor), Varancsi p.137.

20. சபாரத்தினம், எஸ்.பி., (2002), மு.கு.நூ. ப.98.

21. மேலது. பக்., 98-100.

22. ஸ்ரீமத் பௌஷ்கரஸம்ஹிதை (1925) (ஞானபாதம்) உமாபதி சிவாச்சாரி யாரின் உரையுடன், அம்பலவ நாவல ஜ்ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள், (பதி.), சிதம்பம். ப.1.

04. சிவாகமங்களின் காலம்

சைவசமய மரபில் வேதங்களும், சிவாகமங்களும் அநாதியானவை என்பது கொள்கையாகும். சிவனது நாததத்துவத்தில் வேதங்களும் சிவாகமங்களும் படைப்பு நிகழும் காலங்களில் வெளிப்படுகின்றன. அவ்விதமே மஹாபிரளய காலத்தில் சூக்ஷ்மவடிவில் ஒடுக்கம் பெறுகின்றன. இவை தோற்றம் மறைவற்ற தன்மையது நித்தியமானது.[1]

இத்தகைய சமயம் சார்ந்த கருத்தினடிப்படையில் சிவாகமங்கள் எப்பொழுது எக்காலத்தில் எங்கு தோன்றின எனும் கருத்து எவராலும் கூறவியலாததொன்றாகும்.

சிவாகமங்கள் சிவனின் சூக்ஷ்ம வடிவமான சதாசிவ வடிவத்தின் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனும் ஐந்து முகங்களிலிருந்தும் தோற்றம் பெற்றன என்பதனை சிவாகமங்களின் தந்திராவதார படலங்கள் தெளிவுபடக்கூறுகின்றன. இதனடிப்படையில் சிவாகமங்கள் மூலசிவாகமங்கள் உபாகமங்கள் எனும் பிரிப்பு, மூல சிவாகமங்கள் இருபத்தெட்டு, உபாகமங்கள் இருநூற்றேழு எனும் விபரம், அவற்றின் பெயர், அவ்வாகமங்கள் எவர்க்கு உபதேசிக்கப்பட்டன. அவற்றின் இவ்வகைப் பேதங்கள் என மிக விரிந்த நிலையில் தெளிவுபடுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.[2]

- சிவாகமங்களின் கால நிர்ணயம் பற்றிய சிந்தனைகள் காலத்துக்குக் காலம் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றினை நோக்குகையில் புறக்காரணிகளில் ஆகமம் எனும் சொல் மரபும், கருத்தாடலும் கையாளப்படுகின்ற சந்தர்ப்பங்களே அவற்றை கால நிர்ணயச் சிந்தனைக்குரிய விடயங்களாக அமைகின்றன என்பது கவனத்திற்குரியதாகும்.

சிவாகமங்களின் கால நிர்ணயத்தினை பல்வேறு கோணங்களினூடாகச் சிந்தித்து அவைகளினூடாக ஒரு தொகுப்பான தீர்மானங்களை முன்வைப்பது பொருத்தமுடையதாக அமையும்.

சிவாகமங்கள் எனும் தொகுதி நூல்கள். ஒருகாலத்தில் தோன்றி ஒரே காலத்தில் தொகுக்கப்பட்டவையல்ல. இவை மிக நீண்டகாலமாக வளர்ச்சிபெற்ற தன்மையில் ஒன்றாகத் தொகுக்கப்பட்டன என்பது முதற்கருத் தாகும்.

இதனடிப்படையில் சிவாகமங்களின் உள்ளார்ந்த விடயங்களாக வேதமந்திரங்களின் பயன்பாடு கிரியைகளில் சுட்டப்படுவதையிட்டு இவை வேதகாலத்திற்கு பிற்பட்டவை என்பதனையும், வைதிகக் கிரியை மரபு களைக் கூறுகின்ற கல்ப சூத்திரங்களையொத்த தன்மையன என்பதனையும் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.[3]

சிவாகம விதிமுறைகள் பல கல்ப சூத்திரங்களில் காணப்படுகின்றன. இதன் காரணமாக கல்ப சூத்திரங்கள் தொகுக்கப்பட்ட காலத்திற்கு முன்ன தாகவே சிவாகமங்கள் தோற்றம் பெற்றன என்பது தெளிவாகின்றது.[4]

பாணிணியின் காலத்திற்கு முற்பட்ட தன்மையுடையவை கல்ப சூத்திரங்களெனின் இச்சிவாகமங்கள் கி.மு.4ம் நூற்றாண்டின் பாணினி காலத்திற்கு முற்பட்டவையாகும்.[5]

சிவாகமங்களின் கால நிர்ணயம் பற்றிய மற்றுமோர் இலக்கிய வடிவம் இதிகாசங்களும் புராணங்களுமாகும். சிறப்பாக புராணங்கள் பாமர மக்களுக்கு சமயம் சார்ந்த உண்மைத் தன்மைகளையும், கதை மரபுகளை யும் கூறவந்த இலக்கியங்களாகும். இப்புராணங்கள் எளிமையான நடையில் சிவாகமங்கள் கூறும் தெய்வ வடிவங்களுக்கு வரலாறு கூறும் நூல்களையும் தெய்வீகவியல் வரலாறு கூறும் நூல்களாகவும் விளங்குகின்றவகையில் சிவாகமங்கள் கூறும் விடயங்களை விளங்க எழுந்த நூல்களே புராணங்கள் என்றாகின்றன.[6] இதனடிப்படையில் புராணங்களின் கால நிர்ணயம் பற்றிய விடயம் சிவாகமங்களின் கால எல்லைகளைக் கொள்வதற்குரிய தக்கதோர் சான்றாகும்.[7]

சிவாகமங்களுள் ரௌரவம், ஸ்வாயம்புவம் எனும் மூலாகமங் களுக்கும் மதங்கம், மிடுசேகந்திரம் ஆகியவற்றிற்கும் முதலில்

விருத்தியுரையெழுதியவர் சத்யோஜ்யோதி சிவாச்சாரியார் ஆவார். இவர் கி.பி.8ம் நூற்றாண்டைச் சார்ந்தவராகக் கருதப்படுகின்றார். இவர் வட மொழிச் சைவசித்தாந்தமரபில் தத்துவ சங்கிரகம், தத்துவத்ரய நிர்ணயம், யோககாறிகை, மோக்ஷசரிகை, பரமோக்ஷ நிரசபரிகை எனும் ஐந்துநூல் களினது ஆசிரியருமாவர். இதனடிப்படையில் மூலசிவாகங்கள் உரைவளம் பெறுவதற்கு ஏற்றவகையில் முழுவடிவம் பெற்ற இறுதிக் காலமாகவும் ஏற்ற வகையில் முழுவடிவம் பெற்ற இறுதிக் காலமாகவும் சத்யோஜ்யோதி சிவாச் சாரியாரியார் காலத்தைக் கொள்வது பொருத்தமுடையதாகும்.[9]

தென்னிந்தியமரபில் பல்லவமன்னர்களின் பங்களிப்புகள் பலவற் றுள் சிவாலயங்களின் தோற்றம் பற்றிய விடயங்கள் சிந்தனைக்குரியன. அதனடிப்படையில் சிவாகமங்களே பல்லவர் காலக்கோவில் மரபுகளுக்கு விதி நூல்களாக விளங்கியுள்ளன என்பதும் மறைபொருளாக உணரற் பாலதாக உள்ளது. இதற்குச் சான்றாக இரண்டாம் நரசிம்ம பல்லவன் (கி.பி. 1691 – 728) காஞ்சிபுரம், கைலாசநாதர்கோவில் கல்வெட்டு ஒன்றில் சைவ சித்தாந்த மார்க்க 'சைவசித்தாந்த மார்கன்' எனும் கருத்தும், 'ஆகமப் பிரமாண', 'ஆகமானுசாரி' எனும் கல்வெட்டுச் சான்றுகளும் பல்லவ மன்னர் காலத்தில் சிவாகமங்கள் வலுப்பெற்ற தன்மையையுடையன என்பது கருத் தாளப்படுகின்றது.[10]

சிவாகமங்களின் காலங்களை நிர்ணயம் செய்யமுனைந்த மேனாட்டு அறிஞர் வரிசையில் வின்டநீட்ஸ், (winternitz) ஸ்கொமேரஸ் (Schomerus), ஃ பார்குவார், (Farquhar) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் களாவர். இவர்களது கருத்துப்படி திருமூலர் மாணிக்கவாசகர் ஆகியோரது காலங்களைக் கருத்திற்கொண்டு சிவாகமங்களின் பின்னெல்லையான காலம் கி.பி.7ம் நூற்றாண்டு எனக் கொள்கின்றனர்.[11]

வின்டநீட்ஸ் எனும் அறிஞர்கள் கருத்துப்படி புராணங்களின் பின் னெல்வையான காலம் கி.பி.எனக் கொள்கின்றார்.[12]

இவைகளினடிப்படையில் ஒன்றுதொடுத்து நோக்குகையில்,

1. சிவாகமங்கள் மிக நீண்டகாலங்களாக வளர்ந்து வந்த மரபுகளின் தொடர்ச்சியானது கி.மு. 4ம் நூற்றாண்டு முதல் கி.பி 6ம் நூற்றாண்டு வரையானது என்றாகிறது.

2. சிவாகமங்களின் மொழி மரபு புராணங்களை நிகர்த்தாக விளங்கும் தன்மையால் இவையும் புராணங்களை போன்றே மிக நீண்டகால வளர்ச்சி யுடையது எனக் கொள்ளமுடிகிறது.

3. சிவாகமங்களின் உரையாசிரியர் காலங்களைக் கொண்டு, சிவாகமங் கள் முழு உருவம்பெற்ற காலமாக கி.பி.8ம் நூற்றாண்டாகக் கொள்ள முடிகிறது.

4. திருமூலரின் கால நிர்ணத்தினைக் கொண்டு திருமந்திரத்தில் இடம்பெறும் சிவாகமங்களின் உள்ளடத்தைக் கொண்டு திருமூலரது காலத்திற்கு முன்னரே சிவாகமங்கள் முழுவடிவம் பெற்றுவிட்டன என்பதாகிறது.

5. மாணிக்கவாசகரது திருவாசகத்தில் ஆகமம் எனும் பெயர் மரபு இடம் பெறுவதையிட்டு மாணிக்கவாசகரது காலத்திற்கு முன்னரே சிவாகமம் முழுவடிவம் பெற்றது எனக் கொள்ள முடிகிறது.

6. பல்லவ மன்னரது கல்வெட்டுக்களினடிப்படையில் ஆகமம், சித்தாந்த, சைவசித்தாந்த எனும் மரபு பல்லவ மன்னர் காலத்தில் செல்வாக்கும் சிறப்பும் பெற்றுள்ளமையை இனம்காணமுடிகிறது.

7. சிவாகமங்களின் காலம் புராணங்களின் காலம் பற்றிய மற்றுமொரு உறவுடையதன்மையதான பரிணாமத்திற்கு இட்டுச் செல்லும் தன்மை யாகின்றது.

8. கர்மர்கார் எனும் அறிஞரது கருத்துப்படி சுவேதாஸ்வதர உபரிடதம், கீதை என்பவற்றினையடுத்து ஆகம இலக்கிய வடிவம் பெற்றிருக்கலாம்

என்கிறார். இவரது கருத்தின் அடிப்படையில் மகாபாரதம் முழுநூல் வடிவம்பெற்ற காலத்தில் ஆகமங்கள் எழுத்து வடிவமோ அன்றில் முழுவடிவமோ பெற்றிருக்கவேண்டும் என்பது அவ்வறிஞரது கருத் தாகிறது.

9. சிவாகமங்களுக்கு நிகாராக வைஷ்ணவ சம்ஹிதைகள் சாக்த தந் திரங்கள் என்பனவற்றின் கால நிர்ணயம் சிவாகமங்களின் கால நிர்ண யத்திற்கு துணை புரிவனவாக விளங்குகின்றன.

10. சம்ஸ்கிருத மொழியில் சைவசிந்தாந்தம் பற்றிய சிவாகம மூலங்களின் சார்பு நூல்களின் தோற்றமும் அவற்றினை வளம்பெறச் செய்வதற்கு சிவாகம மூலங்களை முன்னிறுத்திய உரைகளும் சிவாகமங்களுக்கு உரையெழுதியவரும் அஷ்டப்பிரகரண ஆசிரியர் வரிசையில் முதலா மவரான காலத்தால் முற்பட்ட சத்யோஜ்யோதி சிவாச்சாரியாரது காலத் திற்கு முன்னரே சிவாகமங்கள் முழு வடிவம் பெற்றதாகின்றது.

நிறைவுரை

சிவாகமங்களின் காலம் பற்றிப் பல்வேறு நிலைகளிலும் நோக்கும் போது சிவாகமங்கள் மிக நீண்ட நாட்களாக பல்வேறு தளங்களில் வளம்பெற்ற மரபுசார் சாஸ்திரங்கள் எனும் வகையில் கி.பி.7ம் நூற்றாண்டு காலம்வரையாக வளம்பெற்று முழுவடிவம் பெற்றுள்ளது எனக் கொள்வது பொருத்தமாகின்றது. இதனடிப்படையில் நிறைவுபெற்றதன் வடிவம் சிவாக மங்களின் முழுவடிவம் பெற்றதன் இறுதிக்காலம் கி.பி.7ம் நூற்றாண்டுக் காலத்திற்கு பிற்படாதது என்பது சாரமாக அமைகின்றது.

அடிக்குறிப்பு

1. சபாரத்தினம், எஸ்.பி., (2002) சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. பக்.24,25.
2. நோக்குக. காரணாகமம்)1921) பூர்வபாகம், மயிலை அழகப்ப முதலியார் (பதி.) 2ம் பதிப்பு சிவஞானபோதயந்திரசாலை சிந்தாரிப் பேட்டை, சென்னை பக்.1-6
3. மேலது. 6 கர்பநியாசவிதிபடலம், சு.76
4. சபாரத்தினம், எஸ்.பி., (2002) மு.கு.நூ.ப.25
5. மேலது.ப.25
6. கைலாசநாதக்குருக்கள், கா., (1960). 'புராணங்கள் தென்னாட்டின் சைவக் கருவூலம்,' சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் பாராட்டு விழாமலர், யாழ்ப்பாணம். பக.97-99
7. மேலது. ப.102
8. சபாரத்தினம், எஸ்.பி., (2002) மு.கு.நூ., ப.93, 94
9. மேலது. ப.94
10. கோபாலகிருஷ்ண ஐயர், ப.(192) இந்துப் பண்பாட்டு மரபுகள். வித்தியா வெளியீடு. யாழ்ப்பாணம் பக.29
11. மேலது ப.28
12. Winternitz, M.(1963), Attistiry of Indian Literature, vol. I Part I, University of Calcutta, Culcatta, P.515.

05. திருமந்திரமும் சிவாகம மரபும்

ஆய்வுச் சுருக்கம்

சைவத்திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக இடம்பெறுவது திருமந்திரம் ஆகும். இதன் ஆசிரியர் திருமூலர் ஆவார். ஒன்பது தந்திரங் களைக் கொண்டு ஒன்பது சிவாகமங்களின் சாரமாக அமையும் இத்திரு மந்திரம் சிவாகங்களின் செய்திகளை இரத்தினச் சுருக்கமாகக் கூறுகின்றது. திருமந்திரம் சைவசமயத்தத்துவமான சைவசித்தாந்தம் எனும் சொற்பிர யோகத்தினை முழுமையாகத் தமிழில் முதன்முறை பிரயோகம் செய்யும் நூலாகவும் விளங்குகின்றது. தமிழ் மூவாயிரம் எனும் தன்மையில் இடம் பெறும் பாடல்கள் அனைத்திலும் சிறப்பாக வடமொழிச்செல்வாக்கானது சொல்லாகவும், தகவல்களின் மூலஊற்றாகவும் பெற்றுள்ளது. சிறப்பாக, சிவாகமங்களிலிடம்பெறும் கலைச்சொற்பியோகம் அவ்வாறே செல்வாக் குப் பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிவாகமங்களில் சாரமாகவும், மொழிபெயர்ப்பு நூல்களன்றி தமிழ் மரபில் சாஸ்திரமாகவும் அமைந்து வடமொழிச் செல்வாக்குப் பெற்றுத் தனித்துவமான நூலாகத் திருமந்திரம் மிளிர்வதனைக் காணலாம்.

திறவுச் சொற்கள் : சிவாகமம், தந்திரம், சைவசித்தாந்தம், பரிபாஷை, மந்திரம்

அறிமுகம்

திருமந்திரம் என்பது உயர்ந்த மறைபொருளையுள்ளடக்கிய உயரிய சாஸ்திரம் ஆகும். இதன் ஆசிரியர் திருமூலர். இது பத்தாம் திரு முறையாக இடம்பெறும் தோத்திரமாகவும் அமைகின்றது. இத்திருமந்திரம் எனும் பதம் திரு எனும் அடைமொழியைக் கொண்டு மந்திரம் எனும் சொற்பதத்தைக் கொண்டு விளங்குகின்றது. வடமொழி என்பது சிறப்பாக சம்ஸ்கிருத மொழியையே பிரதிநிதித்துவப்படுத்தும் சொல்லாக இங்கு கையாளப்படுகின்றது. அதன் வழி திருமந்திரம் தாம் கூறும் செய்தியாகிய

சிவாகமங்களின் செய்திகளின் சாரம் எவ்வாறு இடம்பெறுகின்றது என்றும், அதனை அறிந்துகொள்ள எவ்வளவு தூரம் வடமொழிப் புலமை வேண்டும் என்பதனையும், வடமொழியின் மூலமரபு எவ்வாறு சாரப்படுத்தப்பட்டுள்ளது என்பதனையும் அறிந்துகொள்ள வழிகாட்டியாக அமைவதுமே இவ்வாய் வின் நோக்கமாக அமைகின்றது.

திருமந்திரம்

திருமூலரால் இயற்றப்பட்டதும், சைவத்திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக அமைவதுமே திருமந்திரம் ஆகும். இது தமிழ் மூவாயிரம்[1] என்று அழைக்கப்படும். இதில் 'மந்திரம்' எனும் சொற்பதமே வடமொழிப் பதமாகும். சிவாகமங்களில் மந்திரோத்தார விதிபடலம்[2] சிறப்பாகக் கூறு கின்றது. 'நினைப்பவனைக் காப்பது மந்திரம்' எனப் பொருள் கொள்ளப்படு கின்றது. உயர்த்த சிந்தனையில் மனதுட் கண்ட காட்சியே மந்திரம் எனவும் கொள்ளப்படுகின்றது. இதனை 'ரிஷி' எனும் சொற்பதம் உணர்த்துகின்றது.[4]

சிவாகமங்களின் மந்திரோத்தாரவிதி வதிபடலம் ஒவ்வொரு எழுத்துக்களும் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பதனைக் கூறிநிற்கும் தன்மையன.[5]

> நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த
> நிறைமொழியாக மறைமொழி தானே மந்திரம் என்ப [6]

என்பார் தொல்காப்பியர். இந்நிலையில் மறைமொழியை மந்திரம் எனத் தமிழ் இலக்கியமரபு கூறுகின்றது. சிவாகமங்கள் இருபத்தெட்டில் காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், சுப்பிரபேதம், மகுடம் எனும் ஏழு மூலசிவாகமங்களையும் வேறு இரு ஆகமங்களான இயாமள தந்திரம், காலோத்தர ஆகமம் என்பனவற்றிருந்தும் சாரமாகத் திருமந்திரம் அமைந் தமை பற்றிய மரபு காணப்படுகின்றது [7]. எனினும் திருமந்திரம் தனித் தமிழில் அமைந்த தன்மையானது என்றும், தமிழில் தோன்றிய சாத்திரநூல் என்றும், தமிழ் ஆகமம் என்றும் கொள்ளும் மரபுகள் காணப்படுகின்றன. இதன்வழி திருமந்திரம் தமிழில் சாத்திரமாகவும் தோத்திரமாகவும், தத்துவமாகவும் அமைந்த நூல் என்பது முடிந்த முடிவாகின்றது.

சிவாகமமும் திருமந்திரமும்

சிவாகமங்கள் தந்திரங்கள்[8] என்று அழைக்கப்படும் தன்மையன. பின்பற்றுபவனைக் காப்பது தந்திரம்[9] எனும் பெயர் சிவாகமங்களில் விரிவுத்தன்மைக்கு ஏற்ப மஹாதந்திரம் என்றும் அழைக்கும் மரபு காணப் படுகின்றது.[10] இதற்கு மேலாக சிவாகமங்களின் தோற்றுவாய் பற்றி தந்திராவதாரப்படலம் என்றே கூறுவது குறிப்பிடத் தக்க அம்சமாகும். இந்நிலையில்,

பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்
உற்ற நல் வீரம் உயர்வாதுளம் சிந்தியம்
மற்றங் வியாமள மாகுங்காலோத்தந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்ல மகுடமே"

எனும் பாடல் தெளிவுபடுத்தும் அதேவேளை வாய்மொழி இலக்கிய மரபே பின்பற்றப்பட்டு வந்தது என்பதனை,

எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே.[12]
எண்ணில கோடியும் நீர்மேலி எழுத்தே.[13]

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இம்மரபில் காமிகம், காரணம், அஜிதம், ரௌரவம், மகுடம், சுப்ரபேதம் முதலான ஆகமங்களின் தந்திராவதாரவிதிபடலம்[14] மிகவிரிவாக அமைந்து விளங்குவதனையும் அதன் சாரத்தையே,

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சென டிருபத்து மூன்றுன ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்து தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.[15]

எனக் கூறி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயமே ஆகம சாரம் என்பதனை உணர்த்து வதற்கு ஏற்ற உதாரணமாகும்.

குருமரபில் சிவாகமங்களை தாம் பெற்றதாக திருமூலர் குறிப்பிடு கின்றார்.[15]

திருமந்திரமும் சைவசித்தாந்தமும்

சிவாகமங்களின் சாரமே திருமந்திரம் எனக் கூறப்பட்டது. எனினும் சிவாகமங்களின் வழியே சிவாகமங்களின் ஞானபாதம் சைவசித்தாந்த

உண்மைகளைப் பேசுகின்றன. சைவசித்தாந்தம் ஒரு சமயதத்துவமாகிய வகையில் அதனது பரிணாமத்தன்மை தனித்துவமாக மிளிர்கின்றது. சைவசித்தாந்தம் எனும் சமயதத்துவத்தை திருக்கோவில், சைவ வாழ்வியல், சமயம், வழிபாடு, கிரியை, யோகம், ஞானம் எனும் அனைத்து அம்சங் களிலும் காணத்தகும் தன்மையாகின்றது. இம்மரபுகளை நோக்கும் தன்மை யில் சிவம் என்பது சிவப்பரம் பொருளையும் அதை உணர்த்தும் தன்மையில் சைவம் ஆனது. எனினும் சிவாகமம் என்பதே சித்தாந்தம் எனும் பொருளில் சிவாகமங்களில் பொருள் சுட்டப்படுகின்றது.

சைவசித்தாந்தம் என்னும் பதத்தினை சைவம் + சித்தாந்தம் என இணைத்துக்கொண்ட மரபை முதன்முதலில் காமிகாகாமத்தில் காணமுடி கின்றது.[17]

சித்தாந்தம் எனும் பதம் அஷ்டபிரகரண நூல்களில் நன்கு விளக்கப் படுகின்றது.[18] இம்மரபிலிருந்து நோக்குகையில் திருமந்திரம்.

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
நற்பரங் கண்டுளோர் சைவசித்தாந்தரே.[19]

என 'சைவசித்தாந்தம்' எனும் பதத்தினை பயன்படுத்துகின்றமை மனங்கொள்ளத்தக்கது.

திருமந்திரத்தில் வடமொழிச் செல்வாக்கு

திருமந்திரம் தமிழ் ஆகமம் என்பதும் சாஸ்திரம் என்பதும், திரு முறையில் பத்தாம் திருமுறை என்பதும் சிறப்பாக சம்ஸ்கிருத மொழியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சொல்லாட்சியாகவே கையாளப்படுகின்றது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் திருமந்திரத்தில் வடமொழிச் சொற்களின் பயன்பாடு அவ்விதமே விளங்கின்றமை முதலில் மனங்கொள்ளத்தக்கது. திருமூலர்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே'[20]

என நல்ல தமிழில் சைவப்பண்பாடு சார்ந்தும் சிறப்பாக சிவாகமம் சார்ந்ததுமான பண்பாட்டுச் சொல்மரபுகளைக் கையாள்வது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந்நூல் சாஸ்திரம் எனும் உயர்வு பெறுகின்றது.

"சர்வஸ்ய லோசனம் சாஸ்திரம்'

'அனைத்துவிடயங்களுக்கும் கண்ணாக அமைவது சாஸ்திரம்' ஆகும்.

சிவாகமமரபு, குருமரபு, சாஸ்திரமரபு என்னும் மூன்றும் ஒன்று சேரப்பட்ட சிறப்பே திருமந்திரத்திற்குரிய தனித்தன்மையாகின்றது. இவற்றை யடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது 'வைதிக சைவநெறி' மரபுகள் நன்கு கையாளப்படுவது மனங்கொள்ளத்தக்கது.[21]

திருமந்திரத்தில் சம்ஸ்கிருதச்சொற்கள் அவ்விதமே கலைச்சொல் மரபில் கையாளப்படுகின்ற அதேவேளை சம்ஸ்கிருத மூலங்களாக அமைந்த சாஸ்திரங்களைத் திருமூலர், தமது நூலின் மூலநூல்களாகக் கொண்டார். இம்மரபின் அடிப்படையிலேயே திருமந்திரம் ஒன்பது ஆகமங்களின் சாரம் என்பது புலனாகின்றது. இதனடிப்படையில் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங் களிலும் எவ்வாறு சொற் செல்வாக்கினையும், மூலநூற் செல்வாக் கினையும் வடமொழி பெற்றுள்ளது என்பதனை நோக்குவோம்.

சம்ஸ்கிருத மொழியின் தோற்றுவாயும் சிறப்பும்

சம்ஸ்கிருத மொழியின் தோற்றுவாயாக அமைவது 'மாஹேஸ்வர சூத்திரங்கள்' ஆகும். சிவனது வடிவங்களுள் நடராஜவடிவத்தின் உடுக்கு ஒலியிருந்து தோன்றிய பதினான்கு ஒலிகளே மாஹேஸ்வர சூத்திரங்கள் ஆகின்றன. இம்மரபு குருமரபிலும் சமயமரபிலும், பண்பாட்டு மரபிலும் சமயத் துடன் இணையும் தன்மையதாக ஆகின்றன. பாணிணி எனும் ஆசிரியர் தாம் இயற்றிய பாணிணீய சூத்திரமே இம்மொழிக்கு இலக்கணமாக அமைவதோடு பாணிணியே சம்ஸ்கிருத மொழியின் தந்தையாகின்றார்.[22]

சைவசமய இலக்கியங்களும் வடமொழியும்

சைவசமயமரபின் மூல ஊற்றுக்கள் வேதங்கள் முதல் பரந்தும் விரிந்தும் காணப்படுகின்றன. அம்மரபில் வேதங்கள் நான்கும், வேதாங்கங்

கள் ஆறும், அதைத்தொடர்ந்த தனுர்வேதம், காந்தர்வவேதம், ஆயுர்வேதம் முதலானவையும் தர்மசாஸ்திரங்களும், மற்றும் இதிகாசங்கள், மஹா புராணங்கள், சிவாகமங்கள், உபாகமங்கள், சாக் தந்திரங்கள், கிரியை நூல்கள், தத்துவ நூல்கள், சைவசித்தாந்த நூல்கள் எனப் பல்வேறுபட்ட உரைகளுடன் வடமொழி மூலமாக மிக விரிந்ததோர் சாஸ்திரமரபும் சிந்தனைமரபும் காணப்படுகின்றது. இம்மரபுகளின் தொடர்ச்சியினையும் பல்வேறுவிதமான சொற்பிரயோகங்களின் விளக்கங்களையும் சாஸ்திரக் கண்டு நோக்குவதே பொருத்தமாக அமையும். இந்நிலையிலேயே பல்வேறு பட்ட கலைச்சொற்பயன்பாடு காணப்படுகின்றன. அவற்றினைப் புரிந்துகொள் வதற்கு சம்ஸ்கிரு மொழியறிவும், சாஸ்திரங்களின் புலமையும் அவசிய மாகின்றது. இவற்றினைத் துணைக்கொண்டு திருமந்திரத்தின் வடமொழிச் செல்வாக்கினை மேலோட்டமாக ஒவ்வோர் தந்திரங்களிலும் எவ்வாறு சொற்மரபிலும், மூலநூல் மரபிலும் பெற்றுள்ளது என்பதனை நோக்குவோம்.

பாயிரம்

திருமந்திரத்தில் பாயிரம் எனும் பகுதி, 1. கடவுள் வாழ்த்து (50), 2. வேதச்சிறப்பு (06), 3. ஆகமச்சிறப்பு (10), 4. குருபாரம்பரியம் (06), 5. திருமூலர் வரலாறு (22), 6. அவையடக்கம் (04), 7.திருமந்திரத்தொகைச் சிறப்பு (02), 8. குருமட வரலாறு (02), 9. திருமூர்த்திகளின் சேட்டகனிட்ட முறைமை (10) என 112 பாடல்கள் கொண்டதாக விளங்குகின்றது.

இப்பகுதியில் கடவுள் வாழ்த்தாக விளங்கும் சிவபரம் பொருள் அஷ்டமூர்த்தி வடிவினனாவான். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், எசமானன் எனும் எட்டுவடிவினனாவான். இவ்வடிவத்தின் விரிவினை சிவாகமங்கள் சிறப்பாக எடுத்தோதுகின்றன. இவ்வடிவத்தின் பெருமையையே மகாகவி காளிதாசர் தனது அபிஞ்ஞான சாகுந்தலத்தின் முதற்பாடலில் சுட்டுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.[23]

சிவனே மேலான தெய்வம் எனும் மேன்மையைத் திருமந்திரப் பாடல்களில் உதாரணமாக நோக்கலாம்.24 இவ்வியல்புகளைக் கூறும் தன்மையான பாடல்கள் ஆதிசங்கரின் சிவானந்த லஹரியில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

சைவமரபில் வேதம், ஆகமம் ஆகிய இரண்டையும் முதற் பிரமாண மாகக் கொண்டு பாயிரம் அமைந்து விளங்குவது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

ஆகமச்சிறப்பு எனும் பகுதியில் உபதேசச் சிறப்பும், செவிவழி உபதேசமாக குருமரபும், சந்தானமும் போற்றப்படுகின்றமை இங்கு குறிப் பிடத்தக்கது. சிவாகமங்கள் சிவாகம உபதேசமரபில் 'சம்பந்தம்' தனித்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.[25]

என்பதன் விரிவு சிவாகமங்களின் தந்திர அவதார படலங்களில் விரிவுபடக் கூறப்படுகின்றன. இவற்றினைச் சிறப்பாக காரணம், ரௌரவம் ஆகிய ஆகமங்களில் தந்திராவதாரப்படலத்தில் விரிவுபடக் காணமுடிகின்றது. இவ்விரிவில் சிவாகமங்களின் தோற்றம், சதாசிவ மூர்த்தியின் அணிகலன், கேட்டவர்கள், உபாகமங்கள் எனும் விரிவுகள் ரௌரவாகமத்தில் நிறை வாகவும் விரிவாகவும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.[26]
திருமந்திரத்தில் இடம்பெறும் சிவாமங்களாக,

பெற்றால் ஆகமங்காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர் சிந்தம் வாதுளம்
மற்றங் வியாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரபஞ் சொல்லு மகுடமே.[27]

எனச்சுட்டுவதிலிருந்து மூலசிவாகமங்களான காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், சுப்ரபேதம், மகுடம் எனும் ஏழும், சாக்ததந்திரமான ருத்ரயாமள தந்திரமும், தொகுப்பு நூலான காலோத்தரமும் மூலமாக இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இதன் வழி நோக்குகையில் முறையே:

காரணாகமம்	1ம் தந்திரம்
காமிக ஆகமம்	2ம் தந்திம்
வீர ஆகமம்	3ம் தந்திரம்
சிந்திய ஆகமம்	4ம் தந்திரம்

வாதுள ஆகமம்	5ம் தந்திரம்
ருத்ரயாமளம் தந்திரம்	6ம் தந்திரம்
காலோத்தர ஆகமம்	7ம் தந்திரம்
சுப்பிரபேத ஆகமம்	8ம் தந்திரம்
மகுட ஆகமம்	9ம் தந்திரம்

என இடம்பெறுகின்றன. ஒவ்வொரு பகுதியும் தந்திரம் என்றே அழைக்கப்படுகிறது. சிவாகமங்களைப் போன்றே இவையும் தந்திரம் என அழைக்கப்படும் உட்பிரிவு தனித்துவத்தை மிக்க சிவாகமச் செல்வாக்கு ஆகும். அத்துடன் தந்திரம் என்பது 'பின்பற்றுபவர்களைக் காப்பது' எனும் உயர் வுடைய குறிப்பிடத்தக்கது.

குருபாரம்பரியத்தில் நந்தி எனும் சிறப்புப் பெறுபவர் ஸ்ரீகண்ட ருத்ரர் ஆவார். இவரிட மிருந்து பெற்ற உபதேசத்தின் மேன்மை வேதசிவாகம பேதமின்மையும் சிறப்பும் தனித்துவமாகும். ஸ்ரீகண்டருத்ரர் தமது பிரம்மசூத்திரத்திற்கான சிவாத்வைத சைவபாடியத்தில், 'வேத சிவாகமங் களுக்கு பேதம் காண்கிலோம். வேதங்களே சிவாகமங்கள்' என அவற்றை இறைநூல் எனும் உயர்வுடன் கொள்ளும் மரபு தனித்துவமுடையது.

இம்மரபுகளுக்கு மேலாக சிவாகமங்களில் உபதேசக்கிரமத்தில் காமிகம் முதல் சுப்ரபேதம் வரையாக பத்து (10) சிவாகமங்கள் சிவபேதம் என்றும், விஜயம் முதல் வாதுளம் வரையாகப் பதினெட்டு (18) சிவாகமங்கள் ருத்ரபேதம் என்றும், கொள்ளப்படுகின்றன. அவற்றுள் சிவபேதமான காரணம், காமிகம், சிந்தியம், சுப்ரபேதம் எனும் நான்கு மூலசிவாகமங்களை யும், ருத்ரபேதமான வீரம், வாதுளம், மகுடம் ஆகிய மூன்று மூல சிவாகமங் களையும் திருமந்திரத்தின் மூல நூலாகத் திருமூலர் கொள்ளும் அதே வேளை சாக்ததந்திரத்தில் ருத்ரயாமள தந்திரத்தையும் சிவாகமங்களின் ஞானபாதத்தொகுப்பு நூலான காலோத்தர ஆகமத்தையும் மூலநூலாகக் கொண்டு சிறப்பாக சிவனின் மேன்மையினையும், சைவத்தின் வாழ்வியலை யும் சாஸ்திரங்கள் விதித்த வழிமுறையில் விளங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது. சிவாகமங்களுள் இன்று பதிப்பிக்கப்பட்ட மூலசிவாகமங்களுள் இத்திருமந்திரத்தில் சுட்டப்படுகின்ற காரணம், காமிகம், மகுடம் வாதுளம் ஆகிய நான்கும் சில பகுதிகளும், சுப்ரபேதம், வீரம் ஆகிய இரண்டும் நான்குபாதங்களுடனும் பதிப்பிக்கப்பட்ட சிவாகமங்கள் ஆகும். சிந்தியம்

பதிப்பாகப்படாத மூலசிவாகமம் ருத்ரயாமளமும் பதிப்பிக்கப்பட்ட சாக்த தந்திரம் ஆகும். அதேபோல் காலோத்தர ஆகமம் சார்த்த த்ரிசதி காலோத் தரம் எனபட்ட ராம கண்டரது விருத்தியுடையனும் பதிப்பிக்கப்பட்ட நூலாகும். இம்மூலாகமங்களின் செய்தி அல்லது சாரம் எவ்விதம் திருமந்திரத்தில் பிரதிபலிக்கின்றது. என்பது மிகவும் நுணுகி ஆய்வுசெய்ய வேண்டிய அவசியமும் தேவையுமாகும்.

திருமூலர் தென்னிந்தியாவில் கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனும் அறிஞர்களது கருத்துப்படி சிவாகமங்களின் உரையாசிரியர்கள், அஷ்டப்பிரகரணம் இயற்றி வடமொழிச் சைவசித்தாந்த மரபை மேம்படுத்தி யவர்கள், பிரஸ்தானத்திரயத்திற்கு உரையெழுதியும், ஷண்மதத்திகளையும் பிரதிஸ்தாபனம் செய்த சங்கரர் ஆகியோரது சமகால சிந்தனையாருள் தமிழில் சைவசித்தாந்த தத்துவத்தை சிவாகம சாரமாகவும் சாஸ்திரமாகவும் வெளிக்கொணர்ந்த பண்பு காலத்தின் ஒரு சமுதாயத் தேவையாகக் காணப்படுகின்றது.

முதலாந் தந்திரம்

முதலாம் தந்திரம் காரணாகமத்தின் சாரம் எனக்கொள்ளப்படு கின்றது. இத்தந்திரத்தில் உபதேசம் (113–142), யாக்கை நிலையாமை (143 – 167), செல்வம் நிலையாமை (168–176), இளமை நிலையாமை (177–186), உயிர்நிலையாமை (187–196), கொல்லாமை (197–198), புலால் மறுத்தல் (199, 200), பிறன்மனை நயவாமை (201 – 208), நல்குரவு (209–213), அக்கினிகாரியம் (214–223), அந்தணரொழுக்கம் (224 – 237), இராசதோடம் (238–247), வானச்சிறப்பு (248, 249), தானச்சிறப்பு (250), அறஞ்செய்வான் திறம் (251–259), அறஞ்செய்யான் திறம் (260–269), அன்புடமை (270 – 279), அன்புசெய்வாரை அறிவன் சிவன் (280 – 289), கல்வி (290 – 299), கேள்வி கேட்டமைதல் (300–309), கல்லாமை (310 – 319), நடுவுநிலமை (320 – 323) கள்ளுண் ணாமை (324 – 336) என இருபத்து நான்கு அதிகாரங்கள் இடம்பெறுகின்றன.

திருமந்திர அதிகாரத்தின் பெயர்களே தமிழ் மொழிமரபில் வடமொழியாக்கமாக தற்சமமாகவும், தற்பவமாகவும் பயன்படுத்தும் இயல்பு காணப்படுகின்றது. இவற்றுள் உதாரணமாக வைதிக மொழியை திருமந்

திரம் ஆரியமொழி என்றும், சம்ஸ்கிருத மொழியை வடமொழியென்றும் அழைப்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. இதற்கு உதாரணமாக,

ஆரியமும் தமிழும் உடனே சொல்லி[28]

தமிழ்ச் சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்[29]

என்பனவற்றில் வைதிக மொழி, ஆரியம் என்றும் சம்ஸ்கிருத மொழி வடசொல் என்றும் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திருமந்திரத்தின் முதலாம் தந்திரத்தின் வடமொழிச் செல்வாக்கு எனும் நிலையில் உதாரணமாக அக்கினி காரியம் (214 – 223) எனும் பகுதியை நோக்குவோம். சிவாகமங்களுள் காரண ஆகமத்தை பிரதி நிதிப்படுத்தும் இத்தந்திரத்தில் அக்னிகார்ய விதி என பூர்வ காரணாகமம் 22ம் படலம் உத்தரகாரணாகமம் 20வது படலம் ஆகியவற்றில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு சிவாக்னியை எவ்வாறு தோற்றுவிப்பது என்பதற்கான கிரியை விபரங்களும் ஒழுங்கும் நியதிகளும் கூறப்படுகின்றன. சிவாக்னியின் வகைகளும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் முறைமைகளும் கூறப்படுகின்றன. இம்மரபு திருமந்திரம் சொல்லும் பகுதியில் இடம்பெறவில்லை. எனினும் பத்ததிரமரபில் அகவழிபாடாக அமையும் அந்தர்யாகத்தினையே திருமூலர் சுட்டுகின்றார். இதன்வழி சிறப்பாக அகோர சிவாச்சாரியார் கூறும் அந்தர்யாக விதிமுறையின் தன்மைகள் திருமூலரின் திருமந்திரத்தில் அவ்வாறே பிரதிநிதித்துவப்பட தமிழில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்க தாகும்.[30]

இரண்டாந் தந்திரம்

திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரம் காமிக ஆகமத்தின் சாரம் எனக் கொள்ளப்படுகிறது. இதில் பாடல்கள் 337–548 வரையாக அமைந்து காணப்படுகின்றன. அவற்றின் வழிநோக்குகையில், அகத்தியம் (337–338), பதிவலியில் வீரட்டம் எட்டு (339–346), இலிங்கபுராணம் (347 – 352), தக்கன் வேள்வி (353 – 361), பிரளயம் (362 – 366), சக்கரப்பேறு (367–371), அடிமுடிதேடல் (372–380), சர்வ சிருஷ்டி (381 – 410), திதி (411 – 430), திரோபவம் (431 – 440), அநுக்கிரகம் (441 – 450), கர்ப்பக்கிரியை (451 – 491), மூவகைச் சீவவர்க்கம் (492 – 500), பாத்திரம் (501 – 504), அபாத்திரம் (505–508), தீர்த்தம் (509–514), திருக்கோயிலிழிவு (515–

519), அதோமுகதர் சனம் (520 – 525), சிவநிந்தை (526 – 529), குருநிந்தை (530 – 536), மயேசுரநிந்தை (537–538), பொறையுடைமை (539–542), பெரியாரைத்துணைக் கோடல் (543–548) என பகுக்கப்பட்டுள்ளன.

இத்தலையங்கங்களில் பெரும்பாலானவை சம்ஸ்கிருத மொழி யிலேயே இடம்பெறுகின்றமை மனங்கொள்ளத்தக்கது. வடமொழி மூலநூற் செல்வாக்கில் இன்று கிடைத்த காமிக ஆகமம் கிரியாபாதம் மாத்திரம் காணப்படுகின்றமையும் மனம் கொள்ளத்தக்கது. வடமொழி மூலநூற் செல்வாக்கில் ஒரு உதாரணமாக பதிவலியில் வீரட்டம் எட்டு என்பதனை நோக்கலாம். சிவனது திருவுருவங்கள் சிவாகமங்களில் மூர்த்திலக்ஷணாங் களாக விபரிக்கப்படுகின்றன. இம்மூர்த்திகளின் வடிவங்களுக்குரிய தெய்வீகவியல் வரலாறுகளை புராணங்கள் கூறிநிற்கின்றன. இம்மரபில் சிவனது அட்டவீரட்டச் செயல்கள் தென்னிந்தியாவிற்கேயுரிய தனித்துவ மான சிறப்புடையன. இதற்கு ஏற்ற தலமகிமைகளும் தென்னிந்தியாவிற்கே உரியனவாக விளங்குவது இங்கு மனங்கொள்ளத்தக்கது.[31]

மூன்றாந் தந்திரம்

திருமந்திரத்தின் மூன்றாம் தந்திரம் வீர ஆகமத்தின் சாரம் என்றே அழைக்கப்படும் மரபுடையது. இத்தந்திரத்தில் 549–883 வரையான பாடல்கள் இடம்பெறுகின்றன. இதன் வழி அதன் விரிவை நோக்குகையில், அட்டாங்கயோகம் (549 – 552), இயமம் (553–554), நியமம் (555–557), ஆசனம் (558–563), பிராணயாமம் (564–577), பிரத்தியாகாரம் (578–587), தாரணை (588–597), தியானம் (598–617), சமாதி (618–631), அட்டாங்கயோகப் பேறு (632–639), அட்ட மாசித்தி (640 – 711), கலை நிலை (712 – 723), சரீரசித்தி உபாயம் (724–739), காலசக்கரம் (740–769), ஆயுள் பரீட்சை (770–789), வாரசரம் (790–796), வார சூலம் (797 – 798), கேசரியோகம் (799–824), பரியங்க யோகம் (825–844), அமுரி தாரணை (845–850), சந்திரயோகம் (851–883) எனப் பகுக்கப்பட் டுள்ளன. இங்கு யோகத்தின் மேன்மை நன்கு பேசப்படுகின்றன. சிவாகமங் களுள் யோகம் பற்றிப் பேசும் நிலையில் மகுடாகமமே அஷ்டாங்க யோகம் பற்றிப்பேசும் மூலசிவாகமாகும்.[32] அதனை அடியொற்றி இத்திருமந்திரத் தில் அஷ்டாங்கயோக முறைமை கூறப்பட்டுள்ளமையும் அதே பாகுபாடும்

சொற்பயன்பாடும் இடம்பெறுகின்றமை வடமொழிச் செல்வாக்கின் மூல நூற் செல்வாக்கின் பிரதிபலிப்பாக அமைவது குறிப்பிடத்தக்கது.

நான்காந் தந்திரம்

திருமந்திரத்தின் நான்காம் தந்திரம் சிந்திய ஆகமத்தின்சாரம் என்பர். இத்தந்திரத்தில் 884–1418 வரையான பாடல்கள் இடம்பெறுகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளை நோக்குகையில், அசபை (884–913), திருவம்பலச் சக்கரம் (914–1002), அருச்சனை (1003–1021), நவகுண்டதம் (1022–1044), சக்திபேதம் – திரிபுரை சக்கரம் (1045–1074), வயிரவி மந்திரம் (1075–1124), பூரண சத்தி (1125–1154), ஆதாரவாதேயம் (1155–1254), ஏரொளிச்சக்கரம் (1255–1290), வயிரவச் சக்கரம் (1291–1306), புவனாபதி சக்கரம் (1307–1318), நவாக்கரி சக்கரம் (1319 – 1418) என்னும் பொருளடக்கங்கள் காணப்படுகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருட்தலையங்கங்களிற் பெரும்பாலானவை சம்ஸ்கிருத மொழிமூலமுடையவனவும், சிறப்பாக சிவாகம மற்றும் சாக்த தந்திரப் பயன்பாட்டிற்குரியனவுமான சொற்பிரயோகங்களுமேயாகும். இத்தந்திரத்தில் வடமொழி மூலநூற் செல்வாக்கில் புவனாபதிக் சக்கரம் எனும் பகுதியின் முதலாவது பாடல்;

ககாரதி யோரைந்துங் காணிய பொன்மை
அகாராதி யோரரா றந்த்தமே போலும்
சகராதி யோர்நன்குந் தான் சுத்தி வெண்மை
ககாராதி மூவித்தை காமிய முத்தியே.[33]

எனக்கூறுகின்றது. இப்பாடலின் தெளிவில் ககர, ஹகர, ஸகர எனும் மூவெழுதின்களுள்ளும் ஹகாரம் தவிர்ந்த ஏனைய எழுத்துக்கள் தமிழ்வழக்கில் பேசப்படுகின்றன. இப்பாடலில் ஸ்ரீவித்தியா மூலமந்திரமான 'பஞ்சதசாக்ஷரீ மந்திரம்" பேசப்படுகின்றது. காதிவித்யா, ஹாதிவித்யா, ஸாதிவித்யா எனும் மூன்று வித்தைகளே இடம்பெறுகின்றன. இக்கருத்தின் தெளிவினை ஆதிசங்கரர் தமது சௌந்தர்ய லஹரீயில் தெளிவுபடக் கூறியுள்ளார். இதற்கு லஹமீரரின் உரைவிளக்கம் தனித்துவம் மிக்க விளக்கம் அளிப்பதாக அமைகின்றது.[35]

ஐந்தாந் தந்திரம்

திருமந்திரத்தின் ஐந்தாம் தந்திரம் வாதுளாகமத்தின் சாரம் என்பர். இத்தந்திரத்தில் 1419–1572 வரையான பாடல்கள் இடம்பெறுகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளை நோக்குகையில், சுத்தசைவம் (1419–1422), அசுத்தசைவம் (1423–1426), மார்க்கசைவம் (1427–1437), கடுஞ்சுத்த சைவம் (1438–1442), சரியை (1443–1450), கிரியை (1451–1456), யோகம் (1457–1466), ஞானம் (1467–1476), சன்மார்க்கம் (1477–1487), சகமார்க்கம் (1488–1494), சற்புத்திரமார்க்கம் (1495–1501), தாசமார்க்கம் (1502–1506), சாலோகம் (1507, 1508) சாமீபம் (1509), சாரூபம் (1510, 1511), சாயுச்சியம் (1512, 1513), சத்திநிபாதம் – மந்தம் (1514–1517), சத்திநிபாதம் – மந்ததரம் (1518–1522), சத்திநிபாதம் – தீவிரம் (1523–1526), சத்திநிபாதம் – தீவிரதரம் (1527–1529), புறச்சமய தூஷணம் (1530–1549), நிராகாரம் (1550–1556), உட்சமயம் (1556–1572), என்றவாறாகப் பொருளடக்கம் காணப்படுகின்றது.

இத்தந்திரத்தில் சைவசமயத்தின் உட்பிரிவுகள் கூறப்படுகின்றன. சைவசித்தாந்த தத்துவ மரபில் மோக்ஷத்துக்குக் காரணமான வழிகள் மார்க்கங்கள் எனக் கூறப்படுகின்றன. அவ்வகையில் சரியை, கிரியை, யோகம், ஞானம், எனும் நான்கு பாதங்களும் அவற்றினூடாக அடையத்தக்க மார்க்கங்களான தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பனவும் இவற்றினூடாக அடையப்பெறும் முத்திகளான சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பனவும் கூறப்படுகின்றன. இங்கு பசு, பதியாம் தன்மையடைந்து – சிவமாம் தன்மையடைந்து – சிவானந்தமடையும் தன்மை தெளிவுபடக் கூறப்படுகின்றது. இதனை,

> **சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது**
> **சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்**
> **சைவஞ் சிவந்தனைச் சாராமல் நீவுதற்**
> **சைவஞ் சிவானந்தஞ் சாயுச்சியமே.**[35]

என்று தெளிவுப்படுத்தும் தன்மை சிறப்புடையது. மேலும், இறைவன் திருவருள் பெறும் தன்மையாகிய சத்திநிபாதம் என்பது மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகையாக விளங்கப்படுத்தப்படுவது

சிறப்புடையதாகும். இந்நிலை சைவசித்தாந்த தத்துவத்தில் மிக உயரிய தன்மையை தெளிவுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆறாவது தந்திரம்

திருமந்திரத்தின் ஆறாம் தந்திரம் வியாமள ஆகமத்தின் சாரம் என்பர். இங்கு ருத்ரயாமளம் எனும் தந்திரத்தின் பெயரே வியாமள ஆகமம் எனச் சுட்டப்பெறுகின்றது. இத்தந்திரத்தில் 1573–1703 வரையான பாடல்கள் இடம்பெறுகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளாக சிவகுரு தரிசனம் (1573–1589), திருவடிப்பேறு (1590–1604), ஞாத்ருஞானஞேயம் (1605–1613), துறவு (1614–1623), தவம் (1624–1632), தவதூடணம் (1633–1644), அருளுடைமையின் ஞானம் வருதல் (1645–1654), அவவேடம் (1655 – 1660), தவவேடம் (1661–1664), திருநீறு (1665–1667), ஞானவேடம் (1668–1675), சிவவேடம் (1676–1679), அபக்குவன் (1680–1689), பக்குவன் (1690–1703) என்றவாறாகப் பொருளடக்கம் காணப்படுகின்றது.

இத்தந்திரத்தில் பக்வன், அபக்வன், ஞானஞாத்ருஞேயம் முதலான சொற்பயன்பாடுகள் சிவாகம மரபிலேயே வடசொற்செல்வாக்காக அமைந்து காணப்படுகின்றது. விபூதி எனும் திருநீற்றின் மகிமை (1665–1667) விபரிக்கப்படுவதில், சிவவடிவத்தில் கங்காள மூர்த்தியின் மேல் பூசிய மேன்மை விபரிக்கப்படுகின்றது. அதனையே,

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.[36]

இப்பாடலில் கங்காளன் எனும் சிவடிவம் சிவாகமங்களில் மிக அழகாகச் சித்தரிக்கப்படுவது மனங்கொள்ளத்தக்கது.[37]

ஏழாந்தந்திரம்

திருமந்திரத்தின் ஏழாந்தந்திரம் காலோத்தர ஆகமத்தின் சாரம் என்பர். இத்தந்திரத்தில் 1704–2121வரையான பாடல்கள் இடம்பெறுகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளாக ஆறாதாரம் (1704–1711), அண்டலிங்கம்

(1712–1725), பிண்டலிங்கம் (1726–1729), சதாசிவலிங்கம் (1730–1752), ஆத்மலிங்கம் (1753–1759), ஞானலிங்கம் (1760–1762), ஞானலிங்கம் (1763 – 1772), சிவலிங்கம் (1773–1777), சம்பிரதாயம் (1778 – 1791), திருவருள் வைப்பு (1792 – 1813), அருளொளி (1814 – 1822), சிவபூசை (1823–1846), குருபூசை (1847 – 1856), மகேசுவரபூசை (1857–1867) அடியார் பெருமை (1868 – 1883), போசனவிதி (1884 – 1885) பிட்சாவிதி (1886–1891), முத்திரை பேதம் (1892–1901), பூரணக்குகை நெறிச்சமாதி (1902–1909), சமாதிக்கிரியை (1910–1929), விந்துற்பனம் (1930–1936), விந்துஜயம் – போக சரவோட்டம் (1937–1974), ஆதித்த நிலை அண்டாதித்தன் (1988–1992), ஞானாதித்தன் (1993–20000, சிவாதித்தன் (2001–2004), பசுவிலக்கணம் – பிராணன் (2005, 2006), புருடன் (2007–2010), சீவன் (2011–2014), பசு (2015–2016) போதன் (2017–2030) ஐந்திந்திரியம் அடக்குமுறைமை (2031–2043), அசற்குரு நெறி (2044–2048), சற்குருநெறி (2049–2066), கூடாவெழுக்கம் (2067–2083), கேடு கண்டிரங்கல் (2084–2101), இதோபதேசம் (2102 – 2121) என்றவாறாகப் பொருடளக்கம் காணப்படுகின்றது.

சிவவடிவங்களுள் அருவுருவத் திருமேனியாக விளங்கும் சிவவடிவம் சிவலிங்கத்திருமேனியாகும்.[38] சிவலிங்கவடிவில் கரந்துறையும் இறைவன் சதாசிவவடிவமாகும். சதாசிவ வடிவத்தின் சூக்ஷ்ம வடிவம் மிகவிரிந்த தன்மையது. இதனை அவ்வடிவத்தின் தியான சுலோகம் கூறிநிற்கின்றது.[39] அத்தகைய சிவவடிவத்தின் மேன்மையையும், ஆத்மார்த் சிவபூஜையினையும் திருமந்திரம் விபரித்துக்கூறும் தன்மை ஒப்புநோக்கத் தக்கது.[40] இத்தகைய மரபில் ஓர் ஒப்பு நோக்காக சிவாகம மூல நூற்தன்மை திருமந்திரத்தில் செல்வாக்குப்பெற்று விளங்குவது ஒப்பு நோக்கத்தக்கது.

எட்டாந் தந்திரம்

திருமந்திரத்தின் எட்டாம் தந்திரம் சுப்பிரபேத ஆகமத்தின் சாரம் என்பர். இத்தந்திரத்தில் 2122–2648வரையான பாடல்கள் இடம்பெறு கின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளாக, உடலிற்பஞ்ச பேதம் (2122–2138), உடல் விடல் (2139–2141), அவத்தை பேதம் – கிழாலவத்தை (2142–2166), மத்திய சாக்கிராவத்தை (2167–2183), அத்துவாக்கள் (2184–2186), சுத்த

நனவாதிபருவம் (2187–2226), கேவலசகல சுத்தம் (2227–2268), பராவத்தை (2269–2295), முக்குணநிர்க்குணம் (2296), அண்டறிபேதம் (2297–298), பதினோராந்தானமும் அவத்தையெனக்காணல் (2299–2301), கலவு செலவு (2302–2303), நின்மலாவத்தை (2304–2354), அறிவுதயம் (2355–2369), ஆறந்தம் (2370–2404), பதிபசுபாசம் வேறின்மை (2405–2434), முக்குற்றம் (2435–2436), முப்பதம் (2437–2444), முப்பரம் (2445–2451), பரலட்சணம் (2452–2465), முத்துரியம் (2466–2473), மும் மூத்தி (2474–2477), முச் சொரூபம் (2478–2484), முக்கரணம் (2485–2487), முச்சூனிய தொந்தத்தசி (2488–2494), முப்பாழ் (2495–2500), காரியகாரணவுபாதி (2501–2505), உபசாந்தம் (2506–2511), புறங்கூறாமை (2512–526), அஷ்டதளகமல முக்குண அவத்தை (2527–545), சுத்தாசுத்தம் (546–557), மோக்ஷ நிந்தை (258–2565), இலக்கணாத்திரயம் (2566–567), தத்துவசி வாக்கியம் (568–586), விசுவக்கிராசம் (587–594), வாய்மை (595–2609), ஞானிசெயல் (610–2611), அவாவறுத்தல் (2613–2622), பத்தியுடைமை (2623–632), (2633–2633–2634), சோதனை (2635–2648), எனப் பொருளடக்கம் காணப்படுகின்றது.

மூலசிவாகம வரிசையில் பத்தாவதாகவும், இன்று நான்கு பாதங் களுடனும் கிடைக்கப் பெறும் மூலசிவாகமமாக விளங்குவது சுப்ரபேதாகமம் ஆகும். இவ்வாகமத்தின் ஞானபாதத்தின் மூன்றாவது படலமான அத்வா விதிபடலம்[41] திருமந்திரத்தில் செல்வாக்குப் பெற்று விளங்குவது குறிப் பிடத்தக்கது. உபநிடத மகாவாக்கியங்களுள் ஒன்றான 'தத்வமசி' எனும் மகாவாக்கியத்தின்42 விளக்கத்தை சைவசித்தாந்த பரமாக விளங்கும் தன்மை திருமந்திரத்திறகேயுரிய தனித்துவமான மேன்மையாகின்றது. இம்மரபைத் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சிவயோகரத் தினதில் எடுத்தாளுகின்றமையும் ஒப்பு நோக்கத்தக்கது.

ஒன்பதாந் தந்திரம்

திருமந்திரத்தின் ஒன்பதாம் தந்திரம் மகுடாகமத்தின் சாரம் என்பர். இத்தந்திரத்தில் 649–347வரையாகவும் அதிகபாடலாக 3048–3090வரை யும் காணப்படுகின்றன. அவற்றின் உள்ளடங்கலாக, குருமடதரிசனம் (2649–265), ஞான குருதரிசனம் (2656–2674), பிரணவ சமாதி (2675–

650), ஒளி (681-2697), தூலபஞ்சாஷரம் (2698-2708), சூக்கும பஞ்சாக் கரம் (709-2717), அதிசூக்கும பஞ்சாங்கரம் (2718-2721), திருக்கடத் தரினம் (2722-2803), ஆகாசப் பேறு (2804-2812), ஞானோதயம் (2825-2803), ஆகாசப்பேறு (804-2812), ஞானோதயம் (2813-2824), சத்திய ஞானானந்தம் (2825-2834), சொரூப உதயம் (2835-855), சிவசொரூப தரினம் (2856-2863), முத்திபேதம், கருமநிருவாணம் (2864, 2665), சூனியசம்பாஷணை (2866-2935), மோளசமாதி (2936-2953), வரையுரை மாட்சி (2954-2956), அணைந்தோர் தன்மை (2957-2981), தோத்திரம் (2982-3025), சர்வவியாபி (306-3047), அதிகப் பாடல்கள் (3048-3090) என்றவாறாக உள்ளடக்கம் காணப்படுகிறது.

வேமந்திரங்களுள் யசுர் வேதத்தைச் சார்ந்த சதருத்ரீயம் சிவனது 100 நாமங்களைப் போற்றும் ஒரு துதியாக அமைகின்றது. அதன் நடுநாயகமாக விளங்குவது கிப பஞ்சாபுரமந்திரம் அதனை,

'ஓம் நமசிவாய சிவதராய ச' எனக் கூறுகின்றது. இம்மந்திரத்தின் பல்வேறு வடிவங்களையும் திருமந்திரங்கள் கூறுகின்றது. அத்துடன் மகுடாம விதிமுறைப்படியே சிதம்பரத்தில் பூஜைகள் நடை பெறுவது போன்று இதிலும் தில்லையின் சிறப்பும் நடனச்சிறப்பும் பேசப்படுவது தனித்துவமாக ஒப்பு நோக்க வேண்டிய தன்மையது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை

தென்னிந்தியாவிலேயே சிவாகமமரபு நன்கு பின்பற்றப்படுகின்றது. சைவமரபில் தென்னிந்தியாவில் சிவாகமங்களின் முக்கியத்துவம் ஒரு பண்பாட்டு முக்கியத்துவமாகும். இந்நிலையில் சைவ சித்தாந்தம் ஓர் சமயதத்துவமாக சைவ மக்கள் வாழ்வியலில் நிலைபெற்றது. சைவவாழ் விற்கும், சைவ வாழ்வின் இலட்சியத்திற்குமேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் மார்க்கங்கள் வாழ்வியலோடு ஒன்றிணைந்த தன்மைய தாயின. கிரியை மரபுகள் ஞானம் கிடைத்தற்கு நிமித்தகாரணமாயின. இம்மரபில் சிவனையொட்டிய வாழ்வியல் சிவபோகம், சிவயோகம், சிவஞானம் என்றே கொள்ளும் மரபாயிற்று. சைவமரபில் சிவன் சச்சி தானந்த வடிவமாயிற்று. சிவனின் வடிவமே அன்பேயுருவான தன்மைய

தாயிற்று. இந்நிலையில் சைவவாழ்வின் சாரமே சைவ சித்தாந்த சாரமாக அமைந்ததாயிற்று.

தென்னிந்தியமரபில் தமிழில் சிவாகமங்களையும் அவை கூறும் சிவபோகம், சிவயோகம், சிவஞானம் பற்றிய விடயங்களையும் வாழ்விய லாகக் கூறும் தேவையை உணர்ந்த திருமூலர் சிவஞானத் தெளிவின் உயர்ந்த உன்னத உண்மையைத் தோத்திரமாகவும், ஆதிசங்கரர் வைதிக தத்துவ மரபில் வேதாந்த தத்துவத்திற்கு விளக்கமளித்தமைக்கு நிகராக சிவாகமசாரமாக சைவசித்தாந்த மரபில் தெளிவுபடுத்தினார். வடமொழி யில் அஷ்டப்பிரகரணங்கள் தோன்றி சிவாகம சாரங்களை தெளிவுபடுத்திய வடமொழிச் சைவசித்தாந்தமரபிற்கு நிகராக தமிழில் திருமந்திரம் தெளிவு படுத்துவது நன்கு வலியுறுத்தப்படுகின்றது.

தென்னிந்திய சைவமரபு சிவாகம ஞான சாரமாகவும், அத்தைவம் சார் சொன் மரபு சிவாகமங்களின் வழி கலைச்சொல் மரபாகவும், அத்தோடு பல சொற்கள் பண்பாடுகள் சார் மரபிலும் பயன்படுத்தப்படும் தன்மைய தாகின்றன. இந்நிலைக்கு வைதிக சைவமரபு அடியூற்றாயிற்று. இவற்றிற்கு நிலைக்களனாக சாஸ்திரம் எனும் உயர்வுடன் வடமொழியின் செல்வாக்கு திருமந்திரத்திற்கு அடித்தளமாயிற்று. இந்நிலையில் புனித நூலாகத் திருமந்திரம் சிவாகமங்களின் சாரம் என்பதற்கு மேலாக சிவாகமப்பண் பாட்டின் சாரமாக சாத்திரம், தோத்திரம் எனும் இரு நிலைகளிலும் புனித நூலாக விளங்குகின்றது.

சிவாகமங்களின் கலைச்சொற்கள் பரிபாஷை என்று கூறப்படுகின் றன. இவற்றின் தெளிவு நிலையில் சிவாகமம்சார் பரிபாஷைக்கும், சைவசித்தாந்த பரிபாஷைக்குமாக சிவாகமபரிபாஷா மஞ்சரி எனும் நூலும் 'சைவசித்தாந்த பரிபாஷாமஞ்சரி எனும் நூலும் விளங்கும் அதேவேளை நாம் வடமொழிச் செல்வாக்குடன் திருமந்திரத்தினை விளங்கிக்கொள் வதற்கு அத்தகைய பாரிபாஷை களின் அறிவு அவசியமாகின்றது.

திருமூலர் சிவாகமங்களின் வழி கி.பி 7ம் நூற்றாண்டளவில் தமிழ் மரபில் திருமந்திரமாக தெளிவுபடுத்த கி.பி 17ம் நூற்றாண்டில் ஈழத்து

சைவசித்தாந்த மரபின் பிதாமகராக விளங்கும் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சிவயோகம், சிவஞானம் பற்றிய சிந்தனைகளை வடமொழியில் எட்டு நூல்களை எழுதிப் பதிவு செய்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

திருமந்திரம் சிவாகமங்களில் ஏழு மூலசிவாகமங்களினது சாரமாகவும், மற்றும் சார்த்தத்ரிசதி காலோத்தரம் எனும் தொகுப்பு நூலினதும், ருத்ரயாமளம் எனும் சாத்தந்திரத்தினாதும் சாரமாகவும் விளங்கும் தன்மையில் சிறப்பாக தெய்வீகவியல் வரலாறு கூறும் புராணங்களின் செய்திகளையும் மற்றும் சைவமரபுகளையும் பிரதிபலித்துக் காட்டும் ஓர் சாஸ்திரமாக மிளிருகின்றது.

அடிக்குறிப்பு

1. திருமந்திரம், 99
2. காரணாகமம், (பூர்வம்), 2
3. காமிகாகமம், (பூர்வம்), 2.2
4. வேதரிஷிக்கவிதைகள் (மாஹாகவிபாரதி), முன்னுரை, I - iii
5. காமிகாகமம் (பூர்வம்) 2 மந்திரோத்தார விதிபடலம், 1–186
6. தொல்காப்பியம், பொருள், 179
7. திருமந்திரம், 63
8. காரணாகமம், (பூர்வம்) I. 1–5)
9. சுப்ரபே தாகமம், தந்திராவதாரபடலம், 2
10. கிரணாகம மஹாதந்திரம் I–13
11. திருமந்திரம், 63
12. திருமந்திரம், 60
13. திருமந்திரம், 64
14. ரௌரவாகமம், சிவாகம அட்டவணை
15. திருமந்திரம், 57
16. திருமந்திரம், 62
17. காமிகாகமம், (பூர்வம்), I 119
18. அஷ்டபிரகரணம், ரத்கத்ரயபரீக்ஷ, II
19. திருமந்திரம், 1421
20. திருமந்திரம், 81
21. பண்டிதமணி, சி.கணபதிப்பிள்ளை, அத்வைதசிந்தனைகள், பக், 29, 20
23. அபிஞ்ஞான சாகுந்தலம் I.1
24. திருமந்திரம், 5–8
25. திருமந்திரம், 5–7
26. 1. மகுடாகமம், (பூர்வபாகம்), தந்திராவதாரபடலம்
    2. காரணாகமம், தந்திராவதாரபடலம்
27. திருமந்திரம், 57
28. திருமந்திரம், 65
29. திருமந்திரம், 66
30. பரார்த்த நித்தியபூஜாவிதி. பக். 28

31. நோக்குக 'தென்னாட்டின் சைவக்கருவூலம் பதினெ புராணங்கள்',
32. மகுடாகமம் (1979) (பூர்வம்) யோகலக்ஷணவிதிபடலம் பக் 181–183
33. திருமந்திரம், 1307
34. சௌந்தர்யலஹரி, பக்., 177–176
35. திருமந்திரம் 15, 12
36. திருமந்திரம் 1666
37. காரணாகமம் (பூர்வம்), 11, 303 – 310
38. காரணாகமம் (பூர்வம்) 11, 02
39. சதாசிவதியானம் பரார்த்த நித்தியபூஜை விதி பக் 58–59
40. 1. பரார்த்தத்த நித்தயபூஜாவிதி, ஆத்மர்த்த பூஜ.28 பக்
41. திருமந்திரம் (1823 – 1846)
42. சுப்ரபேதாகமம், ஞானபாதம் 3
43. சாந்தோக்கிய உபநிடதம்

06. கிரணாகமமும் ஞானாமிர்தமும் – ஓர் ஒப்பியல் நோக்கு

கருதுகோள்

மூல சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். இம்மூல சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம்/விதிமுறை எனும் நான்கு விரிவுகளைக் கொண்ட மூல சிவாகமங்களுள் ஒன்று, முனிவரால் அகவற்பா வடிவில் இயற்றப்பட்ட நூலே ஞானாம் ஓம் ஆகும். இவற்றுள் கிரணாகமம் காலத்தால் முற்பட்டதாகவும். ஞானாமிர்தம் காலத்தால் பிற்பட்டதாகவும் விளங்கு கின்றன. இவற்றுள் கிரணாகமத்தின் செல்வாக்கு ஞானாமிர்தத்தில் சைவ சித்தாந்த சாயவில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதனை ஒப்பியல் ரீதியில் நோக்குவதே இவ்வாய்வின் கருதுகோள் ஆகும்.

மூலசிவாகமங்கள்

சிவாகமங்கள் மூலசிவாகமங்கள், உபாகமங்கள் என இருவகைப் படுகின்றன. மூலசிவாகமங்கள் சதாசிவ வடிவத்தின் சத்யோகம், வாம தேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம் எனும் ஐந்து முகங்களில் தோற்றம் பெற்றன. அதன்படி உபதேசக்கிரமமாக தோன்றிட சிவாகமங்கள் இருபத் தொட்டாகும். அவையாவன காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்மம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிஸ்வாசம், ஸ்வாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக் தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என்பனவாகும். இம் மூலசிவாகமங் களுக்கு உபாகமங்களும் உள்ளன. அவை இருநூற்றெழு ஆகும். இம்மூல சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம்/வித்தியா எனும் நான்கு பாதங்களையுள்ளடக்கியன. இவற்றுள் கிரணாகமம் என்பது மூலசிவாகமங் களின் வரிசையில் இருபத்தேழாவதாக அமைகின்றது. இவ்வாகமம் நான்கு பாதங்களையும் உள்ளடக்கியது.

கிரணாகமம்

ஸ்ரீமத் கிரணாகமம் நான்கு பாதங்களையுள்ளடக்கியது. இவ்வாகமம் ஸ்ரீமத் பரமேஸ்வரனது ஈசான முகத்திலிருந்து தோன்றியது. சிவ பெருமானால் ஸ்ரீகருடபிரானுடைய வினாவுக்கு விடையளிக்கும் வகையில் அமைந்துள்ளது. அறுபத்திநான்கு படலங்களை உள்ளடக்கிய இவ்வாகமத்தில் முதலாவதாக வித்தியாபாதம் 1-12 வரையான 12 படலங்களையுள்ளடக்கியது. க்ரியாபாதம் 13–30 வரையான 18 படலங்களையுள்ளடக்கியது. சர்யாபாதம் 31–57 வரையான 275 படலங்களை உள்ளடக்கியது. யோக பாதம் 58–64 வரையாக 07 படலங்களை உள்ளடக்கியது. இவற்றுள் ஞான பாதம்/வித்யாபாதம் எனும் பிரகரணமே முக்கியமானதாகும். இப்படலத்தில் கூறப்படும் ஞானம்சார்ந்த சைவசித்தாந்த தத்துவ உண்மைகளை ஒப்பு நோக்குந் தன்மையதாக அமைகின்றன. அதன்படி கூறப்படும் விடயங்கள் முறையே பசு படலம் (1), மாயாபடலம் (2), கர்ம படலம் (3), பதிபடலம் (4) சக்திபாத படலம் (5), தீக்ஷாகர்ம படலம் (6), மந்த்ரபடலம் (7), பவனபடலம் (8) சிவதத்துவ படலம் (9), தந்திராவதார படலம் (10), மந்ரோத்பத்தி படலம் (11) யந்த்ரோத்தார படலம் (12) என்பனவாகும்.

ஞானாமிர்தம்

ஞானாமிர்தம் வாகீசமுனிவரால் 75 அகவற்பாக்களால் (தமிழில்) இயற்றப்பட்ட நூலாகும். சைவசித்தாந்துவத்தை பரவிக்கூறும் இந்நூல் இலக்கிய மரபின்படி ஏழு (07) அகவற்பாகிகள் பாயிர இயல்புடையன. அவையாவன.

1. கடவுள் வாழ்த்து
2. விநாயகர் துதி
3. கலைவாணி துதி
4. ஆசிரியர் துதி
5. அவையடக்கம்
6. நூற்பெயர்
7. மறைமுறை நான்கெனல்

எனப் பேசப்படுகின்றன. 8–75 வரையான 67 அகவற்பாக்களால் ஞானபாதம் பற்றி மட்டுமே பேசுகின்றது. அவற்றுள் சம்மிய ஞானம், சம்மிய தர்சனம், தேகாந்தரம், பாசானாதித்துவம், பாசச் சேதவியல், பதிநிச்சயம், பாசவிமோசனம் எனும் விடயங்கள் பேசப்படுகின்றன.

சம்மிய ஞானம் எனும் விடயப் பரப்பினுள் (8-14), பசுவின் மூவகை யவத்தை 98), அநாதி மலசம்பந்தம் (9), ஆன்மா மாயாவுதரம் மருவுதல் (10), அனுமானத்தாற் பசுவுண்மை துணிதல் (11), பாரிசேடத்தாற் பசுவுண்மை துணிதல் (12), சேதனாசேதனம் கூறுதல் (13), தேராதி வாகனசங்களில் வைத்துத் தேகியுண்மை கூறல் (14) என்பன பேசப்படுகின்றன. சம்மிய தரிசனம் (15-17) எனும் பகுதி யால் பசுதர்சனம் (15), பஞ்சாவத்தையியல் (16), ஆத்மசமாதி (17), பாசபந்தம் (18-26) எனும் பகுதியில் மலம் மூவகை எனல் (18), ஆணவமலம் (19), கன்மமலம் (201), மாயமலம் (21), சற்காரிய வாதம் (22), இருவினையாக்கம் (23), வினைவகை (24), கன்மபந்த நிலை (25), மூவகைத்துக்கங்கள் (26) என்பன பேசப்படுகின்றன. தேகாந்தரம் (27, 28) எனும் பகுதியில் ஆர்தவிழ்திறம் (27), அச்சுமாறிப் பிறத்தல் (28) என்பன பேசப்படுகின்றன. பாசானாத்துவம் (29-30) எனும் பகுதியில் கன்மமாயை அனாதியெனல் (29) பாசச் சேதவேட்டை (30) என்பன பேசப்படுகின்றன. பாசச்சேதவியலில் (31-52) பாசச்சேதவுண்மை (31), கன்மச் சேதவுபாயத்தைப் பாராட்டல் (32), பாசக்சேதம் (33), கன்மச்சேதவு பாயத்தைப் பாரட்டல் (32), பாசக்சேதம் (33), கன்மச் சேதவுபாயம் (34), ஞானசித்தாந்த பரிவட்டம் (35), ஞானவுபயம் அறியாதாரின் தாழ்வு (36), ஞானசித்தாந்தபரிவட்டப்பிரமாணம் (37), ஞானசித்தர் பரிவட்டம் (38), நல்வினை நிகழ்ச்சி (39), தீவினை நிகழ்ச்சி (40), பிரார்த்தகன்மசேதம் (41), ஞானசித்தரின் அந்தரங்கவேறுபாடு (42), ஞானவான்களின் அந்தரங்கசுத்தி (43), ஞானயோகரின் போகநிலை (44), ஞானவான்களின் ஞானப்பிர காசம் (45), பந்தமோக்ஷகாரணம் (46), ஞானசித்தர்க்குதேகம் பாரம் (47), ஞானசித்தர்க்கு வினையிற் பற்றின்மை (48), உபதேசப்பயன் (49), மாயாமலபந்தக்ஷயம் (50), ஆணவமலபந்தக்ஷயம் (51), ஞானவான்களைப் பாசம் வாதியாமை (52) என்பன பேசப்படுகின்றன.

பதிநிச்சயம் (53-72) எனும் பகுதியில் உயிர்களுக்கு பற்றாவது பரமன் சீர்பாதம் (53), பதிஞானம் (54), பதியிலக்கணம் (55), பதியின் வியாபகம் (56), பதியுண்மை (57-59), பதிசங்கற்பம் (60), ஞானநாட்டம் (61), சக்தி சங்கற்பம் (62), பஞ்சகிருத்திய பதி அவிகாரி (63) சருவகாரணசிவன் சுவிகாரி (64) அசுத்துவகர்த்தா (65) அனந்ததேவர் (66) சிவானுபவம் வாசாரகிதம் (67), அநந்திய பாவகம் (68), கன்மசமத்துவ

சக்திநிபாதம் (69), தீக்கை விசேடம் (70), ஞானவஞ்ஞான விருப்பு (71), ஞானபாதச் சிறப்பு (72) என்பன பேசப்படுகின்றன. பாசவமோசனம் (73 – 75) எனும் பகுதியில் அத்துவித பதித்துவம் (73), அணையும் தன்மை (74), அணைந்தோர் தன்மை (75) என்பன பேசப்படுகின்றன.

சிறப்பாக வடமொழிச் சைவ சித்தாந்த நூல்களான அஷ்ட பிரகரணங்களிலிருந்தும், பௌஷ்கரம், சர்வஞானோத்தரம், ம்ருகேந்திரம், தேவீகாலோத்தரம் முதலான நூல்களில் கூறப்படுகின்ற விடயங்களுக்கு சமமாக பல்வேறு விடயங்கள் மிக ஆழமான கருத்தில் கூறப்படுகின்றன. அவற்றுள் கிரணாகமம் கூறும் விடயப்பரப்பு மிகவும் கவர்ச்சிகரமானதும் ஆழமானதுமான கருத்தியலைக் கொண்டு விளங்கும் கருத்துப்பரிமாற்றமே இவ்வகை நூல்களிரண்டையும் ஒப்பு நோக்குவது அவசியமாகின்றது.

ஞானாமிர்தம் கூறும் சொற்பயன்பாடு பெரும்பாலும் சைவசித்தாந் தக்கலைச் சொன் மரபினையே பேசிவருகின்றமையும், அவற்றின் ஒவ் வொரு சொற்களும் மிக ஆழமான விரிந்த கருத் துக்களை வெளிப்படுத்து வனவாக அமைகின்றன. இவற்றின்படி ஒப்பியல் நோக்கில் பார்க்கையில் கிரணகமத்தில் ஞானபாதத்தில் 12 படலங்களே உள்ளன. எனினும் ஒன்பது (09) படலங்களே சிறப்பு பெறுகின்றன. அவற்றின்படி பசுபடலம் (01) கூறும் விடயங்கள் 24 சுலோகங்களில் கூறப்படுகின்றன. ஞானமிர்தத்தில் சம்யஞானம் எனும் விடயபரப்பினுள் (8–14) பரந்து பேசப்படுகிறன்றன. மாயா படலம் (02) 34 சுலோகங்களையுள்ளடக்கியது. இவ்விடயங்கள் ஞானாமிர்தத்தில் பசுபந்தம் (18–26) எனும் பகுதியிலும்; மாய மலம் (21) என்று பேசப்படுகின்றது. கருமபடலம் (கி.3) எனும் பகுதியில் 28 சுலோகங்களில் கூறப்படுகின்றது. ஞானாமிர்தத்தில் பாசானாதித்துவம், (29–30) எனும் பகுதியும், பாசதேசவியல் (31–52) ஆகிய பெரும் விடயங்கள் விரிவாக கூறப்படுகின்றமையும் ஒப்பு நோக்கத்தக்கன.

பதிபடலம் (4) 30 சுலோகங்களில் கிரணாகமத்தில் பேசப்படு கின்றது. இவ்விடயங்கள் பதி நிச்சயம் என ஞானாமிர்தத்தில் (53–72) பேசப்படுகின்றது. மேலும், பதியுண்மை (57–59) விரிவாக பேசப்படு கின்றது. சக்திபாத படலம் (5) என்பது கிரணாகமத்தில் பேசப்பட அதுபற்றிய விடயங்கள் பதி நிச்சயம் எனும் (53–72) பகுதியினுள் கன்மசமத்துவ சக்தி

நிபாதம் (69) எனப் பேசப்படுகின்றது. இவ்விடயம் பற்றி கிரணாகமம் (5.7-14) வரையாக விரிவாக விளக்குவது மனங்கொள்ளத்தக்கது. தீக்ஷா கர்ம படலம் (6) என கிரணாகமம் கூறும்விடயம் ஞானாமிர்தத்தில் தீக்கை விசேடம் (70) எனப் பேசப்படுகின்றது. மந்திரபடலம் (7) எனும் கிரணா கமத்தில் கூறப்படும் விடயங்கள் பாசமோசனம் (73-75) வரையான பகுதி யில் விரிவாகப் பேசப்படுவதும் நோக்கத்தக்கது. இதற்கு மேலாக கிரணாக மத்தில் புவன படலம் (08) 140 சுலோகங்களிலும் சிவதத்துவ படலம் (09) 19சுலோகங்களிலும் பேசப்படுகின்றன. இவ்விடயங்கள் பற்றி பரந்த தன்மையில் ஞானமிர்தத்தில் பேசப்படுகின்றமை ஒப்புநோக்கத் தக்கன.

சிவாகமங்களில் கிராணகமத்திற்கு நிகராக ம்ருகேந்திரம், சர்வ ஞானோத்தரம், பௌஷ்கராகமம் மதங்கபாரமேஸ்வரம் பராக்கியாகமம் சிவாக்ர பாடியம் முதலாக ஒரேகருத்தில் கூறப்படுவது மனம் கொள்ளத்தக்கது.

சிவாகமங்களுள் கிரணாகமத்துவிடயங்கள் மிகச்சாரமாக ஞான மிர்தத்தில் விளங்க அவை பற்றி ஏனைய சிவாகமங்களில் கூறப்படும் விடயங்கள் என்பவற்றுக்கு மேலாக சுவேதாஸ்வதர உபநிடதத்தில் கூறப் படும் முன்னோடிச் சிந்தனைகளும் ஒப்புநோக்கத்தக்க இயல்புடையன.

இவ்வாறாக சிவாகமங்களுள் கிராணாகமம் கூறும் விடயங்களில் பல ஞானாமிர்தத்தில் பிரதிபலிக்கப்படுவது மனம் கொள்ளத்தக்கது.

[illegible] ഹ്യാദികേ ।
[illegible]
[illegible]
[illegible] വിശേഷതഃ ।
[illegible] ॥ ൨൩
പഞ്ചവിംശതികലശൈഃ [illegible] ।
[illegible] സമാചരേൽ ॥
[illegible] ।
[illegible] ॥ ൨൪

ഉത്സവപ്രായശ്ചിത്തവിധിപടലപ്രാരംഭഃ

പ്രായശ്ചിത്തവിധാവത്ര ഉത്സവസ്യ വിശേഷതഃ ।
വൃഷയാനവിഹീനേ തു ധ്വജാരോഹണഹീനകേ ॥ ൧
ധ്വജലക്ഷണഹീനേ തു ദണ്ഡാദാനവിഹീനകേ ।
[illegible] നവിഹീനേ തു ധ്വജദേവീവിഹീനകേ ॥ ൨
ദണ്ഡച്ഛേദേ ഗ്രച്ഛേദേ രജ്ജുച്ഛേദേ ച ധ്വജേ ।
ധ്വജവർണ്ണവിഹീനായാം പതാകായാം [illegible] ॥ ൩
ഭേരീതാഡനഹീനേ ച ഘോഷകാലേ തഥൈവ ച ।
ഘോഷണേച്ഛേദനേ പക്ഷേ ബലിഭേരീവിഹീനേ ച ॥ ൪
യാഗശാലാവിഹീനേ തു കാംബവേദീവിഹീനകേ ।
വേദ്യാസ്തംഭവിഹീനേ തു യാഗശാലാദ്യശുദ്ധകേ ॥ ൫
വിതാനധ്വജഹീനേ ച തോരണം ചക്രസംയുതേ ।
ദർഭമാലാവിഹീനേ ച ഹോമദ്രവ്യവിഹീനകേ ॥ ൬
ദീപ്യായുധവിഹീനേ ച കുണ്ഡശോഭാവിഹീനകേ ।
കുംഭാപൂർണവിഹീനേ ച ശയ്യാസനവിഹീനകേ ॥ ൭
ശംഖവാദ്യവിഹീനേ ച കാംസ്യതാളേ ച നിസ്വനേ ।
ഛത്രചാമരവിഹീനേ തു വസ്ത്രവേഷ്ടവിഹീനകേ ॥ ൮
കഞ്ചുകാദിവിഹീനേ ച വാസസ്സ്യേന തഥൈവ ച ।
നൈവേദ്യാദിവിഹീനേ ച ഭക്ഷ്യാദിബലിഹീനകേ ॥ ൯

ஸம்வேஷ்டநவிஹீநே து ப்ரணீதாசவிஹீநகே ।
ஶ்ருக்ஹீநே க்ரியாஹீநே ச த்ரவ்யாவஸ்திவிஹீநகே ॥
பலித்ரவ்யவிஹீநே ச பலிதாநவிஹீநகே ।
பலிஹரணகாலேஷு ப்ரமிஸம்ஸ்தவிஹீநகே ॥ ௧௧
தத்தி³நே பக்ஷிதே ஹஸ்தே ஸந்தாநே பக்ஷிதேऽபி ச ।
பலிபாத்ரவிஹீநே ச பலிஸ்தாநவிஹீநகே ॥ ௧௨
பலித்³விபவிஹீநே து காம்ஸ்யகுண்டேऽபி ச ।
உத்ஸவாந்தவிஹீநே ச தத்க்ஷாமே கமலேऽபி ச ॥ ௧௩
பஞ்சாயஶீர்ஷதத்³ரவ்யே ஸ்வஸ்தே லோமேஶம்ஸ்திதயோ: ।
ப்ரக்ஷாலநகாலே து பக்ஷிதே தாம்ரஹீநகே ॥ ௧௪
தீ³க்ஷாஹீநே ததா² ஸந்தாநே ப்ரக்ஷால்யஸம்பூர்ணேऽபி ச ।
தே³வாலயமஹாபா³ஹே வ்யாப்தே ஶாந்தே ததை²வ ச ॥ ௧௫
உத்ஸவே ச தத்³க்³ருஹே ஶ்ரோத்ரே தச்சேவ ஶங்க்²யகா: ।
பலிவேஷ்டவிஹீநே ச நீராஜநவிஹீநகே ॥ ௧௬
ப்ரவாஹே யாத்ரிகேஷு ச பூ⁴தாஸநவிஹீநகே ।
ரக்ஷாஸூத்ரவிஹீநே து கௌதுகஸ்நாநஹீநகே ॥ ௧௭
சண்டா³ந்தர்வவிஹீநே ச தீர்த²ஸ்நாநவிஹீநகே ।
வேத்³யாவாஸிதகும்பே⁴ஷு க்ஷீரஸேகவிஹீநகே ॥ ௧௮
யஜ்ஞாவரணே ஹீநே ச ஸந்தாநவிஹீநகே ।
தி³நாஹ்நிகே ததா² ந்ருத்தே உத்ஸவே ந்ருபகாலகே ॥ ௧௯
வீராஸநவிஹீநே ச க⁴ண்டாபாத³விஹீநகே ।
ஶ்ராத்³தா⁴ந்தே தந்த்ரேண யத்யாஶம் க்ருதேவஸி ॥ ௨௦
ஶ்ராத்³தா⁴நாம் ஸம்ஸ்காரேஷு ஹீநே ப்ராயஶ்சித்தக: ।
க்³ராமகநியமத்⁴யே ... ॥ ௨௧
நவராத்ரி ஸமஸ்த்வஸ்து நிஷ்க்ருதிர்க்³ருஹ்யதே ।
வர்ஷாந்தவிஹீநே து பா⁴வேண ம்ருத்யும் ஶம்ஸயேத் ॥ ௨௨
வர்ஷ ... ।
... ॥ ௨௩
வர்ஷா ... ।
... ॥ ௨௪

[illegible]
[illegible] ॥ ௪௦
[illegible]
[illegible] ॥ ௪௧
[illegible]
[illegible] ॥ ௪௨
[illegible]
[illegible] ॥ ௪௩
[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ॥ ௪௫
[illegible]
[illegible] ॥ ௪௬
[illegible]
[illegible] ॥ ௪௭
[illegible]
[illegible] ॥ ௪௮
[illegible]
[illegible] ॥ ௪௯
[illegible]
[illegible] ॥ ௫௦
[illegible]
[illegible] ॥ ௫௧
[illegible]
[illegible] ॥ ௫௨
[illegible]
[illegible] ॥ ௫௩
[illegible]
[illegible] ॥ ௫௪

[illegible]
[illegible] ௨௫
[illegible]
[illegible] ௨௬
[illegible]
[illegible] ௨௭
[illegible]
[illegible] ௨௮
[illegible]
[illegible] ௨௯
[illegible]
[illegible] ௩௦
[illegible]
[illegible] ௩௧
[illegible]
[illegible] ௩௨
[illegible]
[illegible] ௩௩
[illegible]
[illegible] ௩௪
[illegible]
[illegible] ௩௫
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௩௭
[illegible]
[illegible] ௩௮
[illegible]
[illegible] ௩௯

ஜலத்ரோண்யாம் ப்ரதிமாம் த்ருத்வா யாகமண்டபமாலயேத் |
மண்டபஸ்யாந்தத: க்ருத்வா ஸ்நாபயித்வா விதிவத்ப்ரபோ: |
ஶய்யாம் ஸம்ஸ்தாப்ய விதிநா பஞ்சஸ்நாநமாசரேத் |
தத்ஸ்தாநே ஜ்ஞாநமார்கேண பஞ்சப்ரம்ம காலயேத்ஸுதீ: || ௭௧

ப்ரதிஷ்டாந்தே ப்ருதக் கர்தவ்யம் ஜலாதிவாஸநம் விநா |
ஸ்தாபயித்வா ப்ராஸாதே து ஸித்தே வா பீடிகேஷு வா || ௭௨
ப்ரவர்த்திதே ஹோமாக்னௌ ஶாலா நஶ்யத்யஸம்ஶய: |
ஸித்தார்த்தைஸ்து மந்த்ரேண ஜபேதஷ்டஶதம் ஸுதீ: || ௭௩
நஷ்டேஹ்நி சைவ கர்தவ்யம் பஞ்சகவ்யப்ரோக்ஷணாதிகம் |
பலிபாத்ரே விஹீநே ச ஸ்தாபிதே யதநாந்தகே || ௭௪
ஶாந்திஹோமம் தத: க்ருத்வா நவபாத்ரம் நிக்ஷிபேத் |
பலிதாநே விஹீநே ச ஸர்வதைவ ப்ரயம் ஜபேத் || ௭௫
அஸ்த்ரஹோமம் தத: க்ருத்வா நித்யம் ஶதம் ஜபேத் |
பலிதீபே விஹீநே ச முகுந்தாஸ்த்ரம் ஶதம் ஜபேத் || ௭௬
கர்ணிகா பீஜ ரத்நேஷு ப்ரதிருத்தம் ஶதம் ஜபேத் |
அக்நிகம் தீப ஶராவாப்ய பலிஶேஷம் ஸமாசரேத் || ௭௭
காலாதிக்ரமணே ப்ராப்தே பலிதாநே ச யாநகே |
தத்ஸ்தாநேஷு ஸ்வயம் ப்ராப்தம் ஶாந்திஹோமம் து காரயேத் || ௭௮
பஞ்சாக்ஷரம் வா ஜபித்வா து பலிதாநே நியோஜநம் |
உத்ஸவே யாந ஹீநே ச பஞ்சஸ்நாநம் ஸமாசரேத் || ௭௯
அஸ்த்ரஹோமம் தத: க்ருத்வா ஸம்பூர்ணம் ஸ்நபநம் ப்ரபோ: |
பஞ்சயாம க்ருதேநைவ பஞ்சமாஸ் த்ரிப்ரதக்ஷிணம் || ௮௦
தத்ராதிகேஷு ஹீநேஷு தத்ஸமேண ஜபம் ஜபேத் |
ஶாந்திஹோமம் தத: க்ருத்வா ப்ரவிஶ்ய ஆலயம் ப்ரதி || ௮௧
பஞ்ஜராப்யந்தர ஸ்தாநே ரோதகஸ்தாநே திங்மேஷம் பதா |
பரதந்த்ரஸ் ஸ்யாதிஞ்சைவ ஹோமார்ச்சீ ப்ரயதாத்மநே || ௮௨
அஸ்த்ரஹோமம் தத: க்ருத்வா ஸ்நபநம் காரயேத் ப்ரபோ: |
பஞ்சாக்ஷரம் வா ஜபித்வா து யஜேத் பாஶுபதம் ததா || ௮௩
ப்ரதிபாதகாதேஷு ப்ரதிதே சாமஹீநகே |
வாஸ்துஸாந்தாதி வா நாஶே நாஶநம் ஸமுத்பவேத் || ௮௪

𑌶𑌾𑌮𑍍𑌭𑌵𑌂 𑌵𑌿𑌹𑍀𑌨𑍇 𑌚 𑌅𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌯 𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌦𑍀𑌪𑌾𑌰𑍋𑌪𑌣𑌮𑍇𑌵 𑌤𑍁 ॥ ௫௫
𑌅𑌭𑌿𑌷𑍇𑌕𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 𑌤𑍇𑌨 𑌵𑌹𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑍀𑌪𑍍𑌤𑍋 𑌭𑌵𑍇𑌚𑍍𑌚 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑍋𑌪𑌾𑌙𑍍𑌗𑌸𑌹𑌿𑌤𑌂 𑌶𑌿𑌵𑌾𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑌮𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ ௫௬
𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌿𑌹𑍋𑌮𑌤𑌃 ॥
𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌾 𑌪𑌰𑌿𑌤𑌾𑌹𑍀𑌨𑍇 𑌜𑍍𑌵𑌰𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌶𑍍𑌚 𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌶𑌤𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌸𑌮𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௫௮
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌹𑍀𑌨𑍇 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍀𑌨𑍇 𑌮𑌨𑍋𑌨𑌾𑌶𑌶𑍍𑌚 𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑍂𑌲𑍇𑌨𑍈𑌵 𑌶𑌤𑌂 𑌹𑍁𑌨𑍇𑌤𑍍 ॥
𑌉𑌕𑍍𑌤𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌹𑍋𑌮𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌦𑍋𑌷𑌾𑌃 𑌪𑌰𑌿𑌵𑌿𑌹𑍀𑌨𑍇 𑌚 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌭𑌵𑍇𑌦𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ॥ ௬௦
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑌞𑍍𑌚𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌿 𑌆𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌬𑌲𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑌿𑌹𑍀𑌨𑍇 𑌚 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍌 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ ௬௧
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌨𑌾𑌶𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌗𑌵𑌾𑌂 𑌨𑌾𑌶𑌨𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ।
𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯𑌾𑌥 𑌨𑌵𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌤𑍍 ॥ ௬௨
𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌤𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 ।
𑌬𑌲𑌿𑌦𑌾𑌨𑌵𑌿𑌹𑍀𑌨𑍇 𑌚 𑌦𑍁𑌰𑍍𑌭𑌿𑌕𑍍𑌷𑌂 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ॥ ௬௩
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌹𑌵𑌿𑌷𑌾 𑌹𑍁𑌨𑍇𑌤𑍍 ।
𑌬𑌲𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌦𑌾𑌯 𑌬𑌲𑌿𑌦𑌾𑌨𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ ௬௪
𑌬𑌲𑌿𑌬𑌿𑌮𑍍𑌬𑌵𑌿𑌹𑍀𑌨𑍇 𑌚 𑌹𑍀𑌨𑍇 𑌚 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌵𑍇𑌦𑌿𑌚 ।
𑌹𑍀𑌨𑍇 𑌚𑍈𑌵 𑌤𑌥𑌾 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ ௬௫
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌂 𑌤𑍁 𑌮𑍂𑌲𑍇𑌨𑍈𑌵 𑌶𑌤𑌂 𑌹𑍁𑌨𑍇𑌤𑍍 ।
𑌨𑌵𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌾𑌥 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌬𑌲𑌿𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ ௬௬
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌤𑌶𑍍𑌚𑍈𑌵 𑌹𑍀𑌨𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯 𑌶𑌤𑍍𑌰𑍁𑌹𑌿𑌂𑌸𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ ௬௭
𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌹𑍀𑌨𑍇 𑌚 𑌨𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌵 𑌶𑌤𑌸𑌂𑌖𑍍𑌯𑌯𑌾 ॥ ௬௮
𑌶𑍇𑌷𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌬𑌲𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤𑍍 𑌕𑍍𑌰𑌮𑌶𑌃 𑌸𑌦𑌾 ।
𑌸𑌮𑌸𑍍𑌤𑌦𑍁𑌰𑍍𑌭𑌿𑌕𑍍𑌷𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௬௯

സ്നപനന്തു കുർവീത പുണ്യാഹം വാചയേത്തതഃ ।
ശാന്തിഹോമന്തതഃ കൃത്വാ പഞ്ചഗവ്യേന ശോധയേൽ ॥ ൮൫
ശിരോബാഹൂ തഥാ പാദൌ ഹൃന്ന്യാദി വിന്യസേൽ ।
നവകലശാംശവിധിനാ ദക്ഷിണാഗ്ര വിധീയതേ ॥ ൮൬
പദ്മന്യ വിധിനാ തജ്ജ്ഞാഗ്നേ പ്രജാപതേ ।
പാനസ്ഥാനകം കൃത്വാ തത്രയന്ത്രം പ്രോക്ഷണം ചരേൽ ॥ ൮൭
ദീക്ഷാഞ്ചൈവ തഥാ ശുദ്ധിഃ പ്രതിഷ്ഠാസ്ഥാപനേ യദി ।
തൈരേവ യാഗശാലാഞ്ച ദ്വ്യഷ്ടശാനാമേവ ച ॥ ൮൮
തൽപ്രാഭാവാദിനാം കൃത്സ്നം സ്ഥാനശുദ്ധ്യം നസംശയഃ ।
പഞ്ചഗവ്യേന സംപ്രോക്ഷ്യ പുണ്യാഹം വാചയേത്തതഃ ॥
സ്നപനം കാരയേൽ ബിംബം ശാന്തിഹോമേന കാരയേൽ ।
ഉദ്വാസമേവ തൽപ്രാപ്തി ദ്രുതമേവ മന്ത്രകാഃ ॥ ൯൦
നാഗസ്യ ദക്ഷിണാന്ദത്വാ ശില്പിഭ്യശ്ച തദശ്യവൽ ।
മൂർത്തിഹോമന്തതഃ കൃത്വാ കലശാഭിഷേചനം മന്ത്രേൺ ॥
പവിത്രേഷ്ടവിധിനാ ചോക്താനന്തം സമാചരേൽ ।
ശിവമന്ത്രം ശതം ജപ്ത്വാ പ്രാർത്ഥയേദിതമേവ ച ॥ ൯൨
നീരാജന വിധിനാ വഹ്നിനാ ഹവനം ഹവേൽ ।
മഹേശ്വരസ്യ ബീജേന ശതം ജപ്ത്വാ വിശേഷതഃ ॥ ൯൩
നീരാജനഞ്ച കുര്യാൽ പുഷ്പവൃഷ്ട്യാ വിധിനാ സഹ ।
പ്രവാദ്യൈർന്നൃത്തഗീതൈശ്ച ക്ഷേത്രം പ്രഭാവാദിനാ ॥ ൯൪
തത്രാംശാരം വിസൃജ്യാഥ പശ്ചാൽ പുനഃ കാരയേത്സുധീഃ ।
മൂർത്തിഹോമന്തതഃ കൃത്വാ ബിംബസ്യ സ്നപനം ചരേൽ ॥ ൯൫
യഥാഗമ വിധിനാ തത്ര ദ്രവ്യാണാം സംഹരേൽ ।
മൂർത്തിഹോമന്തതഃ കൃത്വാ യഥാഗമം സമാചരേൽ ॥ ൯൬
രക്ഷാസൂത്ര വിധിനാ ബാലാനാം ഭോജനം ഭവേൽ ।
പുണ്യാഹം വാചയിത്വാ തു കലശാംബോഭിഷേചയേത്സുധീഃ ॥ ൯൭
മദ്ധ്യാഹ്നവിധിനാ രാജസംഗ്രഹം വിനശ്യതി ।
ഉത്സവം പുനരാരഭ്യ ശാന്തിഹോമേന കാരയേൽ ॥ ൯൮
പശ്ചാദ്ദേവാലയേ സ്വാകല്പാൽ പുനരാരാധിഷേചയേൽ ।
മൂർത്തിഹോമം തതഃ കൃത്വാ സ്നപനം കാരയേൽ പ്രഭോഃ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ க௦க
[illegible]
[illegible] ॥ க௦உ
[illegible]
[illegible] ॥ க௦ங
[illegible]
[illegible] ॥ க௦ச
[illegible]
[illegible] ॥ க௦ரு
[illegible]
[illegible] ॥ க௦சு
[illegible]
[illegible] ॥ க௦எ
[illegible]
[illegible] ॥ க௦அ
[illegible]
[illegible] ॥ க௦கூ
[illegible]
[illegible] ॥ கக௦
[illegible]
[illegible] ॥ ககக
[illegible]
[illegible] ॥ ககஉ
[illegible]
[illegible] ॥ ககங
[illegible]
[illegible] ॥ ககச

07. சிவாகமங்கள் கூறும் கிராமநகரத் திட்டமிடல் சிவாலயங்களை மையப்படுத்திய ஓர் நோக்கு

சிவாகமங்கள் மூலசிவாகமங்கள், உபாகமங்கள் என இருவகைப்படும். மூலசிவாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் வரையாக இருபத்தெட்டாகும். உபாகமங்கள் இருநூற்றேழு ஆகும். சிவாகமங்கள் "சிவனிடமிருந்து வந்தது" எனப் பொருள்படுகின்றது. இச்சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு விடயங்களை மையப்படுத்தி சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களூடாக விளக்கிநிற்கின்றன. இவற்றுள் சிவாகமங்கள் திருக்கோவில் அமைப்பு முறைகளை மிக விரிவாகத் திட்டமிடுவது வியக்கத்தக்க விடயமாகும்.

திருக்கோவிலும் சமூகமும் இணைபிரியாத தொடர்புகளை உடையன. சமூக மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் வளமான பௌதிகச்சூழல் அவசியமாகின்றது. எத்தகைய பௌதிகச்சூழல் ஆலயம் அமைவதற்கும் சமூகம் வளமுடன் வாழ்வதற்கும் நிலைபெறுவதற்குமாக பல்வேறு படிமுறைகளைக் கூறி நிற்கின்றன. இவ்வகையில் திருக்கோவிலினை மையப்படுத்தியதும் வாஸ்து சாஸ்திர விதிப்படி அமைந்த சமூக வாழ்வியற் கட்டமைப்பும் மிக விரிவான முறையில் பேசப்படுகின்றன.

காமிகம் இது பற்றிய விளக்கங்களைக் கூறுமிடத்து கால நிர்ணயம் பற்றி காலவிதி படலமும் (I.6), சகுணம் பற்றிய நிகழ்வு பற்றி நிமித்த பரீக்ஷாவிதியும் (I.7) கூறி விளக்குவது மனங் கொள்ளத்தக்கது.

கிராம நகர பேதங்கள்

சிவாலயங்கள் அமைக்கத்தக்க இடங்களைத் திட்டமிட முற்படும் சிவாகமங்கள் கிராம நகரங்களின் அடைவிடத்தில் திருக்கோயில்கள் பற்றியே வர்ணிக்கின்றன. அத்தகைய அமைவிடத்தைக் காரணாகமம் தருகையில் (I.3),

'அக்ரஹாரம், கிராமம், நகரம், ராஜதானி, பட்டணம், குட்டிமம், ஆவிகம், சேனாமுகம்,

எனக்கூறி அவை பற்றிய விளக்கங்களை தெளிவுபடுத்துகின்றது. சுப்ரபேதாகமம் (I.23), கிராமம், நகரம், பட்டணம், கர்வடம். புரம், கேடகம், குடிகம், சிபிரம், ராஜதானி, சேனாமுகம் எனக் கிரமமாகக் கூறப்படுகின்றது. இத்தகைய பற்றியதுமான கிராமங்களின் பகுப்பாய்வுகளைக் கூறி விளக்கமளிக்கையில்,

1. கிராமம் : இவை சுமார் 15 பகுப்புக்காக மண்டன கிராமம், சதுர்முக கிராமம், மங்கள கிராமம், விஸ்வேச கிராமம், நித்திய மங்கள் கிராமம், கர்வட கிராமம், வளிந்த கிராமம் என்பன முதலிய பெயர்களில் காணப்படுகின்றன.

2. நகரம் : பல்வேறு தொழிற்சாலைகளும், அரசாங்க நிர்வாக மாவட்டத் தலைமை அலுவலகங்களும், கலைச் செல்வங்களும், காவல் நிலையங்களும் கூடிய மாவட்டத் தலைநகரமாகும்.

3. பட்டணம் : நதிகள். கடற்துறைமுகங்கள், வியாபார தலைமை நிலையங்கள், கருவூலங்கள், ஆபரணத் தொழிற்கூடங்கள், நெசவு சாலைகள், அயல்நாட்டு வர்த்தகர் தங்குமிடங்கள், மாவட்டத் தலைமை அதிகாரிகள், சுங்க அதிகாரிகள், தங்குமிடங்களுடன் கூடிய நகரை குறிக்கும்.

4. கர்வடம் : சுமார் 500 விவசாயத் தொழில் செய்யும் குடும்பங்களும் ஆறு, காடு, மலை, இவைகளின் சமீபத்தில் உள்ளதுமான இடமாகும்.

5. புரம் : இது சாமான்யமாகவுள்ள சமார் 200க்கு மேற்படாத கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள் வசிக்கும் இடம்.

6. கடம் : ஆற்றங்கரை, மலையுச்சி இவற்றில் பிரிந்து பிரிந்து குடிசை கட்டி வாழும் மக்களின் இருப்பிடம்.

7. குடிகம் : இது தாழ்ந்த குடிமக்கள் என்று முன்னாளில் கருதப்பட்டு வந்த ஹரிஜனங்கள் வசிக்கும் சேரிகளமைந்த இடம்.

8. சிபிரம் : எப்பொழுதும் நாட்டுப் பாதுகாப்பிற்காக யுத்த வீரர்களை சேர்த்தும் தயார் செய்வித்தும் சேனாமுகத்தின் சுற்றுப்புறங்களில் வைக்கப்பட்டிருக்கும் இடமாகும்.

9. ராஜதானி : அரசருடைய மாளிகையும் மற்றும் மந்திரிகள், பிரதானிகள், சேனாவீரர்கள், பாதுகாப்புள்ள கோட்டை கொத்தளங்களுடன் சுமார் இரண்டு லக்ஷம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட நால்வகை ஜாதியினரும் வாழுமிடம்.

10. சேனாமுகம் : துர்க்கம், நாட்டின் பாதுகாப்பிற்காக உள்ள நான்கு பக்கங்களிலும் கோட்டைகள், பொறியியல் பாத்திரங்கள், யுத்த தளபாட உற்பத்தி சாலைகள், யுத்த வீரர்கள் பயிற்சி பெறுமிடங்கள் முதலியவற்றையுடைய ராஜதானியை அடுத்துள்ள இடமாகும். எனக் தெளிவுபடுத்துகின்றது. கரணாகமானது, அக்ரஹாரம், குட்டிமம், ஆவிகம் என்பவற்றினைக் கூறுகையில்:

01. அக்ரஹாம் : அரசனுடையதும், மக்களுடையதுமான முக்கிய இருப்பிடத் தொடர் அக்ரஹாரம் எனப்படும்.
2. குட்டிமம் : அரசனின் மாளிகையோடு கூடியதும் தனியாக நன்மக்களுடையதும் அவர்களுடைய செய்யத்தக்க செயல்களுக்குரிய அதிகாரிகளுடை யதுமான வதிவிடம் குட்டிமம் எனப்படும்.
3. ஆவிகம் : யானைகள், பல ரதங்கள் என்பன இருக்கும் சேனாமுகத்திற்கு அமைந்த இடமாகும் எனக் கூறுகின்றது.

இத்தகைய அமைவிடங்கள் அமையத்தக்க பூமியை கர்ஷணம் செய்து வாஸ்து விந்யாஸம் செய்தபின் ஆலயம் அமையத்தக்கதாக மண்ணைப் பரிசோதித்து பூமியின் மண் தொடர்பான பரீட்சையினை நிறம், மணம், ருசி என்பவற்றினால் சோதித்து வகைப்படுத்தப்படுகின்றது.

"பூமியானது அதன் கண்ணுள்ள மரங்களாலும், செடி கொடிகளாலும் அதில் வாசம் செய்யும் மிருகங்கள், பக்ஷிகளாலும் மண்ணின் நிறத்தாலும், வாசனையாலும், ருசிகளாலும் சோதிக்கத்தக்கது".

எனச் சுப்ரபேதாகமம் கூறுகின்றது. பூமியை நிமித்த பரீக்ஷைமூலமாக சகுனங்கள் அபசகுணங் கள், சோகத்தைக் காட்டும் சகுனம், சகுனத்தையிட்டு செய்யத்தக்கன எவை எனும் விபரங்களை காமிகாமம் (I.10) தெளிவுபடுத்து கின்றது. தொடர்ந்து சுபசகுனம் பெறப்பட்டதாயின் பூமியின் பரீக்ஷை செய்ய வேண்டும் என விபரித்துப் பன்னிரெண்டு வித பூமிகளாக பூமி லக்ஷணங் களைக் காமிகாகமம் (I.11) தெளிவுபடுத்துகின்றது. அந்நிலையில் பூமியின் குணமானது சைவம், பிரம்மம், வைஷ்ணம், ஐந்திரம், ஔக்ஷம், பௌதிகம், ஆசுரம், பைசாகம், ராக்ஷசம், வாயவ்யம், வாருணம், ஆக்னேயம் என பன்னிரெண்டாகப் பகுக்கப்படுகின்றது. அவையாவன,

01. சைவபூமி : கோங்குமரம், மருது, அரசு, விளா, அசோகமரம், ஆச்சாமரம், நிலத்தாமரை, துளசி, அறுகு, விஷ்ணு, கிராத்தி, எலிக்காத் துக்கீரை, இலவு, மலைதன்னாரி, புறா, கிளி, அன்னம் இவைகளால் வியாபிக்கப்பட்டது அவற்றைத்தரும் சைவபூமியாகும்.

02. பிரம்மபூமி: வில்வபத்திரம், முருக்கு, விஸ்வாமித்திரம், நாணல், மான் நல்ல வாசனையுள்ள ஹோமத்திரவியங்கள், அடைத்திருப்பதும், சுபத்தைத்தருவதுமான பிரம்மபூமியாகும்.

03. வைஷ்ணவீபூமி: தும்பைச்செடி, புளியமரம், மூங்கில், பருத்தி, எருக்கு, செம்பருத்தி, அன்னபக்ஷி, சாமான்யபக்ஷி, மிருகங்கள் முள்ளில்லாத மரங்களோடு கூடியதும், மனிதருக்கு சூரத்துவ பராக்கிரமங்களைக் கொடுப்பதுமான பூமி விஷ்ணு பூமியாகும்.

04. ஐந்திரபூமி: வாழை, பலா, மா, சுரப்புன்னை, மகிழமரம், பாதிரிமரம், நொச்சி, நெல்லி, கருநெய்தல் இவைகளாலும் வைசியர், சூத்திரர் களாலும் பரத்திருப்பது ஐந்திர (இந்திரன்) பூமியாகும்.

05. ஔஷதபூமி: பாதிரி, அகில் (பசுபூமி) இவற்றின் வாசங்கள் நிறைந் ததும், தனதான்யங்களின் சம்பத்தைத் தருவதும், அழிஞ்சல் விருக்ஷங் களாம் புன்னை, கீரிப் பிள்ளை, முயல், உடும்பு, சகோதரபக்ஷி, செந்நாய் இவைகளில் பரந்திருப்பதும், ஜனங்களுக்கு சம்பத்தைப் பூர்த்தியாகத் தருவதாகவும், சுகத்தையும் , வீரத்தையும் தருவதுமாக உள்ளதுஔத (பசு) பூமியாகும்.

06. பூதபூமி : பெருநொச்சி, குருக்கத்தி, அறுகு, அழிஞ்சில், முருக்கு, மல்லிகை, அலரி, இலுப்பைகளாலும் அவ்வாறே விபூதி மணங்களோடு கூடிப் பரந்திருப்பதும், மனிதர்களுக்கு உணவையும் புஷ்டியையும் தருவதாக உள்ளது பூதபூமியாகும்.

07. அசுரபூமி : செராமரம், பெரியமரம், துஷ்டஐந்துக்கள், வெங்காயம், வேடர், மருதைமரம், பருத்து முதலிய துஷ்ட ஐந்துக்களோடு கெட்ட மணங்களோடும் கூடியது. யுத்தத்தைத் தருவதானது அசுரபூமியாகும்.

08. பைசாசபூமி : இலவமரம், மகிழமரம், தான்றிமரம், நறுவிலி மரங் களாலும், கழுதை, ஓட்டகம், பன்றி, நரிகளாலும், சண்டாளர், வேடர் களாலும் பரத்திருப்பதும் துர்கந்தமுள்ளதாகவும், சவிட்டு நிலமாகவும் இருப்பது எல்லா சாஸ்திரங்களாலும் எல்லா நாசத்தோடும் கூடியது பைசாச பூமியாகும்.

09. ராக்ஷதபூமி : சண்டாளம், விஷம், திருடர், தலைநோய் முதலானவை களாலும் மிளகு. கூழாங்கல், பரிமள வஸ்துக்களாலும் நிறைந்து குறைவை தருவது ராக்ஷத பூமியாகும்.

10. வாயுபூமி : குள்ளநரிக் கூட்டங்களால் நிறைந்து சுவர்க்கோழி, பருக்காங் கற்களோடு கூடியதும், துக்க நிர்ப்பாக்கியத்தைத் தருவது வாயு பூமியாகும்.

11. வருணபூமி : பாக்கு மரங்களால் சூழப்பட்டு ஸமஸ்த சித்தியைத் தருவது வருணபூமியாகும்.

12. ஆக்னேயபூமி : சதுரக்கள்ளி, நறுவிலி முதலானவற்றோடும், முரட்டு பருக்காங்கற்களோடு கூடியதும், சவட்டு நிலமாயும் தண்ணீரிலாததாயும் இருந்து எல்லாவற்றையும் கெடுப்பது ஆக்னேய பூமியாகும்.

எனத் தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய பூமிகளில் சிவத்தின் பிரதேசத்தில் சிவபூமியும், விஷ்ணுவின் பிரதேசத்தில் விஷ்ணுபூமியும், பிரம்மன்ய பிரதேசத்தில் பிரம்ம பூமியுமாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பாகுபாடு செய்யப்படும் குணங்களால் உணரப்பட்ட வாழ் விடயங்களுக்குரிய பூமியானது அநூபம், ஜாலங்கள் என இருவகைப்படும் என காகமிகாமகம் (I.11) வகுத்துக் கூறுகின்றது. மேலும் வாழ்வதற்கு இயைபான பூமியானது வெண்மை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு என நான்கு வகைப்படும் எனவும் இம்மண் ருசி, மணம் இவைகளால் சோதிக்கப்பட்டு நல்ல மல்லிகை, புன்னை, தாமரை, நெல், பாதிரி முதலியன வாசனையுள் ளதும், உயர்ந்ததும், எல்லாத் தானியங்களும் விளையக்கூடியதும் தேன், வெல்லம், எண்ணைச்சிக்கு, பிணம் முதலிய மணமுள்ளதுமானவை நீக்கத் தக்கதெனச் சுப்ரபேதாகமம் கூறுகின்றது.

பூமி சருணபரீக்ஷை

பூமியைப் பள்ளம் செய்து அதே மண்ணைக் கொண்டு அந்த பள்ளத்தை நிரப்ப மண்மிகுதியானால் உத்தமம், சரியாக இருந்தால் மத்திமம், குறைந்தால் அதமம் என்றும், அதமம் பூமியை எடுக்கக் கூடாது.

ஜலபுஷ்பபரீக்ஷை

இத்தகைய பூ சருணம் பெறப்பட்ட பூமியில் ஓர் பள்ளம் செய்து குடங்களில் புக்களிட்ட ஜலங் கொண்டு அந்த புஷ்பஜலத்தை அப்பள்ளத்தில் விட்டால் அந்த ஜலம் அடங்கிய குமிழியுடன் வலமாகச் சுழன்றால் சிறப்பாகும். புஷ்பம் நிமிர்ந்திருக்குமாயின் மிகச் சிறப்பாகும்.

அக்குரபரீக்ஷை

ஜலபுஷ்பபரீக்ஷையில் மிகச் சிறப்பான பூமியில் கடுகு அல்லது எள் விதைக்கப்பட்டு முளையானது முன்னிரவிற் சிறிதாக முளைக்குமாயின் அது மங்களகரமான பூமியாகும். என காமிகாமகம் (I.11) தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறான பரீக்ஷைகளுக்குட்படுத்தப்பட்ட பூமியில் அடுத்ததாகச் செய்ய வேண்டியது வாஸ்து விந்யாஸமாகும். அதற்கு முன்னதாகச் செய்ய வேண் டிய கிரியை பிரவேசபலியாகும்.

பிரவேசபலி

பரிசோதித்துப் பெறப்பட்ட பூமியினை ஒன்பது பாகமாக்கி பிரம்மஸ் தானம் முதல் ஒன்பது சந்திகளிலும் "இந்தப் பூமியில் வசிக்கின்ற பூத, பிசாச, ராக்ஷஸ கணங்கள் யாவும் சீக்கிரமாகத் தாமாகவே போகவேண்டும். இந்தப்

பூமியை வாஸ்துவிற்காக எடுக்கப் போகிறேன்' எனப் பிரார்த்தித்து தயிர், நெய், பலகாரம் இவற்றோடு கூடிய சாதங்களால் அத்தேவதைகளுக்குப் பலியிட்டு சங்கீத வாத்ய வேதகோஷங்களால் கோஷிக்கப்பிக்க வேண்டும் என காமிகாமம் (I.11) தெளிவாகக் கூறுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளின் பின் பூமியைக் கிரகித்து (காமிகாமம் I.13) உழவேண்டும். (காமிகாம் I.14) இவ்வாறு பூமியை உழுகின்றதையே கர்ஷணம் எனவும். கர்ஷணவிதி எனவும் பூமியைச் சோதித்து எடுப்பது முதல் உழுவது வரையாக காமிகமம் (I.14),காரணாகமம் (I.3). சுப்பிரபோதகமம் (I.25). அம்சுதாகமம் (78) அம்சுமத் காசியபம் (1). அஜிதம் (க்ரியாபாதம் 7). கிரணாகமம் (III.24) ஆகியன மிக விரிவுபடுத்திக் கூறுகின்றன.

'கர்ஷணம் எனும் உழுதலின்போது கலப்பை முறிதல், கயிறு அறுதல் முதலியன ஏற்பட்டால் அதற்குப் பிராயச்சித்தமாக சாந்தி ஹோமம் செய்ய வேண்டும்' என காமிகாமம்(I.14) கூறுகின்றது. மேலும் உழுத பிரதேசத்துப், பற்களை பசுக்களை மேயும்படியும் பசுக்களை அப்பிரதேசங்களில் தங்கும் படியும் செய்ய வேண்டும் எனவும் விபரிக்கின்றது.

சங்குஸ்தாபனம்

உழப்பட்ட பூமியைச் சமப்படுத்தி நடுவில் கட்டையடித்தலே சங்குஸ் தாபனம் ஆகும். இத்தகைய சங்கு (மரக்குச்சி) அது ஸ்தாபிக்கத்தக்க இடம், அளவுகோல் செய்யும்மரம், சங்குவின் பிரமாணம், அளவு, மண்டல உருவம், சங்குவின் தொகை, சங்குவில் ஊசி நாட்டிப் பூஜை செய்யும்முறைகள், பின்னர் சங்குஸ்தாபனம் என்பன பற்றி காமிகாமகம் (I.15), காராணாகமம் (I.3), மிருகேந்திரம் (கிரியாபாதம் 7), அஜிதாகமம் (கிரியாபாதம் 9) என்பன விரிவுபடுத்தித் தெளிவுபடுத்துகின்றன.

இவ்வாறாக சங்குஸ்தாபனம் செய்யப்பட்ட இடத்தில் அயனங்களின் போக்குகளைக் கழித்து காலை, மாலை சூரிய நிழல்களைக் கொண்டு திக்கு நிர்ணயம் பெறப்படுகின்றது.

திக்கு நிர்ணயம் செய்யப்பட்ட இடத்தில் அளவுகோல்களைக் கொண்டு பகுத்து அதனுடைய ஆயாதிப் பொருத்தங்களைப் பெறும் தன்மைகளைக் காரணாகமம், காமிகாகம் ஆகியன கூறுகின்றன. அஜிதாகமம் கிராம, நகர தண்ட அளவுப் பிரமாணங்களினைத் தெளிவுபடுத்திக் கூறுகின்றது.

வாஸ்துவிந்யாஸம்

சிவாகமங்கள் எவ்விதம் பூமியைப் பரீக்ஷித்துப் பெற்றுக் கொள்வதற் குரிய படிமுறைகளைக் கூறுகின்றனவோ அதேபோன்ற காசியபசில்பம், மயமதம், வாஸ்துவித்வை முதலான சாஸ்திர நூல்களும் கூறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சிவாகமங்கள் பதவித்யாஸம் எனும் தன்மையில் பூமியின் பிரிப்புக் களைப் பதங்களின் எண்ணிக்கையால் வேறுபடுத்திக் கூறுகின்றது. இதனடிப்படையில் பூமியானது 32 வகையாக வகுக்கப்படுகின்றது. அவையாவன :

1. 1 பதம் – சகளம்
2. 4 பதங்கள் – பேசகம்
3. 9 பதங்கள் – பீடம்
4. 16 பதங்கள் – மஹாபீடம்
5. 25 பதங்கள் – உபபீடம்
6. 36 பதங்கள் – உக்ரபீடம்
7. 49 பதங்கள் – ஸ்தண்டிலம்
8. 64 பதங்கள் – மண்டூகம் / சண்டிதம்
9. 81 பதங்கள் – பரமசாயிகம் / பரமீசம்
10. 100 பதங்கள் – ஆசனம்
11. 121 பதங்கள் – ஸ்தானீயம்
12. 144 பதங்கள் – தேசீயம்
13. 169 பதங்கள் – உபயசண்டிதம்
14. 196 பதங்கள் – பத்ரமஹாசனம் / பத்ராசனம்
15. 225 பதங்கள் – பத்மகர்பம்
16. 256 பதங்கள் – த்ரியுதம்
17. 289 பதங்கள் – வ்ருத்தபோகம்
18. 324 பதங்கள் – கர்ணாஷ்டகம்
19. 361 பதங்கள் – கணிதம் / கணித பாதகம்
20. 400 பதங்கள் – சூரியவிசாலகம்
21. 441 பதங்கள் – சுசம்ஹிதம்

22. 484 பதங்கள் – சுப்ரதீகாந்தம்

23. 529 பதங்கள் – விசாலம்

24. 576 பதங்கள் – விப்ரகர்பம்

25. 625 பதங்கள் – விஸ்வேசம்

26. 676 பதங்கள் – விபுலபோகம்

27. 729 பதங்கள் – விப்ரதீகாந்தம்

28. 784 பதங்கள் – விசாலக்ஷாம்

29. 841 பதங்கள் – விப்ரபுக்திலம்

30. 900 பதங்கள் – விப்வேசசாரம் / விஸ்வசாரம்

31. 961 பதங்கள் – ஈஸ்வரகாந்தம்

32. 1024 பதங்கள் – இந்திரகாந்தம்

என்பனவாகும்.

இவ்வாறு பகுக்கப்பட்ட பூமியில் வாஸ்து தேவதைகளுக்கு பலியிடும் கிரியை வாஸ்து சாந்தி எனக் கூறப்படுகின்றது. பரமசாயிகம் எனும் 81 பதங்கள் கொண்ட வாஸ்து மண்டலத்தின் நடுவில் இருக்கும் ஒன்பது பதங்கள் பிரம்மபதம் ஆகும். இந்தப் பதத்தில் ஆலயங்கள், மடங்கள், சபைகள், பிரம்ம விகாரம் செய்யுமிடங்கள் வேதாகமாத்யயன மண்டபங்கள் இவைகள் அமைக்க வேண்டும். இப்பிரம்பபதத்திற்கு வெளியில் இருக்கும் பதினாறு பதங்கள் தைவிகபதம் ஆகும். இதிலும் ஆலயங்கள், பொது நிலையங்கள், அக்ரஹாரங்கள் முதலியன கட்டப்படுதல் வேண்டும். தைவிக – பதத்திற்கு வெளியிலுள்ள 24 பதங்கள் மானுஷபதம் ஆகும். இதில் ஜனங்கள் வசிக்கும் வீடுகள், சாலைகள், வீதிகள். ராஜகிரு தங்கள் முதலியன அமைதல் வேண்டும். அதற்கு வெளிச்சுற்றிலுள்ள 36 பதங்கள் (பைசா சபதம்) ஆகும். இதில் உட்பாதியில் வீடுகளும் தெருக்களும் அமைப்பதுடன் வெளிப்பாதியில் மயானம், துர்க்கை கோவில். குளங்கள், சலவை செய்யுமிடம், மத்ஸிய மாம்ச வியாபாரிகள் தங்குமிடம், வைத்திய சாலை, ஆயுதசாலை, கோட்டைகள் முதலியன அமைதல் வேண்டும். இவ்வாறு அமைக்கும் கிராமம், நகரம், பட்டணம் முதலியன அமைப்புக்கள் நூறு தண்ட அளவு முதல் 10,000 தண்ட அளவு வரையாகக் கூறப்படுகின்றன.

சிவாகமங்கள் கூறும் திருக்கோயில் அமைவானது மக்கள் வாழ்விடத் தைப் புறந் தள்ளாது பல்வேறுபட்ட சமூக அமைவுகளின் மத்தியில்

திருக்கோயிலை மையமாகக் கொண்ட நகரம் போல விளங்க வேண்டிய முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன. இதனடிப்படையில் திருக் கோவிலுள்ள தனித்துவம் காணப்படினும் கிராமம், நகரம், பட்டணம், வீடுகள் எனும் அமைப்புக்களிலிருந்து திருக்கோவில் அமைவைப் பிரித்தெடுக்க முடியாத தன்மைகள் கிராம விந்யாஸ விதிகள் மூலம் சிவாகமங்களில் சுட்டப்படுகின்றன. காமிகம் (I.24) தண்டிகாவிதி படலம் மூலமாக ஆலயங் களை மையமாகக் கொண்ட கிராம, நகர, பட்டண அமைவுகளைப் பன்னி ரெண்டு விதங்களாகக் கூறுகின்றது. அவையாவன தண்டிகம், ஸ்வஸ்திகம், ப்ரஸ்தம், ப்ரகீர்ணம். சம்பத்கரம். பராகம், பத்மகம். ஸ்ரீபிரதிஷ்டிதம், ஸ்ரீவத்ஸம், வைதிகம், நத்தியவர்த்தம், கும்பம் என்பனவாகும்.

இவ்வாறு பன்னிருவகையாக அமைந்ததும் சாஸ்திரோக்தமாகக் கூறப்பட்டதுமான கிராமம் முதலானவைகளின் பன்னிருவகை உருவ அமைப்புக்களுக்குரிய வீதி ஒழுங்குகளை காமிகாமம் (I.25) கூறுகின்றது.

நகரம், கிராமம் முதலானவைகளின் அமைவுகளில் ஆலயத்தை மையப்படுத்திய கிராம அமைவு தெளிவுபடுத்தப்பட்டது. மேலும் காமிகாமம் (I.26) ஒரு கிராமத்தில் தேவதைகளை ஸ்தாபிக்கத்தக்க ஸ்தானங்களைக் கூறுகின்றன. இந்த ஸ்தானங்கள் வாஸ்து பதசூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதனைக் காமிகம் (I.26) விளக்குகையில் "பிரம்ம தானத்திற்கு வாயு மூலையில் விஷ்ணுதானம் கூறப்பட்டது. மேற்குத்திக்கில். வாஸ்துவின் சூத்திரத்திற்கு வடக்குத் தேசத்தில் பிரம்மாவானவர் இருக்க வேண்டும். கிராமத்தின் மத்தியில் ஈசான்யத்திற்கு முதலான எட்டுத் திக்குகளிலும் சிவஸ்தாபனம் கூறப்பட்டது. விஷ்ணு சாதாரணம் பரமசிவத் தோடு கூடிய மற்றையாவும் இஷ்டம் போலாகும். இந்தச் சாத்திரத்தில் அவற்றின் ஸ்தானம் கூறப்படுகின்றது.

மேற்குத்திக்கிலும் கிழக்குத் திக்கிலும் அவ்வாறன்றிக் கிழக்கு வடக்குகளின் மத்தியிலும் சூரிய ஸ்தானமாகும். இந்திரருக்கும் அவ்விடத்திலேயே ஸ்தானமாகும். வாயுமூலையிலும், கிழக்குத்திக்கிலும் தெற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, சுக்கிரீவரென்கின்ற மேற்குத் திக்கு ஷண்முகருக்கிடம் கூறப்பட்டது. மேற்குத்திக்கிலும் தென்மேற்குத் திக்கிலும்,

கிழக்குத் திக்கிலும் சாஸ்தாவினிடம் கூறப்பட்டது. மேற்கு அல்லது தென் மேற்கிலாவது, வடமேற்கு வடக்குத் திக்குகளின் நடுவிலாவது வேறிடத்தி லாவது இந்த (காமிக) ஆகமத்தில் கணேசரின் ஸ்தானம் கூறப்பட்டது. தெற்கு அல்லது தென்மேற்கு அல்லது வாயுதிக்கு அல்லது இந்திரதிக்கின் நடு விலாவது தென்மேற்கு தெற்குப் பாகத்தின் நடுவிலாவது துர்க்கை ஸ்தானம் கூறப்பட்டது.

மேற்குத்திக்கில் லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய இருவரின் ஸ்தானம் கூறப் பட்டது. வட கிழக்கிலும், வடக்கிலும் அவற்றின் மத்தியிலும் சப்த மாதாக் களின் ஸ்தானமாகும். தென்கிழக்கில் மோடியின் ஸ்தானம் அவ்விடத் திலேயே காமதேவருக்குரிய இடமாகும். குளக்கரையிலாவது அதற்குப் புறத்திலாவது மற்றவிடத்திலாவது ஜ்யேஷ்டாதேவியின் ஸ்தானம் கூறப்பட் டது. மன்மதன் சூரியன் ஆகிய இருவருக்கும் ஷண்முகருக்கு உரிய இடம் (மேற்கு) கூறப்படுகின்றது. ஷண்முகருக்கு ஸப்தமாதாக்களுடைய (ஈசானம்/ வடக்கு) ஸ்தானம் ஆகும். மற்றவர்களுக்கு இஷ்டம் போல் ஆகும்.

என விளக்கி தொடர்ந்து இத்தேவதைகளின் பூஜாபலன் கூறப்படு கின்றது. கிராமத்தை மையமாகக் கொண்ட ஆலய அமைவில் திருமால் (விஷ்ணு) சிவன் ஆகிய இருவரும் முக்கிய பங்கு வகிப்பதனை சிவாகமங் கள் எடுத்தியம்புகின்றன. இது பற்றி காமிகாமம் (I.26) விளக்கிக் கூறுகை யில் (கிராமத்தின்) வடகிழக்கில் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கமானது மத்யமமாகக் கூறப்பட்டது. கிராமத்தின் நடுவில் விஷ்ணுவின் ஸ்தானமானது உத்தமமாகக் கூறப்பட்டது. மேற்குத்திக்கில் மத்யமமாகவும் மற்றைய பிரதேசத்தில் ஸ்தானத்தில் ஆதமமாகவும் அறியத்தக்கது", எனக் கூறுவது மனங் கொள்ளத்தக்கது. இது பற்றிய விபரங்களை சுப்ரபேதாகமும் (க்ரியாபாதம் 23) கூறுகின்றது.

திருக்கோவிலும் கிராமத்திட்டமிடலும்

சிவாகமங்களுள் காரணாகமம் (II.6) (கர்ப்பக்கிரஹம்) ஐந்து பிரகாரங்களால் சூழப்பட்ட கிராமம் பெரும் நகரம் போன்று திட்டமிட்ட அமைப்பினைக் கூறுகின்றது. பேராசிரியர் க.கைலாசநாதக்குருக்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

கோவில்களுக்கு அழகைக் கொடுப்பவை பிரகாரங்கள். இப்பிரகாரங்கள் வளரும் பொழுது கோவிலைச் சுற்றித் திட்டமிட்டமைக்கப்படும் நகரம் ஒன்று பல வனப்புகளுடன் உருவாகின்றது. சிற்ப நூல்களும் ஆகமங்களும் கூறும் இந்தத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு விரிந்த நகரத்திற்கு எடுத்துக்காட்டு, பாண்டி நாட்டின் சிகரமாக விளங்கும் மதுரை மாநகரம். இந்நகரம் ஆலயத்தை நடுவகமாய் கொண்டு விரிந்தது. பல பிரகாரங்களைக் கொண்டது. நாகரிகப்போக்கில், விதிகளைக் கடைப்பிடிக்கும் முறை தளர்த்தப்பட்டிருக்கக் காண்கின்றோமெனினும், கோவில் அடிப்படையிலேயே தோன்றி பிரகாரங்களாக விரிந்து பெரும் நகரம் உருவாகி அழகு பொலிந்த விளங்குவது கவனிக்கற்காலது.

இது பற்றி விரிவான முறையில் காரணாகமம் கூறுகையில்

அந்தர் மண்டபத்தையடுத்து முதல் பிரகாரமும், அந்தரீதுவாரத்தையடுத்து இரண்டாம் பிரகாரமும், மத்யஹாரம் மூன்றாவது பிரகாரமாகவும், மர்யம் நான்காம் பிரகாரமாகவும், மஹாமர்யம் ஐந்தாம் பிரகாரமாகவும் அமையும். இவற்றின் அளவை, தனித்தனி ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. பிரகாரங்களைச் சுற்றி சுவர்கள் அமையும். இச்சுவர்கள் பித்தி என்றும், மதில் என்றும் பெயர் பெறும். ஐந்து பிரகாரங்களையாவது அல்லது ஒரு பிரகாரத்தையாவது கொண்டு கோவில் அமையலாம். ஒவ்வொரு பிரகாரத்திற்கும் தனித்தனி கோபுரம் அமைவதே முறை. இவ்வாறு நான்கு திக்குகளிலும் கோபுரங்கள் எழும் பொழுது அவற்றின் எண்ணிக்கை பெருகும். இவ்வாறு அமையும் பிரகாரங்களிலும் அவற்றைச் சார்ந்த இடங்களிலும் நகரம் விரிந்துருவாவதை நோக்குவோம். அக்கினி திக்கில் அமைவது பவனாலயம். இரண்டாம் பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் கிணறு இடம்பெறும். கிழக்குக்கும் வடகிழக்குக்கும் நடுவில் இருக்க வேண்டுவது வாத்யசாலை. கிழக்குக்கும் தென்கிழக்குக்கும் நடுவில் பொக்கிஷசாலையை நிர்மாணித்தல் வேண்டும். தெற்குக்கும் தென் கிழக்கும் இடையில் புஷ்ப மண்டபம் இடம்பெறும். தெற்குக்கும் தெற்மேற்குக்கும் இடையில் குளிப்பதற்கென அமைக்கப்பட்ட திருக்குளம் இருத்தல் வேண்டும். தென் மேற்குக்கும் மேற்குக்கும் இடையே விளங்குவது தர்ம சிரவண மண்டபம். மேற்குக்கும் வட மேற்குக்கும் நடுவில் ஆயுத மண்டபம் இருக்கும். வட மேற்குக்கும் வடக்குக்கும் நடுவில் பள்ளியறை

அமையும். வடக்குக்கும் வடகிழக்குக்கும் இடையில் யாக மண்டபம் இடம்பெறும். கோவிலின் முன்பு நடுவதாக அமைவது ஆஸ்தான மண்டபம்.

வெளிப்பிரகாரத்திற்குப் புறத்தே சிவாசாரியாரின் வாசஸ்தானம் இடம்பெறும். மேற்கே இருக்க வேண்டுவது பரிசாரகரின் வீடு. தெற்குப் பக்கத்தில் வைத்தியருக்கு இடம் உண்டு. இதையடுத்துச் சோதிடம் வல்லோரும் இடம் பெறுவர். வாத்தியம் வாசிப்பவர்கள் கிழக்கே வசிப்பர். சைவ மகாசனங்கள் வசிப்பதற்கும் கிழக்கு சிறந்த இடமாகக் கூறப்படுகின் றது. மகாவிரதிகளுக்கு உரிய திக்கு தென்கிழக்கு பாசுபதர்களுக்கு தெற்கு காளமுகர்களுக்குத் தென்மேற்கு பௌத்தர்களுக்கு மேற்கு ஆருகதர் களுக்கு வடமேற்கு பூர்வமீமாம்சர்களுக்கு வடக்கு ஞானநெறி நிற்போருக்கு வட கிழக்கு, கிழக்குக்கும் தென்கிழக்குக்கும் நடுவே இடம்பெறுவது இன்னொரு கிணறு. தெற்கிலும், வடமேற்கிலும் கேணி அமையும். தெற்கிற்கும் தென்மேற்குக்கும் இடையில் மாட்டுத் தொழுவம்; தென் மேற்குக்கும் மேற்குக்கும் இடையில் பிரசவசாலை; மேற்குக்கும் வடமேற் குக்கும் இடையில் நோய் தீர்க்கும் நிலையம்; வடக்கில் பாடசாலை; வடக்குக்கும் வடக்குக்கும் நடுவில் நெற்களஞ்சியம்; வட கிழக்குக்கும் கிழக்குக்கும் நடுவில் வேதாத்யயனம் மண்டபம்; அதற்குப் புறத்தே வெளியே உருத்திர கணிகையருக்குரிய இடம். அவ்விடத்திலே பூ, எண்ணெய் ஆகிய பொருள்கள் விற்கும் வணிகர் உறைவதற்கும் இடம் உண்டு. குயவர்கள், சேணியர், மாமிசம் புசிப்பவர், நாவிதர். இடையர், காவல் புரிவோர் இதை யடுத்து இடம்பெறுவர். ஈசானத்தில் இருப்பது சுடலை. வடக்கில் இன்னம் வெளியே தச்சர். வண்ணார் முதலியோருக்கு இடம் வகுக்கப்பட்டுள்ளது. இவையனைத்திற்கும் வெளியே சண்டாளர்கள் வகிக்கும் இடம் இருக்கும்.

கிராமத்தினது அங்கங்களும் திட்டமிடலும்

கிராமத்தின் முக்கியத்துவமுடைய எட்டு அணிகலன்கள் காமிகாமத்தில் (I.30) முன்வைக்கப்படு கின்றன. அதனை நோக்குவோம்.

"இப்பொழுது கிராமத்தின் அங்கங்களையடுத்துப் பிழைப்பவர்களின் ஸ்தானங்களைக் கூறப்போகின்றேன். சோதிடர், கணக்கர், வைத்தியர், அம் பட்டர், மருந்து கொடுப்பவர், விஷத்தைப் போக்குகிறவர், தொழிலாளி, தெய் வங்கொண்டாடுவோர் இவ்விதமாகக் கிராமத்தினங்கம் எண்விதமாகும்.

வைசியர், குயவர், அம்பட்டர், புஷ்ப விற்பனையால் ஜீவிப்பவர், வாத்யக்காரர், பிராணிகளால் ஜீவிப்பவர், பண்டிக்காரர், வைதேகவர்த்தகர், சேணியர், கூலிவேலைக்காரர், வண்ணார், சண்டாளர், என்கிற இப் பன்னிருவரும் அங்கத்தையடுத்துப் பிழைப்பவர்கள்.

ஸ்தான நிர்ணயம்

மேற்குத் திக்கில் வர்த்தகருக்கு இடம் அவ்வாறன்றி கிழக்குத் திக்கி லாவது ஆகும். ஈசான்யத் திக்கிலாவது வடக்குத் திக்கிலாவது கிழக்குத் திக்கிலாவது குயவரிருக்குமிடம், நாவிதர்கள் அக்னி மூலையிலாவது கிழக்குத் திக்கிலாவது அவ்விரண்டு திக்கிலாவது இருக்க வேண்டும். ஈசான்யத்தில் புஷ்பவிற்கிரயகாரர்கட்கு இடம் இந்தச் சாஸ்திரத்தில் இச்சிக் கப்படுகின்றது. வாத்தியகாரர்களுட்கிடம் வடக்குத்திக்கில் ஏற்படுத்தப் பட்டது. மேற்குத்திக்கல் அவ்வாறன்றி வாயுதிக்கில் அல்லது நிருதி திக்கில் பிராணி ஜீவனம் பண்ணுகிறவர்களுக்கும் தெற்கிலாவது வடக்கிலாவது வண்டிக்காரர்களுக்கும் இடம் இச்சிக்கப்படுகிறது. இந்தச் சிவாகமத்தில் வைதேகவர்த்தகட்கு வாயு திக்கில் இடம் கூறப்பட்டது. சேணியர்கட்கு இடம் தெற்குத் திக்கில் இருப்புக் கூறப்படுகின்றது. உயர்ந்தவருக்கு வசமாகவே யுக்தியாய் ஸ்தானத்தைச் சேர்க்க வேண்டும் உயர்ந்தவர்கட்கு அருகாமை யிலும், தாழ்ந்தவர்கட்கு தூரத்திலும் இடம் இருக்கவேண்டும்.

அக்நி திக்கிலும் வாயு திக்கிலும் நூறு தண்டப் பிரமாணம் போக்கிக் கூலி வேலைகாரர்கட்கு இரும்பிடம் இருக்க வேண்டும். வண்ணார்களுக்கு அதன் புறம்பாக இரும்பிடம் இருக்க வேண்டும். சண்டாளர்களுக்குக் கிழக்குத் திக்கிலும், விதிக்குகளிலும் செய்யத்தக்கது. சண்டாளர்களுக்குக் கெட்டாரங்களை (குரோச) எண்ணாயிரமுழ தூரத்திற்குப் புறம்பாகச் செய்ய வேண்டும்.

ஈசான்யத் திக்கிலாவது வாயுத் திக்கிலாவது கிழக்குத் திக்கிலாவது வடக்குத் திக்கிலாவது ஆறு முதலானவை இருந்தால் அந்நதிக்கரையில் மயானம் கூறப்படுகிறது. கிழக்கிலாவது மேற்கிலாவது வாயுவிலாவது ஈசான்யத்திலாவது அவ்வாறன்றி வடக்கிலாவது குளம் அல்லது கிணற்றைச் செய்விக்க வேண்டும். வேறு திக்குகளிலும் வர்ஜிக்க வேண்டும். தென் பாகத்தில் பசுக்களின் சாலை, அவ்வாறே வடக்குத் திக்கில் புஷ்பத் தோட்டம்.

அவ்வாறன்றி ஸமஸ்த திக்குகளிலும் நடைபாவி கிணறு, குளங்கள் இருக்கலாம். வைசியர்களுக்கு இருப்பிடம் நான்கு பக்கத்திலும், சூத்திரர் தென்திசையில் இருக்க வேண்டும். இழிதொழிலை யுடைய சண்டாளர் கூலி வேலைகாரர்கட்கு இருப்பிடம் மயானத்திலும் வடக்குப் பிரதேசத்திலும் இருக்க வேண்டும்.

விருக்ஷ விசேஷம்

விசேஷமாக கிராமங்கட்கும், தேவாலயம், வீடு முதலானவை கட்கும், மார்க்கத்திற்கும், சம்சயமான மார்க்கத்திற்கும், சூன்யமாகிய பிரதேசத்திற்கும் மேற்கூறப்போகிற விருக்ஷங்களை ஸ்தாபிக்க வேண்டும்.

நறுவில்லி, ஆல், சடகம், அத்தி, கொன்றை அவ்வாறே அரசு வேம்பு கல்லால் இவற்றை ஈசான்ய முதலான எட்டுத் திக்குகளிலும் பிரதக்ஷணக் கிரமமாக விருத்தி செய்ய வேண்டும். வாஸ்துவிற்குப் புறம்பாகவே விருக்ஷங்கள் ஸ்தாபிக்கத்தக்கவை. இவை மேடையோடு கூடிய விருக்ஷங்களாக இருக்க வேண்டும். இவை விசேஷமாகக் கிராமாதிகளின் குற்றங்களைப் போக்கும்.

ஆயிரத்தைப் பார்க்கிலும், அதிகமாக விபரஸ்தானத்தில், அந்தணரின் சக்தியால் தோஷத்தை அடையமாட்டாது. மங்கள விதிக்குப் புறத்தில் அரைக்கால் கால் அறையாக விருத்தி செய்க. இதரவர்ண வீட்டுத் தோட்டங்களால் மறைக்கப்பட்ட தேவாலயத்தையுடையதாகவும், நான்கு முதல் நான்கைந்து தண்டமும் அதிற் பாதி பாதியுமாக அடைவிப்பித்து வீட்டிற்குத் தக்கபடி பிரகாரத்துடன் தேவாலயமானது செய்யத்தக்கது. இவ்வாறு உருத்திர சம்பந்தமான தேவர்களுக்கு ஆலயத்தைச் செய்விக்க வேண்டும்."

நிறைவுரை

சிவாகமங்களின் வாஸ்து சாஸ்திரவிதி முறைப்படி வளமான சமூக மேன்மைக்கு பௌதிக வளத்தினதும், அமைவிடத்தினதும், இயல்புகளினதும் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறித் திருக்கோவிலை மையப்படுத்திய கிராம நகரத் திட்டமிடலை மிக விரிவாகக் கூறுகின்றன. "கோயில் நகரம்" எனும் பெருமைக்கேற்ப சமூக ஒழுங்கமைப்பும், சமூக விருத்தியின் மேம்பாடும்,

மக்களின் அத்தியாவசியத் தேவைகளும், புரிந்துணர்வுகளும் ஒன்றுபட்ட தன்மையில் கிராம நகரத்திட்டமிடல் அம்சரிகள் திருக்கோவிலை மைப்படுத்தி சிவாகமங்களில் மிக விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்

மூலநூல்கள்

1) <u>அஜிதாகமம்</u> Vol. I, ii, iii, Ed. N.R.Bhatt, lnstitute Francais D' lndologic, Pondichery, - 1964, 1967,1991

2) <u>காமிகாமம்</u> (பூர்வபாகம்) ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1978.

3) .... (உத்ரபாகம்) ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1988.

4) .... (க்ரியா1oபாகம், பூர்வபாகம்) (முற்பகுதி 11)தமிழ் சந்திரிகையுடன் ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1975.

5) <u>காரணாகமம்</u> (பூர்வபாகம்) 1ம் பாகம் மயிலை அழகப்பா முதலியார் (பதி.), சிவஞானபோத யந்திசாலை, சித்தாரிப்பேட்டை, சென்னை, கலி. 5023 (1921). 14

6) .... (உத்தரபாகம்) 2ம் பாகம், மயிலை அழகப்பா முதலியார் (பதி.), சிவஞானபோத யந்திசாலை, சித்தாரிப்பேட்டை, சென்னை, கலி. 5029 (1927).

7) <u>ரௌரவாகமம்</u> Vol. I, II, III, Ed.N.R.Bhatt, Institute Francais D'lndologic, Pondichery, - 1961, 1972, 1988

8) <u>சுப்ரபேதாகமம்</u> மயிலை அழகப்பா முதலியார் (பதி.), சிவஞானபோத யந்திசாலை, சித்தாரிப்பேட்டை, சென்னை, கலி. 5009 (1907).

9) மகுடாகமம் (பூர்வபாகம்) சி. சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்சகர், சென்னை, 1997.

10) வேதஞானரின் சிவாகம பரிபாஷா மஞ்ஜரீ Ed. Bruno Dagens, Institute Francais D' Indologeic, pondichery, - 1979.

11) ஸ்ரீமத் கிராணகம மஹாதந்திரம் சிவாகம சித்தாந்த பரிபாலன அச்சகம், தேவ கோட்டை, 1932.

12) உபயவேதாந்தி விஸ்வநாதரின் சித்தாந்த சேகரம் ஸ்ரீ.மு. சீதாராம கிருஷ்ண சோமயாஜி(பதி.), ஸ்ரீ மனோன்மணி க்ரந்தமாலை. மைசூர், 1971.

13) ஸ்ரீமத் காச்யப சில்ப சாஸ்திரம் (பூர்வபாகம்), கே.எஸ். சுப்ரமண்ய சாஸ்திரிகளின் தமிழ் மொழிபெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1968

14) மயமுனிவரின் மயமதம் (பூர்வபாகம்), கே.எஸ். சுப்ரமண்ய சாஸ்திரிகளின் தமிழ் மொழி பெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1966

15) .... (உத்தரபாகம்), கே.எஸ். சுப்ரமண்ய சாஸ்திரிகளின் தமிழ் மொழிபெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1966.

16) அகஸ்தியரின் சகளாதிகாரம் ஸ்ரீ. கே. வாசுதேவ சாஸ்திரிகளின் சாஸ்திரிகளின் தமிழ் மொழிபெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1996.

ஏனைய நூல்கள்

1) DEVALAYA VATSU (Vol. I). S. k. Ramachandra Rao, KALPATHARU RESEARCH ACADEMY, BANGALORE, 1997.

2) SIVA TEMPLE AND TEMPLE RITUALS Ed. s.s. JANAKI, The Kuppuswami Sastri Research Institute, Madras, 1988

3) <u>சைவத்திருக்கோயிற் கிரியை நெறி,</u> கைலாசநாத குருக்கள். கா, இந்துகலாபிவிருத்திச் சங்கம், கொழும்பு, 1961.

4) INDIAN TEMPLE TRADITIONS S.K. Ramachandra Rao, Kalpatharu Research Academy, Bangalore, 1997.

08. புலப்படுத்தும் இந்துசமய வாழ்வியல் ஓர் ஆய்வு

அறிமுகம்:

இந்திய சமய மரபில் சமூகத்தினை ஆஸ்திகம், நாஸ்திகம், என வகைப் படுத்துவர். அதேவேளை வைதிகம், அவைதிகம் என்றும் வகைப்படுத்துவர். இந்துசமய மரபில் இந்நிலை ஆஸ்தீகம் சார்ந்த வைதிகமரபாகவும் விளங்குகின்றது. இந்துசமய மரபில் வாழ்வியற்கோலங்களை வேதங்களின் வழி சம்ஹிதைகள், பிராணங்கள் ஆரண்யங்கள் உபநிடதங்கள் கூறி நிற்கின்றன. இம்மரபில் சிறப்பாக வாழ்வியலின் செயல்களுக்கான காரண காரியங்களை விதி, அர்த்தவாதம் எனும் நிலையில் பிராமண இலக்கியங் கள் கூறி நிற்கின்றன. இவற்றிற்கு மேலும் மெருகூட்டும் தன்மையில் இலட்சியமான வாழ்வியலை இதிகாச புராணங்கள் சித்தரித்துக்காட்டு கின்றன. இந்நிலையில் இந்து சமய வாழ்வியல் பற்றிய கோலங்கள் செய்யத்தக்கன எவை? செய்யத் தகாதன எவை? என ஒரே நிலையில் கூறும் சிறப்புடைய நூல்களாக சிவாகமங்களே விளங்குகின்றன. இவை வாழ்வியல் பற்றியும், வாழ்வியல் இலட்சியம் பற்றியும் கூறும் சிறப்புக்களும் தனித்துவங்களும் சிறப்புப் பெறுகின்றன. அம்மரபில் படிநிலையில் நிரைப்படுத்திய இந்துசமய வாழ்வியலை விடுதலையின் இலக்கினை நோக்கியதான ஆத்மாவின் பயணமாக அமைக்கின்றது. இவ்வகையில் சிறப்பாக சிவாகமங்கள் கூறுகின்ற ஆத்மவிடுதலையின் முறைமைகளை கூறும் தத்துவமாக சைவசித்தாந்த தத்துவத்தின் முக்கிய கூறுகளை விபரிக்கும் வகையில் கிரணாகமம் விளக்கி நிற்கின்றது.

சிவாகமம்

சிவாகமங்கள் மூலசிவாகமங்கள், உபாகமங்கள் என இருவகைப்படு கின்றன. மூலசிவாகமங்கள் இருபத்தெட்டு அவை சிவபேதம், ருத்ரபேதம் என இருவகைப்படுகின்றன. சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சிவனால் உபதேசிக்கப்பட்ட சிறப்புடையன. அவ்வகையில் காணப்படுகின்றன. இச்சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியை, கிரியை, யோகம், ஞானம், உப

தேசக்கிரமம், சம்பந்தம் எனும் சிறப்புப்பெறும் வகையில் வித்யாபாதங்கள் எனும் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அவ்வகையில் கிரியா பாதத்தின் விரிவுரைகளையே நாம் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் காணப்படும் திருக்கோவில்களின் அமைப்பு முதல் வழிபாட்டு மரபுகள் விழாக்கள் என்பவற்றில் பிரதிபலித்துக்காணப்படுவதனைக் காணக் கூடிய தாகவுள்ளது. இம்மரபின் அடியூற்றாக சிவாகமங்களே. விளங்குகின்றன. இவ்வகையில் சிவாகமங்கள் இறைவன் திருவுருவம், திருக்கோவில் போன்ற விடயங்களின் விதிகளைக்கூற புராணங்கள் சிறப்பாக இறைவன் மற்றும் திருக்கோவில் பற்றிய தெய்வீகவியல் வரலாற்றைக் கூறும் இலக்கியங் களாக விளங்குகின்றன. அந்நிலையில் இந்து வாழ்வியல் பற்றிய தன்மை யில் ஆசாரம், அனுஷ்டானம், வாழ்வியல் முறை என்பவற்றை சிவாகமங்கள் சிறப்பாக விதிக்கின்றன. இத்தகைய வாழ்வியலையே நாம் சைவவாழ்வு என நோக்குகின்றோம். இதற்கு ஏற்ப சைவ ஆசாரம், சைவ அனுஷ்டானம், சைவ வாழ்வியல் முறை என்பன தனித் தனியாக விபரமாக விளக்கமாகக் கூறப்படு கின்றன. அவை மிகவிரிந்து செல்லும் தன்மைய தாகின்றன.

சைவவாழ்வியல் பற்றிய விடயத்தில் சிவதீஷை, சிவ பூஜை, சைவ ஆசாரம் என்பன தனித்துவம் பெறுவனவாக அமைகின்றன. இவை கிரியை மரபில் தனித்துவம் மிக்கனவாக விளங்கி நிற்கின்றன.

கிராணாகமம்

சிவாகமங்கள் இருபத்தெட்டினுள் இருபத்தேழாவதாக அமைவது கிரணாகமம் ஆகும். இவ்வாகமம் ஸ்ரீமத் கிரணாகமம் என்றும், ஸ்ரீமத்திரணாகம மஹாதந்திரம் என்றும் அழைக்கப்படும். இச்சிவாகமம் சரியை, கிரியை, யோகம், ஞானம் /வித்தியா பாகங்களை தன்னகத்தே கொண்ட மூல சிவாகமங்கள் ஐந்தினுள் ஒன்றாக விளங்குகின்றது.

சிவாகமம் என்பதே சைவசித்தாந்தம் எனக் காமிகாகமம் கூறிநிற்கின் றது. இவ்வகையில் சிவாகமத்தினுள் கூறப்பட்ட உயர்தத்துவமாகிய ஆன்ம விடுதலை எனும் வாழ்வியல் இலட்சியம் சிவாகமங்களின் வழி வந்த வடமொழி சைவசித்தாந்த மூலநூல்களாகிய அஷ்டபிரகரணங்களிலும் நன்கு வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

ஸ்ரீமத்கிரணாகமம் சிவனால் கருடனுக்கு உபதேசிக்கப்பட்ட சிறப் புடையது. இச்சிவாகமம் 64 படலங்களை உள்ளடக்கியது. வித்தியா/ ஞான பாதம் 1–12 வரையான 12 படலங்களையும், கிரியாபாதம் 13–30 வரையாக 18 படலங்களையும், சர்யாபாதம் 31–57 வரையாக 27 படலங்களையும் யோகபாதம் 58–64 வரை 7 படலங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

இக்கிரணாகமத்திற்கு விருத்தி உரையினை பட்டராமகண்டர் என் பவரும், அகோர சிவாச்சாரியார் என்பவரும் கி.பி 12 நூற்றாண்டுக்கு முன் னரே எழுதியுள்ளனர். அதற்கு மேலாக வாசீகமுனிவரின் தமிழ்மொழி யிலமைந்த ஞானம்ருதம் எனும் நூலுக்கும் இவ்வாகமமே மூல நூலாக விளங்குகின்றது.

சைவசித்தாந்தம்

சைவசித்தாந்தம் சைவசமயத்தின் சமயதத்துவமாகும். இது வேதாந்த தத்துவத்தின் தெளிவு ஆகும். இத்தத்துவத்தில் முப்பொருள்கள் பேசப்படு கின்றன. அவை இறைவன், உயிர், மலங்கள் என்பனவாகும். இங்கு இறை வன் என்பது பதி என்றும், உயிர் என்பது பசு என்றும், மலங்கள் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று என்றும் இவற்றிற்கான உறவு களூடாக பதி என்று இறைவனை பசு பாசத்திலிருந்து நீங்கி அடைதலே முத்தி என்று விபரிக்கப்படுகின்றது. இந்நிலையில் பதி அதனது பிரிவுகளும் இயல்புகளும், பசு அதன் பிரிவுகளும் வகைகளும், பாசம் அதன் பிரிவுகளும் வகைகளும், பாசம் அதன் பிரிவுகளும் உட்பிரிவுகளுமாக அவை வாழ்விய லோடு இணைந்த தன்மையினைத் தெளிவுபடப் படம் பிடித்துக்காட்டுகின்றன. அந் நிலையில் கிரணாகமம் கூறும் இயல்புகளை சைவ வாழ்வின் கோல மாகக் கொண்டு நோக்குவோம்.

சைவவாழ்வு

இந்து என்பதும் சைவம் என்பதும் ஒரு பொருளைச்சுட்டும் வேறு பெயர்களேயாகும். சைவ வாழ்வில் பாதங்களாக சரியை, கிரியை, யோகம், ஞானம், எனும் நான்கும் கூறப்படுகின்றன. அதற்குரிய மார்க்கங்களாக தாச, சற்புத்திர, சக, சன்மார்க்கங்களும், முத்திகளாக சாலோக, சாமீப, சாரூப,

சாயுச்சிய முத்திகளும் இலக்குகளாகக் கூறப்படுகின்றன. இந்நிலையில் முத்தி எனும் வாழ்வியல் இலட்சியத்தின் வழிகளே வேறுபடுகின்றனவே யன்றி பரம்பொருளான இறைவனை ஆன்மா அடைதல் என்பது இலட்சிய மாகின்றது. இந்நிலைகளுக்கு கிரணாகமம் சுட்டிக்காட்டும் வாழ்வியலை ஒவ்வொரு பாதங்களூடாகவும் நோக்குவோம்.

1. சர்யாபாதம்

கிரணாமத்தின் சர்யாபாதத்தில் சமயாசாரவிதி(31), பிக்ஷாட விதி (33), அநத்யாய விதி(35), சிவாசர்ய ஆசார விதி (37) ஆஸ்ரம ஆசார விதி(38), ஆசார்யவர்ஜ்ய, அவர்ஜ்ய விதி(41), ஆசௌசவிதி (42), மஹாபாதகாதி பிராயச்சித்த விதி (43), உபபாதகாதீநாம் க்ருச்சிர ஆசாரண பிராயச் சித்தவிதி (44), ஆச்சார்யாதி ஸ்நான, போஜன விதி(45), சைவ விரதாசரண விதி(48), சாதக விரதாசரண விதி (49), குரு விரதாசரண வதி, (50) ஆகிய பதின்மூன்று படலங்கள் இவ்வாறு பின்பற்றப்படவேண்டும் என விதியாகக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சைவவாழ்வை விதியாகக் கூறும் தன்மைகளில் நோக்குகையில் காலை துயில் எழுதல் முதலான காலைக்கடன்களை சமயாசாரா விதி கூறிநிற்கின்றது. மாணவனாக குருவின் பணிவிடையின் கீழ் கல்வி பயில்பவன் தன்னடக்கமாக எவ்வாறு பிச்சையெடுத்துத் தனது கல்வியைத் தொடர வேண்டும் என்பதனை பிக்ஷாடன விதி கூறிநிற்கின்றது எவ்வெவ் நாட்களில் கல்வி கற்பதனை விலக்க வேண்டும் என்பதனை அனத்யாய விதி (2-10) கூறிநிற்கின்றது. சிவாச்சார்யார் விசேடமாக சிவபூஜை செய்யத்தக்க நாட்களாக,

"அஷ்டம், சதுர்தசீ ஆகிய பூர்வ அபரகிருபஷங்களிலும்
அஹாரம் எதுவும் அருந்தாது விசேட பூஜை செய்ய வேண்டும்"2

என கூறும். அதேவேளை ருத்ராக்ஷத்தை எங்கெங்கும் எவ்வாறு தரிக்க வேண்டும் (37.5-7) என்பதனையும், உபவீதம் எவர்கள் எவ்வாறு தரிசிக்கத்தக்கது (37.8-9) என்பதனையும், விபூதி எவ்வாறு தரிக்கத்தக்கது. (37.10-12) என்பதனையும் கூறும். அதேவேளை சிவனது சிரசூன்யமாக

இருக்கக்கூடாது (37.13) என்பதனையும் விளக்கிக் கூறுகின்றது. நான்கு வர்ணத்தவர்களுக்குமான தீக்ஷை, ஆச்சிரமங்களான பிரம்மசர்யம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்பவற்றையும் ஆஸ்ரமங் களில் செய்யத்தக்கன என்பதனை முறையே வர்ணங்களுக்குரிய ஆசார விதிகளை (38.14–23)யும் ஆஸ்ரமங்களுக்குரிய ஆசார விதிகளை (38.14–23) யும் விரிவாக்கக் கூறுகின்றது. சிவாச்சாரியராக விளங்குபவர் செய்யத் தக்கவை எவை? செய்யத்தகாதன எவை? என்பதனை (41.2–28) விதியாகக் கூறி நிற்கின்றது. இவ்விதமே ஆசௌசவிதி (42) செய்த தவறிற்கான பிராயாசித்தம் (43, 44) என்பன கூறப்படுகின்றது. இதற்கு மேலாக சைவ விரதங்களும் அதற்கான வாழ்வியலும் (45, 48, 49,50) விபரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

உ. க்ரியாபாதம்

கிரணாகமத்தின் க்ரியாபாதத்தில் ஆத்மார்ந்த சிவ பூஜை பூஜாவிதி(14) என மிகவிரிவாக விபரிக்கப்பட்டுள்ளது. பஞ்சசுத்தியுடன் கூடியதும் பஞ்ச ஆவணங்களுடம் கூடியதும் பதினாறு உபசாரங்களுடன் கூடியதுமாக (14.1–51) விபரிக்கப்படுகின்றது. தீக்ஷை மிகவிரிவான முறையில் (22.1–87) விபரிக்கப்படுகிறது. தீக்ஷையுடன் கூடிய விடயங்களே (24,25,26,27) விபரிக் கப்படுகின்றன. சிவபூஜையின் சிறப்பின் கலாதீதனும், சூக்ஷ்மவடிவமுடைய வருமான சதாசிவனே லிங்கவடிவமாக (14.45.46) தியானிக்கப்பட்டு பூஜிக்கப்படுவது முக்கியத்துவமுடைய விடயமாகும்.

௩. யோகபாதம்

கிரணாகமத்தின் யோகபாதத்தில் யோக அப்யாச விதி (58) விபரிக்கப் படுகின்றது. அத்துடன் மோக்ஷத்திற்கு காரணமாகிய அபரக்கிரியைகளுள் அந்தியேஷ்டிவிதி (60) சைவ சிராத்தவிதி (61) என்பன விபரிக்கப்படுகின்றன.

மோக்ஷத்தை அடைவதற்கு சாதனையாக விளங்கும் யோகம் இங்கு ஆறு அங்கமுடையதாக விபரிக்கப்படுகின்றது. அவ்வகையில்,

'யோகங்கள் சித்தியையும் மோக்ஷத்தினையும் அதற்கு பயிற்சியான நன்மை பொருந்திய ஆறு அங்கத்துடன் கூடிய விடயமானது அறியத்தக்கது.

அதனை, கருடனே நீ கேட்பாயாக. ஆறு அங்கங்களும் முறையே பிரத்யாஹாரம், தியானம், பிராணாயாமம், தாரணம், ஆசனம், சமாதி என்பனவாகும்." (58. 2–3) என விபரிக்கப்படுகின்றது.

5. ஞானபாதம்

கிரணாகமத்தின் ஞானபாதம் வித்தியாபாதம் என்றும் அழைக்கப்படும். இதில் பசு(1), மாயா(2), கர்மா(3), பதி(4), சக்திபாதம்(5) எனும் சைவ சித்தாந்த தத்துவம் சார்ந்த விடயங்களும், தீக்ஷைசார்ந்த விடயங்களான, தீக்ஷாகர்மா(6), மந்திர(7), புவன(8) சிவதத்வ(9) படலங்கள் விபரிக்கப் படுகின்றன.

சைவ வாழ்வு என்பதன் இலட்சியத்தைச் சித்தரிக்கும் சைவசித்தாந்த தத்துவத்தின் உயர் நிலைப்பொருட்கள் மூன்றும் சிறந்த முறையில் விபரிக் கப்படுகின்றன. அந்நிலையில் பதி எனும் இறைவன் சிவனாக விபரிக்கப்படும் தனித்துவம் முக்கியத்துவமுடையது.

சைவசமய வாழ்வியல்

இந்து என்பதும் சைவம் என்பதும் ஒரே சொற்களே ஆகும். சைவ வாழ்வின் பயனை சைவசித்தாந்தம் என்பர். வாழ்வின் இறுதியில் இறை வனை அடைதல் என்பது அந்நிலையினை அடைவதற்கான வழிமுறைகளை சிறப்பாக கிரணாகமம் கூறிநிற்கின்றது. அந்நிலையில் சைவ சித்தாந்தம் பயன்படுத்துகின்ற கலைச் சொற்களான மலம், கன்மம், பதி, பசு சக்தி நிபாதம், ஸஹஜமலம், மாயை முதலான சொற்பிரயோகங்களை அவ் விதமே பயன்படுத்துகின்றன. இவ்வகையில் வாழ்வியல் இலட்சியம் மோக்ஷத்தை இலக்காகக் கொண்டதாக இட்டுச் சொல்லப்படுகின்றது. அதற் கான நியமங்களும் கட்டமைப்புக்களும் கூறப்படுவது கிரணாமத்திற்குரிய தனித்துவமாக அமைவதனை காணமுடிகின்றது.

நிறைவுரை

இவ்வாறாக கிரணாகமம் எனும் சிவாகமம் சமய வாழ்வியல் என்பது எத்தகைய தன்மையது என்பதனை புலப்படுத்திக்காட்டும் அதேவேளை, அத்தகைய வாழ்வு சைவசித்தாந்த வாழ்வியலை சுட்டிநிற்கின்றது என்பதை

தெளிவாகக் காணமுடிகின்றது இந்நிலையில் சைவசித்தாந்த தத்துவம் தோற்றம் பெறுவதற்கு முன்னரே கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளையும் கலைச்சொற் பிரயோகங்களையும் சிவாகமங்கள் கொண்டு விளங்குகின் றன என்பதனைக் காணமுடிகின்றது. இத்தகைய தன்மைகளினூடாக கிரணாகமம் கிரியையைக் கூறும் சிவாகமம் எனும் பொதுவான இயல்பு நிலைக்கு மேலாகச் சமயவாழ்வியின் கட்டமைப்பினையும், இறுதிப் பயனையும் அதற்கான காரணங்களையும் விளக்கிநிற்கும் தன்மையானதாக வும், சைவசித்தாந்த தன்மையின் சைவ வாழ்வியலின் பல்வேறு பரிணா மங்களையும் விதித்துக் கூறும் கட்டமைப்பாகவும் விளங்கி நிற்பதனை தெளிவாகக் காணலாம்.

கிரணாகமம் புலப்படத்துவதும் இந்துசமய வாழ்வியலே என்பது தெளிந்த முடிவாகும்.

அடிக்குறிப்புகள்

1. காமிகாகமம், 1.119
2. கிரணாகமம், 37.2

உசாத்துணை நூல்கள்

1. காமிகாகமம், (1975), பூர்வபாகம், சுவாமிநாதக் குருக்கள் (பதி) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை .
2. கிரணாககமம், (1932), சிவாகம சித்தாந்தபரிபாலன சங்கம், தேவகோட்டை, கும்பகோணம்

09. சிவாகம மரபில் விஷ்ணு

இந்துசமயம் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் ஆறு மதப்பிரிவுகளைத் தன்னத்தே கொண்டு விளங்குகின்றது. இந்து, சைவம் எனும் பொருளையே உணர்த்துகின்றது சைவம் சிவசம்பந்தமுடையது; சிவனை முழுமுதற்கடவுளாக உடையது. இத்தகைய சைவசமயத்திற்கு அடிப்படையானவை சிவாகமங்களும் சைவமரபுகளுமேயாகும். சிவாகம மரபில் முக்கியத்துவம் பெறுவது திருக்கோவில் அமைப்புகளும், கிரியைமரபுகளுமாகும். இவை யாவற்றி னூடாகவே சிவாகம மரபில் விஷ்ணு நோக்கப்படுகின்றது.

திருக்கோவில் வழிபாட்டு மரபுகளுக்கு அடித்தளமாக அமைவது சிவாகமங்களாகும். இந்துசமயத்தின் கலைக்களஞ்சியமாக விளங்கும் சிவாகமங்கள் திருக்கோவில் அமைப்பு, வழிபாடு, திருவுருவம், ஓவியம், இசை, கலை, தத்துவம் எனப் பல இன்னோரனை அம்சங்களைக் கூறி இந்துப்பண்பாட்டின் அடிப்படைத்தன்மைகளைக் கூறுகின்றன. இத்தகைய சிவாகமங்கள் சிவனை மையமாகக் கொண்ட திருக்கோவில் சார்ந்த விடயங்களை விதிநூல்களாக விதித்துக் கூறுவதை மையமாகக் கொண்டு விளக்கமளிப்பதைப் பிரதானமாகவும், அதிலிருந்து ஏனைய அம்சங்களை ஆங்காங்கு விதித்து உணரவைப்பதும் சிவாகமமுறையாகும். அத்தகைய நிலையில் இடம்பெறும் அம்சங்களுள் விஷ்ணுவும், விஷ்ணுசார்ந்த வழிபாடு திருக்கோயில் சிறப்புகள் என்பனவும் இடம்பெறுகின்றன.

விஷ்ணு சம்பந்தமுடையது வைஷ்ணவம். இவ்வைஷ்ணவத்திற்குரிய சிறப்பு வாய்ந்த தனித்துவமான மரபுகளை வைஷ்ணவ சம்ஹிதைகள் கூறுகின்றன. இவ்வைஷ்ணவ சம்ஹிதைகள் எண்ணிக்கையில் பல. இவற்றுள் பாஞ்சராத்திரம், வைகாசனம் எனும் இரண்டு பிரிப்புகள் சிறப்பான தன்மையுடையன. இவ்விரண்டு பிரிவுகளையுடைய சாஸ்திரங்களும் விஷ்ணுவின் வெளிப்படுத்தும் தன்மைகளுள் சிறந்ததும், அடியார்களுக்கு மானவைகளுமான பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சம் எனும்

ஐந்து அம்சங்களை விளக்கிக் கூறும் சிறப்பினைத் தன்னகத்தே கொண்டது என்பது அதன் சாரமாக அமைகின்றது.

திருக்கோவில் அமைப்பு சார்ந்த தன்மைகளினை விளக்கும் சிறப்பு இந்திய சாஸ்திர மரபிற்கே வாஸ்து தனித்துவமான சிறப்பாகும். அவற்றுள் சிவாகமங்கள், சிற்பசாஸ்திரங்கள் சாஸ்திரங்கள் ஒன்றிணைந்த பங்கு வகிக்கின்றன. இவை கூறும் தன்மைகள் இந்தியப்பண்பாட்டுடன் அமைந்து இணைந்து இந்துப் பண்பாட்டின் சிறப்பாக இணைந்த சிவாகம மரபில் முக்கிய பங்கினை வகிக்கும் இந்தியத் திருக்கோயில் அமைப்பு முறைமை இந்தியா எங்கணும் சுவறிக் காணப்படுகின்றது. அத்தகைய பிரிப்புக்களுள் ஒவ்வோர் தனித்துவமும் உண்டு. அத்தகைய தனித்துவம் சார்ந்த தன்மை களின்படி வைஷ்ணவம் என்பதில் தத்துவம் தவிர்ந்த ஏனைய அம்சங்களில் சிவாகமங்களின் செல்வாக்கு பிரிக்கமுடியாத தன்மைகளைத் தன்னத்தே கொண்டதாக விளங்குவது மனங்கொள் ளத்தக்கது. இதன்படி சிவாகமம் சார்ந்த மரபானது இந்தியப் பண்பாட்டிற்கே பொதுவான தன்மையது என்றும் கூறலாம். அந்நிலையில் வைஷ்ணவம் எனும் பிரிவு தத்துவம் சார்ந்த நிலை யினின்று நோக்கும் வழிபாடு போன்ற இன்னோரம்சங்களில் சைவம் சார்ந்த தன்மைகளைக் கூறாதுவிட்டு விடுவது மனங் கொள்ளத்தக்கது. எனினும், சைவாகமகமரபில் வைஷ்ணவம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சைவவழிபாட்டு மரபில் சிவாகமங்கள் விபரிக்காத வழிபாட்டு மரபு களும் திருவுருவ மரபுகளும், கிரியை நெறிமுறைகளும் கிடையாதென்றே கூறலாம். அந்நிலையில் விஷ்ணுவின் திருவுருவ அமைப்பு முறைகளை சிவாக மங்கள் சிறப்பாக சித்திரிக்கின்றன. அவற்றைவிட சைவமரபில் சிறப்புற்று விளங்கும் அர்த்தநாரீஸ்வர மூர்த்தத்தைப் போன்று சைவ வைஸ்ணவ அபேதத்தை விபரிக்கும் ஹரிஹர மூர்த்தத்தையும், சச்சிதானந்த மூர்த்தி எனப்படும். விஷ்ணு அனுக்ராஜ மூர்த்தி வடிவமும், மும்மூர்த்திகளுள் ஒன்றான வடிவ மும் சிவனுக்கேயுரிய தனித்துவமான ஏகா பாதத்ரி மூர்த்தி வடிவிலும் விஷ்ணு விளங்கி நிற்பதைக் காணலாம். இவற்றைவிட மூர்த்தத் தின் அம்சங்களோடு இணைந்தவராக வைவாஹ்ய மூர்த்தத்திலும், லிங்கோத்பவ மூர்த்தத்திலும் விஷ்ணு இடம்பெறுவது மனங்கொள்ளத்தக்கது. சிவாகம மரபுகளில் சிறப்புக் களை தெய்வீகவியல் வரலாறுகள் கதைவடிவில் எமக்குச் சித்தரிக்கின்றன. சிவாகமங்கள் கூறும் லக்ஷியங்களாக விளக்கும் தன்மைகளின் தனித்து

விளக்கங்களைத் தருவன இதிஹாஸ புராணங்களாகும். இப்புராணங்களே எமக்கு தெய்விகவியல் வரலாறுகளை எடுத்துக்கூறுகின்றன.

வைஷ்ணவ மரபில் விஷ்ணுவின் திருவுருவச் சிறப்புக்களில் முக்கியத் துவமான சிறப்பான உணர்த்துவது அவதாரம் எனும் கோட்பாடாகும். இவ் வதாரக் கோட்பாடுகளில் தசாவதாரம் சிறப்புப் பெறுகின்றது. இவற்றின் சிறப்பியல்புகளை சிவாகமங்கள் கூறாதுவிடுவதும் வைஷ்ணவத்திற்குரிய தனித்துவத்துடன் வைஷ்ணவ சம்ஹிதைகள் முக்கியத்துவம் கொடுத்து விளக்கி நிற்பதும் மனங் கொள்ளத்தக்கது.

சைவத்திருக்கோவிற் சிறப்புகளின் விரிவுகளையும். பிரகாரங்கள், கோபுரங்கள் என்பவற்றுடன் கூடிய நகரமயமாகும் சிறப்பினைச் சிவாகமங் களின் கிராமதி விந்யாஸ படலம் சிறப்பாகக் கூறுகின்றது. அந்நிலைகளின் படி முக்கிய தேவதையாக சிவன் ஸ்வரந்திர மூர்த்தியாக விளங்க ஏனைய ஸ்தானங்களில் அமையும் முறையில் தரந்துறையும் தெய்வமாகவும், பரிவாரமாகவும் பல தேவதைகள் சித்திரிக்கப்படுகின்றன. அந்நிலையில் முக்கிய சிறப்புப் பெறுவன பரிவாரங்களேயாகும். இறைவனை அரசு நிலைப்படுத்தும் சிறப்புப் பெறும் இவ்வம்சங்களுள் அந்தர்ஹாரம் எனும் இரண்டைப் பிராஹாரத்தில் அமையும் அஷ்டபரிவாரங்கள் முக்கியத்துவ முடையன. அத்தகைய மூர்த்திகளுள் ஒன்றாக விளங்கும் விஸ்ணுவின் ஸ்தானம் பற்றி ரௌரவம், அஜிதம், தீப்தம், காரணம், யோகம், வீரம் ஆகிய சிவாகமங்கள் கூறுகையில் வடக்குத்தெற்கில் தெற்கு நோக்கிய சந்நிதியாக விஷ்ணு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. எனினும், சுப்பிரபேதாகமம் தெற்கில் வடக்கு நோக்கிய சந்நிதியாக சித்திரிக்கின்றது.

சிவாகமங்கள் கூறும் தெய்வங்கள் அஷ்டமூர்த்தி வடிவினைச் சார்ந்தன. இவ்வஷ்டமூர்த்த வடிவங்களாவன பிருதிவ், அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், எஜமான் என்பன. இவ்வஷ்டமூர்த்த வடிவங்களின் ஒன்று சேர்ந்த வடிவமே வழிபாட்டிற்காக விளங்கும் திருவுருவமாகும். அந்நிலை யின் அடிப்படையில் அஷ்ட மூர்த்திஸ்வரர்களாக விஷ்ணுவின் அமை விற்கு விஸ்வயோனி, சுசின், பத்மநாபன், அம்ருநாம்சு, கிருஷ்ணன், வைகுந்தன், விஷ்டரஸ்வரன், தாமோ தரன் ஆகியோர் சுட்டப்படுகின்றனர். இணை வடிவமே பிரதிஷ்டையின் போது நிலைத் திருப்பது மனங்கொள்ளத்தக்கது.

இதன் அடிப்படையில் சிவாகமங்கள் மரபுநிலை சார்ந்த தன்மையில் கூறும் பிரதிஷ்டை / ஸ்தானங்களின் வரிசையில் விஷ்ணுவின் ஸ்தாபன பற்றி நோக்குவோம். விஷ்ணுஸ்தானம் பற்றி ரௌரவாகமம் (36), அசிந்த்ய விஸ்வ சாதாக்யம் (64), காரணம் (1.99), பாரமேஸ்வரம், வீரம், சந்தான சம்ஹிதை ஆகியன கூறுகின்றன.

சிவாகமங்கள் கூறும் ஸ்தாபனம் ஸ்வதந்திரம், கேவலம் என இரு வகைப்படும். ஸ்தாபனம் செய்யப்படும் வகைப்படியே நித்திய, நைமித்திய காமிய கிரியைகள் அமைவது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் ஸ்ஹந்திரம் என்பது விஷ்ணுவைப் பொறுத்தவரையில் விஷ்ணுவை மையமாக்க கொண்டு விஷ்ணுவின் பரிவாரங்களையும் தன்மையாகும். கேவலம் எனப்படுவது தனியாக விஷ்ணுவை ஸ்தாபிப்பதாகும்.

விஸ்ணுவை ஸ்தாபிக்கத்தக்க ஸ்தானங்களைக் கூறும் சிவாகமங் களுள் ரௌரவாகமம் கூறுகையில் : "கிராமங்களின் மத்தியிலோ, எட்டுத் திக்குகளிளோ, அந்தராளத்திலோ, சமுத்திரத்தின் அருகிலோ, குளம், காடு, நதிக்கரை இவைகளிலோ, குளத்தின் கரையிலோ, பொதுவாக விரித்துரைக் கப்பட்டவாறு எத்தகைய பலன் எதிர்பார்க்கப்படுகின்றதோ அதனை மைய மாகக் கொண்டு ஸ்தாபிக்கப்படுகின்றதோ அந்தத்திக்கில் அவ்விதமே நோக்கும் திசையையும் தீர்மானித்து விஷ்ணுவின் ஆலயத்தை அமைக்க வேண்டும். இவ்வாறாக முன்பு கூறப்பட்ட விதிப்படியே அமையும்" என விளக்கிக் கூறு கின்றது. மேலும், இதன் விரிவுகளை சிவாகமங்களின் கிராமசிவந்யாஸ விதிபடலம், பீராஸாதலஹணவிதிபடலம், மண்டபலனூண விதிபடலம் என்பவை நோக்கத்தக்கன. இவற்றிற்கு மேலாக இது பற்றி காரணாகமம் கூறுகையில் : "கிராமத்திற்கு மேற்குத்திக்கில் சமப்படுத்தப்பட்ட பிரதேசத் திலோ அன்றில் வடமேற்குத் திசையிலோ கருடனை வாகனமாக உடைய விஷ்ணுவிற்கு ஆலயம் அமைப்பது உத்தமம்" எனக் கூறுகின்றது.

இவ்வாறான ஸ்தானங்களில் அமையத்தக்க விஷ்ணுவின் லக்ஷணங் களை ரௌரவம், வீரம், அஜிதம் ஆகியன சிறப்பாக விளக்கிக் கூறுகின்றன. சிற்பவியல் லக்ஷணங்களில் உத்தம தசதால அமைவில் அமையத்தக்க விஷ்ணு வின் தோற்றப்பாடு பற்றி ரௌரவம்வாகம கூறுகையில். "நான்கு கைகளும்,

இரண்டு கண்களும், சிரித்த முகமும், கரியநிறமும், கிரீடமகுடத்தோடு கூடியும், ஒளியுடனும், ராஜபூஷணங்களை அணிந்தும், சமபாதமாக பத்மபீடத்தின் மீது நின்றும், நான்கு கைகளுள் வலது கீழ்க்கரத்தில் அபயமும், இடது கீழ்க்கரத்தில் தண்டம் தாங்கியும், வலது மேல்க்கரத்தில் சக்கரமும், இடது மேற்கரத்தில் சங்கும் தரித்தவராக பட்டாடை தரித்து பலவிதமான அழகிய ஆடை அணிந்து வலதுஇடது புறங்களில் முறையே ஸ்ரீதேவியும் பூமிதேவி யும் விளக்கி நிற்கின்ற விஷ்ணுமூர்த்தியின் வடிவத்திற்கு தேவிகளும் நிற் பவர்களாகவும், இருக்கின்ற வடிவத்திற்கு இருக்கின்ற வர்களாகவும், நிற்கின்ற வர்களாயின் விஷ்ணுவின் இருமருங்குகளிலும் த்ரிபங்கத்துடன் விளங்குவர், எனக் கூறுவதோடு கவனத்தில் கொள்ளத்தக்க விடயங்கள் பலவற்றை முன்னர் கூறிய விதிப்படியாக அதில் அதிக கவனம் செலுத்தவேண்டிய முக் கியத்து வத்தை வலியுறுத்திக் கூறுவது முறைமையாகும். அதனை அடிப் படையாகக் கொண்ட தன்மைகளினடிப்படையிலேயே திருவுருவ லக்ஷணங் களிள் விளக்கிக்கூறப்படுவது மனங்கொள்ளத்தக்கது. இந்நிலையினடிப் படையில் வீராகமம் கூறுகையில் "விஸ்ணுமூர்த்தியின் வடிவம் நிற்பதாகவோ. இருப்பதாகவோ அன்றேல் சயனமூர்த்தியாகவோ விளங்க ஸ்வதந்திர மூர்த்தி யாயின் பரிவாரங்களுடன் விதியில் கூறப்பட்டவாறு ஸ்தாபிக் கலாம்:......." என விபரிக்கின்றது. பிரதிமாலக்ஷண விதியினூடாக அஜிதாகமமும் விபரிக் கின்றது. ஒரு திருவுருவின் கொள்ளத்தக்க அளவுகளினையும், பெறப்படும் முறைமைகளினையும் விஷ்ணுமூர்த்திக்குரிய தன்மையில் பிரதிமையின் மானம் (அளவு) மந்திரம், பிரதிஷ்டைக்குரிய கிரியைகள் என்பனபற்றி சிறப் பான முறையில் ரௌரவாகமம் கூறுகின்றது.

சிவாகம மரபில் பிரதிஷ்டையில் முக்கியத்துவம் பெறுவது யாகசாலை யும் பதினொருவகையான அக்னிகளின் வடிவில் கரந்துரையும் அங்கவடிவ மான இறைவனுக்குரிய குண்டங்களுமாகும். அந்நிலையில் விஷ்ணுவின் பிரதிஷ்டைக்குரியதாக நவகுண்டங்களுள், நான்கு திக்குகளிலும் சதுர வடிவான குண்டங்களும், விதிக்குகள் நான்கிலும் விருத்த வடிவமான குண்டங்களும், கிழக்கிற்கும் ஈசானத்திற்கும் நடுவில் பிரதான குண்டமாக யோனிவடிவமான குண்டமுமாக ஒன்பது குண்டங்கள் சுட்டப்படுகின்றன. இவற்றிற்கு மேலாக ஹோமத்திற்குரிய சமித்து மந்திரம், திரவியம் என்பன வும் விரிவாகக் கூறப்படுவது மனங்கொள்ளத்தக்கது. இவ்வாறான தன்மை

யில் விளங்கும் விஷ்ணுவின் அஷ்டவித்யோ ஸ்வரர்களாக வாசுதேவன், ஹரி, கிருஷ்ணன், அச்சுதன், அனிருத்தன், பீரத்யும்னன், ஸ்ரீதரன், தரணீபதி ஆகியோர் கிழக்கு முதல் ஈசானம் வரையானவர்களாக சுட்டப்படுகின்றனர். பொதுவாக சிவாகமங்கள் கூறும் மூர்த்தி பஞ்சானங்களுடனும், பஞ்சா வரணங்களிலும் விளங்கும் தன்மைகளையே சிவாகமங்கள் சித்திரிக்கின்றன. அஷ்டவித்யேஸ்வரரை சில மாறுதல்களுடன் சந்தாசம் ஹிதை கூறுகின்றது.

ஸ்வதந்திரமாக விளக்கத்தக்க விஷ்ணுவின் அஷ்ட பரிவாரங்கள் பற்றி ரௌரவம், அபராஜித ப்ருச்சா, காரணம் ஆகியன கூறுகின்றன. ரௌர வாகமம் கூறுகையில் : "த்வாரத்திற்கு வலது இடது பக்கமாக சங்கநிதி, பத்மநிதி ஆகி யோடும், நேரே கூப்பியகரத்துடன் கருடனும் அக்னிக்கு முதல் ஈசானம் வகை யாக விமலன், விதாதா, விக்ரமன், விஜயன், புஷ்டிமூர்த்தி, விருத்தி, த்ரிபதம் ஆகி யோர்விபரக்கின்றனர். இவ்வாறாக ஸ்வதந்திரமாக அமையும் விஷ்ணு மூர்த்திக்கு கருடத்வஜத்துடன் கூடியதாக விதிப்படி மஹோற்சவம் செய்யத் தக்கது". என விபரிக்கின்றது. காரணாகமம் கூறுகையில் நேரே கருடன் விளங்கும் நிலைக்கு மேலாக "கிழக்கு முதலான எட்டுத்திக்குகளிலும் சங்கர்ஷணர் முதலான மூர்த்திகளையே அஷ்ட பரிவாரங்களாகக் கொள்ளத் தக்கது. பரிவாரமில்லாதிருப்பின் வேறு விதிப்படி அமைக்கத்தக்கது. என்னால் சுருக்கமாகக் கூறப்பட்டது. பஞ்ச ராத்திரத்தில் விசேஷமாகக் கூறப்பட்டுள் ளது". என விபரிக்கின்றது.

விஷ்ணுவின் திருக்கோவில் பற்றியும் பிரதிஷ்டை பற்றியும் சிவாக மங்கள் விபரிக்கும் அதேவேளை வைகானசம், பஞ்சராத்திரம் மற்றும் வைஷ்ணவ சம்ஹிதைகள் தமக்கேயுரிய சிறப்புடன் விபரித்துக் கூறுவது மனங்கொள்ளத்தக்கது.

இவ்வாறாக சைவ மரபுசார்ந்த நிலையில் விஷ்ணு விளங்கும்தன்மை யும், சிவாகமங்களின் நெறிப்பட்டன. கிரியைகளின் சிறப்பம்சங்களின் அடிப்படைகளும் நோக்கப்பட்டன. எமது பிரதேசத்தில் விளங்கும் வைஷ்ண வத் திருக்கோவில் சார்ந்த மரபுகள் ஒப்பீட்டளவில் ஆராய்ந்து நோக்குவதற் குரியன என்பதனையும், இவை எமது பிரதேசத்திற்குரிய தனித்துவமான பண்பாட்டம் சமமாக மிளிரும் என்பதனையும் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

10. வடமொழிச் சைவ சித்தாந்த வளத்திற்கு சத்யோஜ்யோதி சிவாச்சாரியாரின் பங்கும் பணியும்

சிவாகமங்கள் சிவனால் அருளிச் செய்யப்பட்ட அருள் நூல்கள் ஆகும். இச் சிவாகமங்கள் நான்கு பாதங்களை உடையன. அப்பாதங்கள் சரியா பாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் அல்லது வித்யாபாதம் என அழைக்கப்படுகின்றன. இந்நான்கு பாதங்களுள் ஞானபாதம் பேசும் விடயமே சைவ சித்தாந்தம் சார்ந்த அம்சங்கள் ஆகும்.

சிவாகமங்கள்

சிவாகமங்கள் காமிகம், யோகஜம், சித்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷமம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிஸ்வாசம், ஸ்வாாயம்புவம், ஆக்னோபம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், துந்லைஞானம், முகபிம்பம், பிரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டு மூலசிவாகமங்களாகும். இம் மூல சிவாகமங்களுக்கு உபாகமங்களும் உள்ளன. அவை இருநூற்று ஏழு ஆகும். இவற்றின் விரிவு முறைமை பற்றி சிவாகமங்களின் தந்திராவதார படலம் விளக்கிக் கூறுகின்றது.

சிவாகமங்களில் திருக்கோவில் அமைவிடம், அமைப்பு பற்றி சரியாபாதமும், திருக்கோவிற் கிரியை பற்றி கர்ஷனம் பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கும் பெரும் பிரிவுகள் பற்றி கிரியாபாதமும், சிவயோகம் பற்றி யோகபாதமும் கூறிநிற்கின்றன. சிவாகமங்களின் ஞானபாதத்தில் பதியாகிய இறைவன் சிவனின் இலக்கணம், பசுவாகிய உயிரின் இலக்கணம், பாசமாகிய ஆணவம், கன்மம், மாயை, சுத்தமாயை, அசுத்தமாயை முதலான விடயங்கள் பற்றியே பேசுகின்றன. சிறப்பான பதியின் மேன்மையும் பசு பாசத்தால் கட்டுண்ட நிலையிலிருந்து விலகி பதியை அடைதற்குரிய சாதனங்கள் பாசத்தால் கட்டுண்ட பசுவின் வகையீடு கள் முதலானவற்றை விளக்கு வதோடு சாதன முறைகளினூடாக பசுவிற்கு ஏற்படும் ஆன்ம விடுதலை முக்தி பற்றியும் கூறுகின்றது. இம் முக்தியை சிவாகமங்களின் ஞானபாதம் சித்தாந்த முக்தி என விளக்கிக் கூறுகின்றது.

சிவாகமங்களும் ஞானபாதமும்

மூலசிவாகமங்கள் முழுமையாகக் கிடைப்பது மிகவும் அரிதாகும். இன்று எமக்குக் கிடக்கப் பெற்ற சிவாகமங்களுள் பெரும்பாலானவை கிரியை பற்றி கூறல் இயல்புடையனவேயாகும். இச் சிவாகமங்களுள் சுப்பிரபேதம், சுவாயம்புவம், ரௌரவம், மகுடம், கிரணம் எனும் ஐந்து மூல சிவாகமங்கள் மட்டுமே ஞானபாதம் எனும் பகுதியைக் கொண்டுள்ளது. ஏனைய மூலசிவாகமங்களுள் ஞானபாதம் பற்றிய விடயங்கள் கூறப்பட்டி ருந்தாலும் சிற்சில பகுதிகள் காணப்படுகின்றன.

உபாகமங்களுள் ஞானபாதத்தைக் சிறப்புடையனவாக பௌஷ்கரம், ம்ருகேந்திரம், மதாங்க பாரமேஸ்வரம், தேவீகாலோத்தரம் ஆகியன விளங்குகின்றன.

சிவாகமங்களினுள்ளும், உபாகமங்களினுள்ளும் அடங்காத சர்வ ஞானோத்ர ஆகமம் சைவசித்தாந்தத்திலும் கூறல் தனிச்சிறப்புடைய நூலாகும்.

சிவாகமங்ளையே "ஞானம்" எனும் பெயரால் சுட்டும் இயல்பினை காராணகமம் (வித்.பாதம் 11.10) வித்பாதம் கூறுகின்றது.

சிவாகமங்களின் உரை

சிவாகமங்கள் குருமரையும் தீக்ஷை மரபையும் மிகவும் வலுவான முறையிற் பாவித்து வந்த தன்மையினால் மூலசிவாகமங்கள் பலவும், உபாகமங்களும் அவற்றின்பின் வழிவந்த நூல்கள் பலவும் அழிந்து போகத்தலையிட்டன. அவற்றுள் சிவாகமங்களில் பலவற்றிக்கு உரைகளும் எழுந்தன. அவ்வகையில் சிவாகம உரையாசிரியர்களாக சத்யோஜோதி சிவாச்சாரியார், பட்ட நாராயண கண்டர், பட்டராம கண்டர், அகோர சிவாச் சாரியார், உமாபதி சிவாச்சாரியார். ஞானப்பிரகாசர், வாது, உரையாசிரியர் ஆகியோராவர். இவர்களின் வழி,

1. ரௌரவாகமம்" சுவிருத்தி/ ஸ்த்திருத்தி எனும் உரை – சத்யோஜ்யோதி சிவாச்சாரியார்.
2. ஸ்வாயம்புவம் – உரை – சத்யோஜ்யோதி சிவாச்சாரியார்

3. ம்ருகேந்திரம் – உரை – பட்டநாராயணகண்டர்.

4. கிராணாகமம் – விருத்தி– பட்டராம கண்டர்.

5. மதங்கபரமேஸ்வரம் – விருத்தி – பட்டராம கண்டர்.

6. கார்த் – விருத்தி – பட்டராம கண்டர்.

7. ரௌரவம்விருத்திடீகை– விருத்தி – பட்டராம கண்டர்.

8. கிராணாகமம் – அகோர சிவாச்சாரியார்

9. சர்வஞானோத்திரம் – விருத்தி – அகோர சிவாச்சாரியார்

10. ம்ருகேந்திரம் – விருத்தி தீசை அகோர சிவாச்சாரியார்

11. பௌஷ்கரம் – விருத்தி ஞானப்பிரகாசர், உமாபதிசிவம்

12. வாதுளம் – வாதூளசுத்தி தாக்யம்

13. மதங்கபரமேஸ்வரம் – பேருரை சத்யோஜ்யோதி சிவாச்சாரியார்.

14. ம்ருகேந்திரம் – உரை

எனும் உரையாசிரியர் மரபுப்படி காணமுடிகின்றன. இவை சம்ஸ் கிருத மொழியால் அமைய காமிகாமம், குமாரதந்திரம் ஆகியனவற்றிற்கு அல்லூர் விஸ்வந்த சிவாச்சாரியார் தமிழில் மொழிபெயர்ப்பு எழுதியுள்ளார். சிவஸ்ரீ P.S சபாரத்தினம் சிவாச்சாரியார் சிவாகமங்கள் பலவற்றிற்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு எழுதியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சத்யோஜ்யோதி சிவாச்சாரியார்

வடமொழிச் சைவசித்தாந்த நூல்களின் வரிசையில் அஷ்டப்பிரகரணங் கள் முதன்மை பெறுவன. அவற்றுள்

1. தத்துவசங்கிரகம்
2. தத்வ த்ரய நிர்ணயம்
3. போக காரிகை
4. மோக்ஷ காரிகை
5. பரமோக்ஷநிராசகாரிகை

எனும் ஐந்து நூல்களின் ஆசிரியரே சத்யோஜோதி சிவாச்சாரியார் ஆவார். இவர் காஷ்மீரதேசத்து சைவ அறிஞராகக் கருதப்படுகின்றார். இவரது காலம் கி.பி. 8ம் நூற்றாண்டு எனக் கருதப்படுகின்றது.

சத்யோஜோதி சிவாச்சாரியார் பற்றிய செய்யுள் நேரடியாக அவற்றை காணப்படாமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் சித்தாந்த சைவமரபைச் சார்ந்தவர். இவரது குருவாக உக்கிரஜோதி சித்தாந்த சிவாச்சாரியார் ஆவார் இவரது பாரம்பரியத்தில் கேடகபாலர், கேடகநந்தனர் எனும் சிறந்த குரு எனச் சொல்வதிலிருந்து இவர் கேடகர் என்பவரது மகனாகக் கருதப்படு கின்றார். மாதங்க பரமேஸ்வர ஆகமத்தின் ராமகண்டரது உரையால் இவர் கேடக பாலன் எனச் சுட்டப்படுகின்றார். இவரே சித்தாந்த சைவமரபின் முதலாவது உரையாசிரியராகவும் பத்ததி ஆசிரியராகவும் மதிக்கப்படு கின்றார். கி.பி. 9ம் நூற்றாண்டைச் சார்ந்த சோமாநந்தரின் எனும் நூலில் இவர் பற்றிய குறிப்பு இடம் பெறுகின்றது.

சத்யோஜ்யோதி சிவராச்சாரியாரின் நூல்களுக்கான உரையாசிரியர் களின் குறிப்பு

தத்துவத்ரய நிர்ணயத்தில் 2வது பாடலில் கூறியபதத்திற்கு ஏற்ப அகோரசிவாச்சாரியரின் உரையால் :

"இவ்விடயத்தில் ரௌரவத்தினால் கிடைத்த பொருளினுண்மையைச் சங்கிரகம் எனும் பிரகரணத்திற் சுருக்கமாகக் கூறிச்சுயம்புவாகமத்தாற் கிடைக்கும் பொருளை இந்த தத்வைத்ரய நிர்ணயம் எனும் பிரகரண ஆசிரியர் விளக்குகிறார் என்க. ஆதலினாற்றான், தத்துவத் சங்கிரகம் எனும் பிரகரணத்து இறுதியில் "சுவ்ருத்தி எனும் பிரசித்தி பெற்ற ரௌரவ விருத்தியைச் செய்த சத்யோஜ்யோதி சிவாச்சாரியார் இவ்வாறு தந்திரியங் களைக் கூறினார்" என்று சொல்லப்பட்டி ருக்கின்றது.

இந்தப் பிரகரணத்து இறுதியிலும் "உயிர்களுக்கு அன்றியேயுள்ள அறியாமையை நீக்குவதற்கு சுவாயம் புவாகம சம்பந்தமாக, விருந்தினரால் இந்த தத்துவத்ரய நிர்ணயம் சொல்லப்பட்டது" என்று சொல்லுகின்றன. என விளக்குகின்றார்.

சத்யோஜ்யோதி சிவாச்சாரியரின் ஆக்கங்கள்

சத்யோஜ்யோதி சிவாச்சாரியார் சைவசித்தாந்த வடமொழி மூல நூல்களான அஷ்டப்பிரகணத்தால் ஐந்து நூல்களை ஆக்கியுள்ளமையை

ஏலவே கண்டோம். மேலும், நரேஸ்வர பரீக்ஷை, மந்திர வாத்திகம் எனும் இரு நூல்கள் எழுதியுள்ளமை.

சத்யோஜ்யோதி சிவாச்சாரியாரின் உரை நூல்கள்

இவர் மூலசிவாகமங்களுக்கு உரை வகுத்தவர்களுள் முதன்மை பெற்றவராக விளங்குவது குறிப்பிடத்தக்கது. இவர் ரௌவாகமத்திற்கு சுவ் விருத்தி அல்லது சத்வ்ருத்தி எனும் உரை மிகவும் பிரசித்தி பெற்ற நூலாகும். இந்நூலின் வழியாகவே தத்வசங்கிரகம் படைத்துள்ளனர்.

ஸ்வயம்புவ ஆகமத்திற்கு உரையெழுதியுள்ளார். இதன் விளைவாகவே தத்துவத்திரய நிர்ணயத்தைப் படைத்துள்ளார். இவற்றைவிட மதாங்க பரமேஸ்வர ஆகமத்திற்கும், உரை யெழுதியுள்ளார்.

முடிவுரை

சைவசித்தாந்த தத்துவ மூலகங்களை சிவாகமங்களுக்கு உரை யெழுதியும் அஷ்டப் பிரகரணங்கள் எனும் எட்டு, ஐந்து நூல்களில் ஆச்சாரி யராகவும் விளங்கி முழுமையாகவே வட மொழிச் சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிற்கு ஆற்றிய பணி சிவாகமங்களின் வழி வடமொழிச் சித்தாந்த மரபை முதன் முதலில் தோற்றுவித்த பெருமையால் உயர்ந்த மதிப்பைப் பெறுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை நூல்கள்

1. அஷ்டப்பிரகரணம் மூலம் வரையும்/(1988), பண்டிதர் ஸ்ரீ வ்ரவல் ஜலிலப (சம்ஸ்கிருதம்) தவிவேதி (பதி) யோகதந்திர கிரகந்தமாலா (தொகுதி 12) – வாரணாகி.

2. மதாங்க பாரமேஸ்வரம் (1977), பிரெஞ்சு (வித்யாபாதம்), இந்தி யாவில் நிறுவனம், பாண்டிச்சேரி.

3. அஷ்டப்பிரகரணம் (1927) (தத்துவப்பிரகாசம்) (தத்துவ சங்கிரகம்) தமிழ் மொழிபெயர்ப்பு. (தத்துவத்ரய நிர்ணயம்) சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை

4. அஷ்டப் பிரகரணம் (1927) இரத்தினதிரயம்
போககாரிகை
நாதகாரிகை
மோக்ஷகாரிகை
பரமோக்ஷகிரச காரிகை

மூலமும் விரிவுரையும் (தமிழ் மொழி பெயர்ப்பு) சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை.

5. சபாரத்தினம், எஸ். பி, (2004) சைவ ஆகமங்கள் – ஓர் அறிமுகம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை.

11. திருக்கோவிற் கிரியை மரபில் மஹோற்சவம்
(பிராயச்சித்த விதியூடான பார்வை)

சிவப்பரம்பொருள் எங்கும் பரந்திருக்கும் இயல்புடையது. எங்கும் பரந்த இறைவன் ஆன்மாக்களுக்கு அருளும் நோக்குடன் உறையும் நிலை யங்களே கோயில்கள். சிறப்பாக சிவன் கோயில்களே கோயில்கள் எனவும் சிறப்பாக திருக்கோயில்கள் என அழைக்கும் மரபுடையதாகவும் காணப்படுகின்றன.

திருக்கோயிலின் அமைப்பு, மற்றும் கிரியை மரபுகள் யாவும் சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டன. திருக்கோயில்கள் பொது வாக கிழக்கு நோக்கியதாகவும், ஒரே வீதியையுடையதாகவும் பரிவாரக் கோயில்களையுடையதாகவுமே காணப்படுகின்றமை மனம் கொள்ளத் தக்கது.

சிவாகமங்கள்

சிறப்பாக சிவாகமங்கள் இருபத்தெட்டாகும் அவையாவன காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்மம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிஷ்வாசம், ஸ்வாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என்பன ஆகும். இவை மூலசிவாகமங்களாகும். இவற்றிற்கு உபாகமங்களும் உண்டு. அவை இருநூற்றேழு ஆகும். அவற்றுள் குமாரதந்திரம் குறிப்பிடத் தக்கது.

கிரியை மரபுகளில் பத்ததிகள்

இம்மூலசிவாகமங்கள் விதிகூறும் நூல்கள் ஆகும். இவை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு அம்சங்கள் ஆகும். இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங் களையுடையதாக விளங்குகின்றன. இம் மூலசிவாகமங்கள் விதிகளை

கூறும் சிறப்புடையன. இம்மூலசிவாகமங்களின் விதிகளை அனுசரித்து கிரியை மரபுகளை பத்ததிகள் கூறுகின்றன.

சிவாகம மரபுகளை அனுசரித்து கிரியைமரபுகளை கூறும் பத்ததிகள் பதினெட்டு ஆகும். இப்பத்ததிகளின் ஆசிரியர்களின் பெயர் களைக் கொண்டே அழைக்கும் மரபு காணப்படுகின்றது. அதன்படி உக்ர ஜோதி, சத்யஜோதி, ராமகண்டர், வித்யாகண்டர், நாராணகண்டர், விபூதி கண்டர், ஶ்ரீகண்டர், நீலகண்டர், சோமசம்பு, ஈசானசம்பு, ஹ்ருதயசிவன், பிரம்மசம்பு, வைராக்கியசிவன், ஞானசம்பு, திரிலோசன சிவன், வருண சிவன், ஈசுவர சிவன், அகோரசிவன் ஆகியோர் இயற்றிய பத்ததிகள் அவரவர் பெயர்கொண்டு அழைக்கப்படும். இதில் அகோரசிவனின் பத்ததி அகோர சிவாச்சாரியார் பத்ததி என பெரும் சிறப்புடன் சிவாச்சார்யார் மரபிலும், கிரியை மரபிலும் பின்பற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிரியைமரபில் மஹோற்சவம்

திருக்கோவில்களில் நிகழும் கிரியைகள் நித்தியம், நைமித்தியம், காமிகம் என மூன்றுவகைப்படும். நித்தியம் நடைபெறும் கிரியை நித்தியக் கிரியை என்றும், காரணம் எனப்படும் நிமித்தம் கொண்டு நிகழ்த்தப்படும் கிரியை நைமித்தியக்கிரியை என்றும். காம்யம் எனப்படும் பெறு பேற்றினை அவாவி நிகழ்த்தப்படும் கிரியை காம்யக்கிரியை எனப்படும். இக்கிரியை மரபு மூன்றினுள் நைமித்தியக் கிரியை மரபில் இடம்பெறுவதே மஹோற் சவம் ஆகும்.

மஹோற்சவ விதிகள்

மூல சிவாகமங்கள் மஹோற்சவம் பற்றிய விதி முறைகளை விளக்கி நிற்கின்றன. அதன்படி காமிகாகமம் (II. 6), காரணாகமம் (I, 141), (II. 24), சந்திரஞானம் (24), தீப்தம் (83), (97), மகுடம் (5), யோகஜம் (பத் 171–243) ரௌரவம் (Vol. II. 18) வீரம் (51), சஹஸ்ரம் (6), சுப்ரபேதம்) (II. 14), சூக்ஷ்மம் (13), ஸ்வாயம்புவம் (37), அஜிதம் (Vol.I.27) ஆகியவற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. குமாரதந்திரம் (13) ஸ்கந்தோற்சவவிதி பற்றிக் கூறுகின்றது.

பொதுவாக மஹோற்சவ மரபுகளில் எத்தகைய சிறப்புக்கள் காலம் காலமாக பின்பற்றப்படுகின்றவோ அம்மரபுகள் தொடர்ச்சியாக பின்பற்றப் பட்டு வருகின்றமை மனம் கொள்ளத்தக்கது. எனினும் மஹோற்சவ கால நிர்ணயம் மற்றும் மஹோற்சவ காலங்களில் ஏற்படத்தக்க சம்பவங்களுக்கு எத்தகைய கிரியை மரபுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதும் இம்மரபுகள் சிவாகமங்கள் கூறும் கிரியைமரபை விதிபூர்வமாக பிரதிபலிக்கும் தன்மை யுடையதாகவும் நாம் நோக்குதல் பயனுடையதாக அமையும்.

மஹோற்சவம்

திருக்கோவிற்கிரியை மரபில் மஹோற்சவம் பற்றிய விளக்கத் தினை (1958) அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள் மஹோற்சவ விளக்கம் (1958) எனும் நூல் ஊடாகவும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிவ க்ஷேத்திராலய மஹோற்சவ உண்மை விளக்கம் (1957) எனும் நூல் ஊடாக வும் நா.கதிரவேற்பிள்ளை சிவக்ஷேத்திராலய மஹோற்சவ உண்மை விளக் கம் எனும் நூல் ஊடாகவும் விளக்கியுள்ளனர். இவற்றைவிட கிரியைகள் பற்றி மஹோற்சவபத்ததிகள் கூறுகின்றன. இவற்றுள் அகோர சிவாச்சாரி யாரின் க்ரியாக்ரம ஜ்யோதி தொடரின் ஆறாம் பாகமான "மஹோற்சவவிதி" எனும் நூல் முக்கியத்துவமுடையதாகும்.

உற்சவமாசம்

உற்சவ மாசம் பற்றி மஹோற்சவ விளக்கம் என்னும் நூலில் அச்சுவேலி சிவஸ்ரீ.ச.குமாரசுவாமிக்குருக்கள் கூறுகையில்,

"உற்சவமாசங்கள் சாவனமாசம், சாந்திரமாசம், நக்ஷத்திரமாசம், சௌரமாசம் என நான்கு வகைப்படும். இந்த நாலும் மாசத்திலும் உற்சவத் தைச் செய்யலாம். சௌர மாதத்தில் சாகல்யம் பாவனம் என்னும் உற்சவங் கள் செய்யத்தக்கன. சாவனம், சாந்திரம், நக்ஷத்திரம் எனும் மாதங்களில் சாந்தி மங்களம் என்னும் உற்சவங்கள் செய்யத்தக்கன. எல்லா உற்சவங் களும் சௌரமாசத்திற் செய்யத்தக்கன. சாவனமாச உற்சவம், சாந்தியையும், சாந்திரமாச உற்சவம் முத்தியையும், நக்ஷத்திர மாச உற்சவம் பாபநாசத்தை யும், சௌரமாச உற்சவம் பிரஜா விருத்தியையும் கொடுக்கும்.

சாவனோற்சவம்

அரசனுடைய ஜன்ம நக்ஷத்திரம், பட்டாபிஷேகதினம், யுத்தாரம்பதினம், லயதினம், எசமானுடைய நக்ஷத்திரம், கிராம நக்ஷத்திரம் முதலியவற்றை தீர்த்தாந்தமாக நிச்சயிப்பது சாவனோற்சவமாம். பிரதிஷ்டா நக்ஷத்திரத்தை அந்த மாகக் கொள்வது பிரதிஷ்டோற்சவமாம். இது புத்தி முத்திகளைக் கொடுக்கும்.

சௌரோற்சவம்

சூரியன் ஒவ்வொரு ராசிகளிலும் செல்லுங்காலம் சங்கிராந்தி எனப்படும் பிராதக்காலத்திலாவது சங்கல காலத்திலாவது மத்தியான்னத்திலாவது அபரான்னத்திலாவது பிரதோஷகாலத்திலாவது அர்த்தராத்திரியிலாவது இரத்திரியின் இறுதியிலாவது சங்கிராந்தி சம்பவிக்கின்றதோ, அக்காலத்தில் தீர்த்தத்தை ஆரம்பிக்க அத்தீர்த்தம் எல்லாப்பலனையும் கொடுக்கும் சௌரமாச உற்சவம் சர்வாரிட்டங்களையும் நீக்கும்.

சாந்திரமாச உற்சவம்

எல்லா மாசங்களிலும் பூரணையையும், அமாவாசையையும் வைகாசியில் கிருஷ்ண சதுர்த்தசியையும். மாசியில் சஷ்டியையும், ஆனியில் அட்டமியையும் அந்தமாகக் கொண்டு தீர்த்தோற்சவத்தைச் செய்வது சாந்திரமாச உற்சவமெனப்படும். அது உத்தமோத்தமமாம்.

நக்ஷத்திரமாச உற்சவம்

தை மாசத்தில் பூசத்தையும், மாசியில் மகத்தையும், பங்குனியில் உத்தரத்தையும், சித்திரையில் சித்திரையையும், வைகாசியில் விசாகத்தையும், ஆனியில் மூலத்தையும், ஆடியில் உத்தராடத்தையும், ஆவணியில் திருவோணத்தையும், புரட்டாதியில் பூரட்டாதியையும், ஐப்பசியில் அச்சுவினியையும், கார்த்திகையில் கார்த்திகையையும், மார்கழியில் திருவாதிரையையும் எல்லா மாசங்களிலும் திருவாதிரையையும் திருவோணத்தையும் ரோகிணியையும் அந்தமாகக் கொள்வது நக்ஷத்திரமாச உற்சவமாம் தானம், ஆலயசேவை, ஓமம், தீர்த்தம், வேதாந்தியயனம், தமிழ் வேதபாராயணம் முதலியவைகளை எல்லாச் சம்பத்தையும் அடைதல் காரணமாக அக்காலத்திலே விசேஷமாகச் செய்க.

ஒருமாதத்தில் இருமுறை திதியாவது நக்ஷத்திரமாவதுவரின் முந்தியதைவிட்டுப் பிந்தியதில் தீர்த்தோற்சவத்தைச் செய்க. பிந்தியதிற் சங்கிராந்தியானால் முந்தியதிற் செய்க. முந்திய நக்ஷத்திரம் பூரணயோடு கூடிவரின் பிந்தியதைவிட்டு முந்தியதிற் செய்க.

ஒவ்வொரு வருஷத்திலும் எந்த மாசத்தில் எந்தத் திதியிலாவது நக்ஷத்திரத்திலாவது உற்சவம் செய்யப்பட்டு வந்ததோ அந்தத் திதி நக்ஷத் திரத்திலேயே உற்சவத்தைச் செய்தல் வேண்டும். செய்யாவிடின் கோயில் அதிகாரிகளுக்கும் கிராமச்சனங்களுக்கும் க்ஷேமமுண்டாகாது. சிகரத் தாபனம் இல்லாத ஆலயங்களில் உற்சவம் செய்தல் ஆகமச்சம்மதம் அன்று உற்சவங்கள் மூன்று நாள், ஐந்துநாள், ஏழுநாள், ஒன்பதுநாள், பதின்மூன்று நாள், பதினைந்துநாள் பதினேழு நாள் ஆகிய பிரிவுகளை உடையன. ஏழுநாள் முதலாகிய விழாக்களுக்கே துவஜாரோகணஞ் செய்யத்தக்கது.

மகோற்சவத்தின் மத்தியில் வேறு உற்சவம் வந்தால் இரட்சாபந் தனம் யாகம், தீர்த்தம் என்பவைகளை விடுத்து உற்சவத்தை மாத்திரம் செய்க. இதற்குப் பிரமாணம் காமிகத்தும் பீமசங்கிதையிலும் காண்க.

ஆசாரியரும், கோயில் அதிகாரியும், ஊரவர்களும் உற்சவ புண்ணிய காலங்களிலே ஒருகாலப் போசனஞ்செய்து விதிப்படி விரதம நுட்டித்தல் கடனாகும். தருப்பைப்பாயில் முதலியவற்றில் சயனித்தலும் தைலாப்பியங்கம் ஸ்திரீ சம்போகம் முதலியவற்றை விடுதலும் முறை யாகும் அக்கிராம வாசிகள் அவரோகணம் வரை விவாகம் முதலிய சுபகிரியைகளும் பிரயாணமுஞ் செய்தல் ஆகாது.

ஒவ்வொரு தினங்களிலும் காலசந்தி உற்சவத்திற் செய்யும் ஓமம், பலி முதலியவைகளைப் பத்து நாழிகைக்கு உள்ளாகவும், சாயங்கால ஓமம் பலி முதலியவைகளை இரவு பத்து நாழிகைக்குள் ளாகவும் செய்தல் உத்தமம். காலாதீதத்திற் செய்யும் கிரியைகள் பயன்படா வாகையாற் காலந் தவறாது சிரத்தையோடு கிரியைகளைச் செய்தல் வேண்டும்.

உற்சவபேதம்

உற்சவம் சாகல்யம், பாவனம், சாந்தி, மாங்கல்யம் என நான்கு வகைப்படும். துவஜாரோகணாதி தீர்த்தாந்தமான உற்சவம் சாகல்யம்

எனப்படும். துவஜாரோகணம் மாத்திரமின்றி மற்றெல்லாக் கிரியைகளையும் சாகல்யத்துக்குக் கூறியவாறு செய்வது பாவனம் எனப்படும். பிராதக் காலத்தில் ஓமமும் பலியும்

"பிராயச்சித்தம் என்பது கெடுதியடைந்ததை நிவர்த்தி செய்து மீண்டும் தெய்வீகமுண்டாக்கச் செய்தல்" என்பது பொருளாகும். சிவாகம விதிமுறைப்படி ஏற்பட்ட கெடுதியை நிவர்த்தி செய்து மீண்டும் தெய்வீக முண்டாக்கச் செய்வது என்பது சிவாகமம் சார்ந்த பிராயச்சித்த விதி முக்கியத்துவம் பெறுகின்றது.

அகோர சிவாச்சார்யார் பத்ததியில் பிராயச்சித்த விதியில் நித்திய பூஜையின் அம்சங்களின் குறைகளுக்குரிய பிராயச்சித்தமுறைகள் விதி யாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வம்சத்தின் பொது விடயமாக உற்சவகால ஹீனம் முதல் ஒரே சிவாச்சாரியாரால் செய்யத்தக்கது வரையாக இருபத் தாறு (26) விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மஹோற்சவ பிராயச்சித்தம்

மஹோற்சவ காலங்களில் ஏற்படத்தக்க குறைகளை நீக்கும் பிராயச் சித்த விதியினை காரணாகமம், குமாரதந்திரம் ஆகியன கூறுகின்றன. இதன்படி காரணாகமத்தின் பூர்வபாகம் 144வது விதிபடலமான உற்சவ பிராயச்சித்த விதிபடலம் என 114 சுலோகங்களிலும், குமாரதந்திரம் 14வது படலமான உற்சவ பிராயச்சித்த படலம் என 193 சுலோகங்களிலும் கூறப் பட்டுள்ளன. இவற்றின் விடய விபரங்களை நோக்குவோம்.

மஹோற்சவ பிராயச்சித்த விதியின் தேவை

திருக்கோயில்களில் நடைபெறும் நித்யபூஜைகள் முதலிய அனைத்து விடயங்களும் பரார்த்தமான கிரியை மரபுகள் ஆகும். இக்கிரியை மரபுகளுக்கு பல்வேறு தரப்பினர்களதும் ஒன்றிணைந்த பக்தியோடு கூடியதும் சிரத்தைமிக்கதுமான பங்களிப்பு மிக அவசியமாகின்றது. ஒவ் வோர் அம்சத்திலும் ஏற்படத்தக்க தூய்மையான செயற்பாடுகள் தெய்வீக சான்னித்தியத்தை மேன்மையடையச் செய்கின்றன. அதேபோல் ஒன் றிணைந்த செயற்பாட்டினால் ஏற்படத்தக்க தவறுகள் சிறப்பாக மஹோற்சவ

காலங்களில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் சிவாகம விதிமுறைப்படி எத்தகைய தவறுகள் ஏற்படத்தக் கன என்றும் அவற்றுள் முக்கியமான விடயங்களுக்கு தெய்வசாபம் ஏற்படாத வண்ணம் எவ்வாறு பிராயச்சித்தம் மேற்கொள்ள வேண்டும் என்பதனை விதிப் படி பின்பற்றுவதற்கு ஏற்ற தேவையே மஹோற்சவ பிராயச்சித்தம் எனும் விதிமுறையை விரிவாக நோக்குவது தேவையும் அவசியமும் ஆகின்றது.

பூர்வகாரணாகமம் - 144 விதிபடலம் உற்சவ பிராயச்சித்த விதிபடலம்

01. விசேஷமாக உற்சவத்தின் பிராயச்சித்த விதியைக் கூறுகின்றேன். விருஷயாகம் இன்மை குறைவு, த்வஜாரோகணமின்மை.
02. த்வஜலக்ஷணமின்மை, த்வஜதண்டத்தின் அளவின் குறைவு தண்ட அளவின் குறைவு, த்வஜவேதி யின் குறைவு.
03. த்வஜதண்டம் முறிதல், தேர்உடைதல், கொடிக்கயிறு அறுதல், கொடிப்படம், விழுதல், த்வஜ படத்தில் மணியின்மை அல்லது த்வஜபடத்திலிருந்து மணி அறுந்துவிழுதல்.
04. பேரீதாடனமின்மை, உரியகாலத்தில் உரியவாத்தியம் இசைக்காமை, வாத்தியத்தின் சப்தம் குறைதல், வாத்தியங்கள் உடைதல்...
05. யாகசாலையின்மை குண்டம், வேதீ என்பன இன்மை, வேதிகையில் ஸ்தண்டிலம் இன்மை, யாக சாலை நெருப்பினால் எரிதல்...
06. விதானம், கொடி என்பன இன்மை, தோரணம் இன்மை, ஸ்ருக் சுருவமின்மை, தர்பைமாலை இன்மை, ஹோமத்திற்கு உகந்த திரவிய மின்மை...
07. தசாயுதங்கள் இன்மை, அஷ்டமங்களப்பொருட்கள் இன்மை, அங்குரார்ப்பணமின்மை, அஸ்திர யாகமின்மை...
08. கலசஸ்தாபனமின்மை, கும்பத்தில் நீர் இன்மை, கும்பத்தில் ரத்தினம், பொன், சூத்தரவேஷ்டனம் இன்மை...
09. கூர்ச்சத்தினால் மூடப்படாமை, கும்பத்தில் வஸ்திரமின்மை, நைவேத்ய மின்மை, யாகத்தில் தீபமின்மை...
10. குண்டத்தில் அக்னி இன்மை, பிரணீத பத்ரம் இன்மை, மந்திர மின்மை, கிரியை இன்மை, தர்பை, பரிதியின்மை
11. பலிக்குரிய திரவியமின்மை, பலிதானமின்மை, சுற்றுப்பலி இடும் காலங்களில் பலிபீடம் இன்மை...

12. பலிபீடம் விழுதல், உடைதல் எனும் சம்பவங்கள் ஏற்படல் அதேபோல் அஸ்திரதேவர் விழுதல், உடைதல், பலிபாத்திரம் இல்லாது போதல், பலிக்குரிய தானமில்லை...
13. பலிக்கு தீபமின்மை, காலங்கடந்து பலியிடுதல், உற்சவத்தில் யாகம் இன்மை, உற்சவகாலத்தில் கலகம் ஏற்படல்.
14. பூஜைக்குரிய திரவியங்கள் மூலலிங்கத்திற்கும், உற்சவமூர்த்திக்கும் சமர்ப்பிக்காது விடுதல், உற்சவமூர்த்தி சுற்றிவருகையில் கீழே விழுதல், பிம்பத்திற்கு அங்கக்குறைவு ஏற்படுதல்.
15. சிவதீக்ஷை பெறாதவர்கள் மற்றும் சாதாரண அடியவர்கள் தெய்வத் திருவுருவங்களைத் தொடுதல், அவ்வாறே யாகசாலையிலுள் நுழைதல் அவ்வாறே...
16. உற்சவ காலத்தில் அக்கிராமத்தில் மனிதர்கள் இறத்தல் பரிவேஷ்டனம் இன்மை, நீராஞ்ஜனமின்மை...
17. பெருங்காற்றினால் தீப்பிடித்தல், யுத்தத்தின் ஆரம்பமின்மை ரக்ஷா சூத்திரமின்மை, கௌதுக ஸ்நானமின்மை...
18. சூர்ணோத்சவமின்மை தீர்த்தக்கிரியையின்மை, வேதியில் வைத்த கும்பத்தை அபிஷேகம் செய்யாதிருத்தல்.
19. கொடியேற்றப்படாமை சுத்த ஸ்நானமின்மை, தினமும் நடைபெறும் பூஜைகளில் குறைபாடோ அன்றி உற்சவத்திலோ வேறு காலங்களிலோ ஏற்படல்.
20. பலிபீடத்தை உத்வாசனம் செய்யாமை சண்டேஸ்வர யாகமின்மை, ஆரம்பத்திலிருந்து சிவாகம முறைக்கு மாறாக வேறு சாஸ்திர முறைப் படி சிவயாக பூஜையை செய்தாலே.
21. மந்திரங்களை கலந்து (பிரயோகம் செய்தாலோ) ஆச்சார்யரின் தக்ஷிணை இல்லாமலோ, கிராமத்தலைவரும் அரசனும் பெற்றுக் கொண்ட நக்ஷத்திர நாளில் விரதம் அனுஷ்டிக்காமலிருந் தாலோ... இவ்வாறாக ஏற்பட்டால் தெய்வக்குற்றம் என விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக இங்கு கூறப்பட்ட குற்றங்களுக்கு ஏற்ப கிரமமாக பிராயச்சித்த முறைமைகள் கூறப்படுகின்றன. அவற்றினை முறையாக நோக்குவோம்.

விருஷய யாகமின்மை

22. விருஷப யாகமில்லாது விட்டால் பசுக்கள் அழிந்துவிடும் இதில் சந்தேகமே இல்லை.
23. இதற்கு பிராயச்சித்தமாக விருஷபத்திற்கு ஸ்நபனகும்பம் வைத்து சந்தனம், பூ முதலியவற்றால் வழிபடல் வேண்டும். பயற்றம் சாதம் (முத்தன்மை) நிவேதனம் செய்து சாந்திஹோமமும் செய்தல் வேண்டும்.
24. அதன்பின் விருஷயாகம் முன்பு (மஹோற்சவ விதியில்) கூறப்பட்ட படியாக செய்தல் வேண்டும்.

த்வஜாரோஹணமின்மையும், த்வஜலக்ஷணமின்மையும்

25. த்வஜாரோஹணமின்மையும் த்வஜலக்ஷணமின்மையும் ஏற்பட்டால் அரசனுக்கு தோல்வி நேரிடும் ராஜ்யத்தை இழப்பான் இத்தோஷத்தை நீக்கும் பொருட்டு சாந்திஹோமம் செய்ய வேண்டும்.
26. இதற்கு உரிய லக்ஷணத்தோடு கொடியைச் செய்து விதிமுறைப்படி கொடியேற்ற வேண்டும் த்வஜதண்ட மின்மையும், த்வஜவேதியின்மை யும், த்வஜதண்டம் முதலானவைகளில் குறைவு ஏற்பட்டாலோ த்வஜவேதி இல்லாது போனாலோ...
27. அந்த பூமியில் (பிரதேசத்தில்) எதிரிகளால் பயமேற்படும் சிற்பியையும், ஆசாரியரையும் கொன்றுவிடும். மீண்டும் உரிய முறைப்படி கொடி மரத்தை ஸ்தாபனம் செய்து சாந்தி இரண்டையும் (சாந்திஹோமம், மூர்த்தி ஹோமம்) செய்து அஸ்திர மந்திர ஜபமும் செய்யவேண்டும். எல்லா லக்ஷணங்களுடன் கூட வேதிகையையும் செய்து சங்கல்ப பூர்வமாக பூஜிக்க வேண்டும்.
28. த்வஜதண்டம் முறிந்தோ அல்லது உடைந்தோ போனால் பிற அரசனால் பயமேற்படும்.

    சாந்திஹோமம் செய்து பின்னர் அதனைத் திருத்தம்/புதிதாகச் செய்து மீண்டும் அதனை தொடர்புபடுத்திவிட வேண்டும்.

கொடிக்கயிற்று/கொடிப்படம் விழுதல் முதலானவை...

29. கொடிக்கயிறு அறுந்தாலோ கொடிப்படம் கிழிந்தாலோ அல்லது இல்லாது போனாலோ அல்லது விழுந்தாலோ அவ்விதமே

30. கொடிமரத்தில் மேற்பலகைகளோ அன்றில் தடிகளோ இல்லாது போனாலோ பெரும் பஞ்சம் ஏற்படும் அதற்கு புண்யாஹவாசனம் செய்து பின்னர்...
சாந்திஹோமம் செய்து பின்னர் அவற்றினை உரிய முறைப்படி பொருத்திவிட வேண்டும்.

கொடிப்படத்தில் மணி இல்லாது போதல்

31. கொடிப்படத்தில் மணி இல்லாது போனாலோ அல்லது விழுந்தாலோ சிறுவர்கள் அழிந்து போவார்கள்.

32. புண்யாஹவாசனம் செய்து மூலமந்திரத்தினால் நூறு தடவை ஜபம் செய்ய வேண்டும். பின்னர் (புண்யாஹஜலத்தால்) மணியைப் ப்ரோக்ஷணம் செய்து பின்னர் பொருத்திவிட வேண்டும்.

பேரீதாடனம் இன்மை

33. பேரீதாடனமில்லாவிட்டால் (கிராமத்தவர்களுக்கு) செவிட்டுத்தன்மை ஏற்படும். சிவனுக்கு ஸ்நபன அபிஷேகம் செய்து பின்னர் பேரீதாடனத் தைச் செய்தல் வேண்டும்.

34. பேரீ வாசித்துக் கொண்டிருக்கும் போது அவ்வாறே வாசித்துக்கொண் டிருக்கையில் கிழிந்தோ அல்லது விழுந்தோ விட்டால் தோல் கிழிந்தால் விசேடமாக நெற்பயிர் அழிவினை ஏற்படுத்தும்.

35. யுக்தியையும் மந்திரத்தையும் பின்பற்றி நூறு தடவைகள் ஜபமும் நூறுமுறை ஹோமமும் செய்ய வேண்டும் பின்னர் புதிய ஒருபேரியை எடுத்து விதிப்படி அறிவாளியானவர் (வாசிக்கச்) முளங்கச் செய்ய வேண்டும்.

யாகசாலை இன்மையும், குண்டம் வேதீ இன்மையும்

36. யாகசாலை இல்லாமலோ குண்டம் வேதீ என்பன இல்லாமலோ உரிய லக்ஷ்ணப்படி அவை இல்லாது விட்டால் அக்கிராமத்தில் அழிவு இருக்கும்.

37. பிரமாணத்திற்குரியதாக பின்னர் செய்து புண்யாகம் சொல்ல வேண் டும். பின்னர் சாந்திஹோமத்தைச் செய்து பின்னர் அந்தக் கர்மாவை முடிக்க வேண்டும்.

வேதீ, ஸ்தண்டிலம் இன்மை

38. வேதீ, ஸ்தண்டிலம் என்பன இல்லாதுவிடின் நெற்பயிர் அழிவு ஏற்படும் என்பதில் சந்தேகமே இல்லை. பஞ்சகவ்யத்தினால் நன்கு புரோக்ஷணம் செய்து மூலமந்திரத்தை நூறு முறை ஜபம் செய்யவேண்டும்.
39. விதிப்படி ஸ்தண்டிலம் அமைத்து அதிலேயே கும்பங்களை ஸ்தாபிக்க வேண்டும். யாகசாலை நெருப்பினால் எரிந்து ஸ்தாபித்த கும்பங்கள் அவ்விதமே எரிந்து போனால்.
40. பிறரால் பயமும் பூமியின் அரசன் இறப்பெய்துவான் (எரிந்த) அந்தப் பொருட்களை முழுமையாக நீக்கி அவையனைத்தையும் மீண்டும் புதிதாக வைக்க வேண்டும்.
42. மீண்டும் உற்சவத்தை ஆரம்பித்து அத்தினத்திலிருந்து விசேஷமாகச் செய்ய வேண்டும். தனியாக யாகசாலை அக்னியினால் எரிந்தாலும் முன்பு குறிப்பிட்டது போல் செய்ய வேண்டும்.
43. புண்யாக வாசனம் செய்து பின்னர் சாந்திஹோமம் செய்ய வேண்டும். விசேஷமாக சிவனுக்கு ஸ்நபனம் செய்து பூஜிக்க வேண்ணடும்.

விதானம், கொடி, தோரணமின்மை

43. விதானம், கொடி (பதாகை) தோரணம் என்பன இல்லாது போனால் அரசாட்சி அழியும் பசுக்கள் அழியும் பஞ்சம் ஏற்படும்.
44. முன்பு கூறப்பட்ட விதிப்படி சாந்திஹோமம் செய்ய வேண்டும். சுருக்கு சிருவம் ஆகிய இரண்டும் இல்லாது போனாலும் அதற்குரிய லக்ஷணங் களுடன் கூடியதாக செய்ய வேண்டும்.
45. காய்ச்சல், வெப்புநோய் என்பன ஏற்படும். தினமும் கிராமம் நாசமடை யும். இதற்கு பிராயச்சித்தமாக சாந்திஹோமம் செய்து பின்னர் உரிய லக்ஷணத்துடன் கூடியதாகச் செய்ய வேண்டும்.

தர்பமாலை இன்மை

46. யாகசாலையில் தர்பமாலை இல்லாவிட்டால் மக்களுக்கு ஆயுதத்தால் கெடுதல் ஏற்படும். இதற்கு பிராயச்சித்தமாக மூலமந்திரத்தினை நூறு தடவைகள் ஜெபம் செய்து சமர்ப்பிப்பதோடு தர்பமாலையும் இணைத்து விட வேண்டும்.

ஹோமத்திரவியமின்மை

47. ஹோமத்திற்குரிய திரவியமில்லாது விட்டால் மழையின்மை ஏற்படும். இதில் சந்தேகமே இல்லை. அஸ்திரமந்திரத்தால் நூறுதடவை ஹோமம் செய்து மஹாவ்யாஹ்ருதி மந்திரத்தாலும் ஹோமம் செய்ய வேண்டும்.
48. அந்த ஹோமத்திரவியத்தால் அறிவாளியானவன் முன்பு கூறப்பட்ட விதிப்படி ஹோமம் செய்ய வேண்டும்.

தசாயுதங்களின்மை

49. தசாயுதங்களின்மையால் திருடர்களால் பயமேற்படும்.
50. தசாக்ஷரமந்திரத்தால் நூறு தடவைகள் ஹோமம் செய்து உரிய லக்ஷணப்படி தசாயுதங்களை செய்து சிவமந்திரம் கூறி நீரினால் புரோக்ஷ்ணம் செய்ய வேண்டும்.

அஷ்டமங்களமின்மை

51. அஷ்டமங்களம் இல்லாது போனால் மனைவி அழிந்து போவாள். அதற்கு பிராயச்சித்தமாக சாந்திஹோமம் செய்து உரிய லக்ஷணப்படி அஷ்ட மங்களப் பொருட்களை செய்து வைக்க வேண்டும்.
    பஞ்ச சவ்யத்தினால் ப்ரோக்ஷ்ணம் செய்து விதிப்படி குழிக்க வைத்து ஸ்தாபிக்க வேண்டும்.

அங்குரார்ப்பணமின்மை / பாலிகை அழிந்து போதல்

52. அங்குரார்ப்பணம் எனும் கிரியை இல்லாது போனாலோ அல்லது பாலிகை அழிந்து போனாலோ.
53. ஏனைய அனைத்தும் உரிய லக்ஷணங்களோடு இருந்தாலும் நெற்பயிர் அழிந்து போகும். இதில் சந்தேகமில்லை இதற்கு பிராயச்சித்தமாக சாந்திஹோமம் செய்து புண்யாக வாசனத்தையும் செய்தல் வேண்டும். அங்குரார்ப்பணத்தையும் செய்தல் வேண்டும். அவ்வாறே பாலிகை களையும் லக்ஷணங்களின் படி இருக்கச் செய்ய வேண்டும்.

அஸ்திரதேவர் வீதிபிரதக்ஷிணம் வராமை

54. அஸ்திதேவர் வீதி பிரதக்ஷ்ணம் செய்யாவிடின் பெரும் பஞ்சம் ஏற்படும்.

55. இதற்கு பிராயச்சித்தமாக மூர்த்தி ஹோமம் செய்து மூலமந்திரத்தினால் நூறு தடவைகள் ஹோமம் செய்ய வேண்டும். பின்னர் அனைத்துப் பொருட்களையும் ஒன்றுதிரட்டி எல்லாக் கிரியைகளையும் செய்தல்.

யாகத்தில் தீபமின்மை

56. யாகசாலையில் தீபம் இல்லாதுவிட்டால் மனநிலை கெட்டுப் போகும் நிலை ஏற்படும் என்பது நிச்சயம் இதற்கு பிராயச்சித்தமாக சாந்தி ஹோமம் செய்து பின்னர் தீபத்தை யேற்றி வைக்க வேண்டும்.

யாககுண்டத்தில் அக்னி அணைதல்

57. யாககுண்டத்தில் அக்னி தணிந்து போனால் வறுமை ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் சாம்பல்களை நீக்கி விதிப்படி அக்கினியை ஸ்தாபனம் செய்தல் வேண்டும்.

58. சமித்து, நெய், சரு (சாதம்) இவற்றினால் மூலமந்திரத்தால் ஹோமம் செய்ய வேண்டும். ஒவ்வொரு திரவியத்திற்கும் நூறு தடவைகள் ஹோமம் செய்து ஒவ்வொன்றின் முடிவிலும் வ்யாஹ்ருதி மந்திரத்தால் ஹோமம் செய்தல் வேண்டும்.

பிரணீதாபாத்திரம் அசைதல்

59. பிரணீதாபாத்திரம் அசைந்தாலோ அன்றில் இல்லாது போனாலோ காய்ச்சல் மற்றும் நோய் ஏற்படும். இதற்கு பிராயச்சித்தமாக நூற்று பதினாறு தடவை அஸ்திரமந்திரத்தினால் ஹோமம் செய்தல் வேண்டும்.

மந்திரமின்மையும், கிரியையின்மையும்

60. மந்திரமின்மையே, க்ரியையின்மையோ ஏற்பட்டால் பெரும் பைத்தியம் ஏற்படும் இதற்கு பிராயச்சித்தமாக மூர்த்தி ஹோமம் செய்வதோடு மூல மந்திரத்தால் நூறு தடவை ஹோமம் செய்தல் வேண்டும். உரிய திரவியங்களாலும் மந்திரங்களாலும் விதிப்படி ஹோமத்தை மேற்கொள்ள வேண்டும்.

தர்பை பரிதியின்மை

61. தர்பைகள் மற்றும் பரிதிகள் இல்லாது போனால் மக்களுக்கு துக்கம் உண்டாகும்

இதற்கு பிராயச்சித்தமாக சாந்திஹோமம் செய்து பின்னர் அவற்றை உரிய விதிப்படி வைத்து விட வேண்டும்.

பலித்திரவியமின்மை

62. பலித்திரவியமில்லாது போனாலோ அல்லது பலிப் பொருட்கள் விழுந்து போனாலோ சிறப்பாக (நெற்பயிர்களின் அழிவும் பசுக்களின் அழிவும் ஏற்படும்.

63. அத்திரவியங்களை நீக்கிவிட்டு புதிய திரவியங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்கு பிராயச்சித்தமாக மூலமந்திரத்தை நூறுதடவை ஜெபம் செய்ய வேண்டும்.

பலிதானமின்மை

64. பலிதானமில்லாது போனால் மனிதர்களுக்கு பசித்தொல்லை ஏற்படும்.

65. இதற்கு பிராயச்சித்தமாக மூர்த்தி ஹோமம் செய்து ப்ரபூதபலியிட்டு விஸினால் ஹோமம் செய்ய வேண்டும். பலிப்பொருட்களைப் பெற்று பலிதானத்தையும் செய்தல் வேண்டும்.

பலிபீடம் இன்மை

66. உற்சவகாலத்து பலிபீடம் எனப்படும் பலிலிங்கம் இல்லாது போனாலோ அன்றில் உடைந்து போனாலோ அல்லது விழுந்து போனாலோ பிராயச்சித்தம் செய்தல் வேண்டும். உடைந்து போனால் கர்த்தாவுக்கு அழிவு ஏற்படும் என்பது உறுதியானதாகும்.

67. இதற்கு பிராயச்சித்தமாக சாந்திஹோமம் செய்த மூலமந்திரத்தால் நூறு ஆகுதி ஹோமம் செய்தல் வேண்டும். புதிய பலிபீடமாகிய பலி லிங்கத்தைச் செய்த பின்னர் பலயிட வேண்டும்.

சூலாஸ்திரம் விழுதல்

68. சூலாஸ்திரம் விழுந்தாலோ உடைந்தாலோ அன்றில் தொலைந்தாலோ அந்தக் கிராமத்திற்கும் அரசுக்கும் பகைவரின் பயம் ஏற்படும்.

69. சூலாஸ்திரம் விழுந்தால் அதற்கு பிராயச்சித்தமான அபிஷேகம் செய்து சாந்திஹோமத்தையும் செய்தல் வேண்டும். அத்தோடு அறிவாளியான வன் அஸ்திரமந்திரத்தால் நூறு தடவைகள் ஹோமம் செய்யவும் வேண்டும்.

70. எஞ்சிய ஸ்தானங்களில் பலியையிட்டு யாகமண்டலத்திற்கு செல்லுதல் வேண்டும். சூலத்தின் தண்டம் உடைந்தது போனால் அதனை கூடிய அளவு முயற்சி செய்து நீக்கி விடுதல் வேண்டும்.

71. வேறு ஒரு அஸ்திரத்தைப் பெற்று யாகத்தின் மிகுதியை பின்பற்றி செய்தல் வேண்டும். பின்னர் சூலாஸ்திரத்தைச் செய்து விதிப்படி ஸ்தாபனம் செய்தல் வேண்டும்.

72. வேறு அங்கங்கள் இல்லாது போனால் அவற்றினை முன்பு இருந்தது போன்று அறிவாளியானவன் செய்து விட வேண்டும். அந்த அஸ்திரம் எந்த உலோகத்தினால் செய்யப்பட்டதோ அந்த லோகத்தின் திரவத்தால் முன்பிருந்தது போன்று சீர்ப்படுத்த வேண்டும்.

73. (அச்சூலாஸ்திரத்திற்கு) ஜலாதிவாசம் முதலானவை இல்லாமல் பிரதிஷ்டை செய்ய வேண்டும். ஆயுதங்கள் முதலியன இல்லாது போனாலோ அல்லது உடைந்து போனாலோ அல்லது விழுந்து போனாலோ ....

74. பெரும் நோயும் பசுக்கள் அழிதலும் ஏற்படும் இதில் சந்தேகமே இல்லை. "பிந்தூர்த்வ" எனும் மந்திரத்தால் பதினெட்டுத் தடவைகள் அறிவாளி யானவன் ஜெபம் செய்ய வேண்டும்.
இல்லாது போனாலோ அன்றில் உடைந்து போனாலோ முன்பு கூறிய லக்ஷணப்படியாக செய்தல் வேண்டும்.

பலிபாத்திரம் இன்மை

75. பலிபாத்திரம் இல்லையெனில் செல்வமும் தானியமும் குறைந்து போகும். சாந்திஹோமம் பின்னர் செய்து பின்னர் புதிய பாத்திரத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.

பலிதானமின்மை

76. பலிதானமில்லாது போனால் எல்லா தேவதைகளுக்கும் விருப்ப மின்மை ஆகின்றது.
மூர்த்தி ஹோமம் செய்து பின்னர் நந்தி மந்திரத்தை நூறு தடவைகள் ஜபம் செய்தல் வேண்டும்.

பலிதீபமின்மை

77. பலிதீபமில்லாது போனால் லக்ஷ்மீயானவள் கிராமத்திலிருந்து சென்றவளாகின்றாள்.

78. க்ஷீரியாஸ்த்திரத்தினாலும் பீஜமுக்ய மந்திரத்தாலும் தனித்தனியாக நூறுதடவைகள் ஜபம் செய்தல் வேண்டும். இருமடங்கு தீபங்கள் ஏற்றி ஏனையபலிகளை இடுதல் வேண்டும்.

காலதாமதம்

79. காலம் தாமதமாதல் ஏற்பட்டாலோ அவ்வாறே பலிதானமோ சுவாமியின் வீதி பிரத க்ஷணமோ ஏற்பட்டால் அந்த கிராமத்தின் அழிவு என்பது கூறப்படுகிறது. அதற்கு பிராயச்சித்தமாக சாந்தி ஹோமத்தைச் செய்தல் வேண்டும்.

புண்யாஹவாசனம் செய்து பலிதானத்தைச் செய்ய வேண்டும்.

உற்சவ பிரக்ஷிணமின்மை

80. உற்சவ காலத்தில் சுவாமி வீதி பிரதக்ஷிணம் இல்லாது போனால் பின்னர் தொடர்பை ஏற்படுத்த வேண்டும்.

81. மூர்த்தி ஹோமம் செய்து பின்னர் பிம்பத்திற்கு ஸ்நபனம் செய்ய வேண்டும். பின்னர் கிரமமாக வீதிபிரதக்ஷிணம் செய்து கிராம பிரதக்ஷிணமும் செய்தல் வேண்டும்.

உற்சவ காலத்தில் கலகம் ஏற்படல்

82. உற்சவ காலத்தில் கலகம் ஏற்பட்டாலோ அல்லது கள்வரினால் பயம் ஏற்பட்டாலோ அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு பிராயச்சித்தமாக ஆலயத்தினுள் (சுவாமி வந்ததும்) சாந்தி ஹோமம் செய்தல் வேண்டும்.

83. மிகவும் உகந்த திரவியங்களால் மூலலிங்கத்திற்கும் உற்சவ பிம்பத்திற்குமாக இரண்டிற்கும் அபிஷேகம் செய்தல் வேண்டும். இவ்வாறு ஏற்பட்டால் எதிரியால் பயமும், பெருநோயும் ஏற்படுகிறது.

84. மூர்த்திஹோமம் செய்து பின்னர் ஸ்நபன அபிஷேகத்தை பிரபுவானவன் செய்ய வேண்டும். புண்ணியாக வாசனம் செய்து பாசுபதாஸ்திர மந்திரத்தால் நூறு தடவைகள் ஹோமம் செய்ய வேண்டும்.

உற்சவ காலத்தில் சுவாமி விழுதல்

85. உற்சவ காலத்தில் சுவாமி வீதி பிரக்ஷிணம் வரும் வேளை விழுந்தாலோ அவ்வேளை அங்கங்கள் இல்லாது போனாலோ அதன் பயனாக நாட்டின் அரசனுக்கு அழிவு ஏற்படும் என்பது நிச்சயமாகும்.

86. இதற்கு பிராயச்சித்தமாக ஸ்நபனமும் புண்யாகமும் செய்து சாந்திஹோமம் செய்து பின்னர் வீதி பிரதக்ஷிணம் செய்தல் வேண்டும்.

87. உற்சவமூர்த்தி விழும் போது தலை, தோள், கால் இவைகளில் குறைவு (உடைவு) ஏற்பட்டால் அவ் உற்சவமூர்த்தியை நீக்கி விட வேண்டும். நகம் விரல் என்பன இல்லாது போனாலோ அல்லது ஆபரணங்கள், யுதங்கள் இல்லாது போனாலோ ....

88. பிரஜாபதியே! பத்மபந்தமோ அல்லது ஜடையோ இல்லாது போனாலோ மீண்டும் அவற்றைப் பொருத்தி அதன் பொருட்டு ப்ரோக்ஷணம் செய்தல் வேண்டும்.

தீக்ஷையற்றவர்கள் சுவாமியைத் தொடுதல்

89. தீக்ஷையற்றவர்களும் அந்தணர்களல்லாதவர்களும் சுவாமியின் திருவுருவத்தை தொடுவார்களேயானால் அவ்வாறே யாகசாலையுள் நுழைந்தாலும் அல்லது தொட்டாலும்

90. அந்த கிராமவாசியாகிய மனிதர்களுடைய இருப்பிடமாவது அழிந்து போகும் என்பதில் சந்தேகமில்லை. பஞ்சகவ்யத்தினால் புரோக்ஷணம் செய்து புண்யாக வாசனமும் செய்து பின்னர்...
சுவாமியின் திருவுருவத்திற்கு ஸ்நபனமும் செய்ய வேண்டும்
சாந்தி ஹோமம் செய்தல் வேண்டும்

உற்சவ காலத்தில் கிராமத்தில் மனிதமரணம் ஏற்படல்

91. உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் அக்கிராமத்தில் மனிதர்கள் இறந்தால் ..

92. அரசுக்கு கெடுதல் ஏற்படுத்தலைத் தடுத்தலின் பொருட்டு மிக விரைவாக சவத்தை அவ்விடத்தை விட்டு நீக்குதல் வேண்டும். அதற்கு பிராயச்சித்த மாக மூர்த்திஹோமும் அஸ்திரமந்திரத்தினால் எண்ணூறு (800) தடவைகள் ஹோமம் செய்தல் வேண்டும்.

பரிவேஷ்டமின்மை

93. பரிவேஷ்டமில்லாது போனால் உலகில்அறிவு பேதலித்த தன்மை ஏற்படும். இதற்கு பிராயச்சித்தமாக சிவமந்திரத்தை நூறு தடவையும், "வ்யோம வியாபி" மந்திரத்தை நூறு தடவையும் ஜபம் செய்ய வேண்டும்.

நீராஜனமின்மை

94. நீராஜனமில்லாது போனால் நெருப்பினால் பயம் ஏற்படுகிறது. இதற்கு பிராயச்சித்தமாக மஹேஸ்வரனுடைய (சிவ) மூலமந்திரத்தால் சிறப்பாக நூறு தடவைகள் ஜபம் செய்ய வேண்டும்.

95. பின்னர் முன்பு கூறப்பட்ட விதியோடு கூட நீராஞ்ஜனம் செய்துவிட வேண்டும். பெருங்காற்றோ அல்லது எரிக்கப்பட்டாலோ கிராமவாசி களுக்கு சிறிதளவு பயம் ஏற்படும்.

96. அவ்விதம் ஏற்பட்டால் அந்த நெருப்பை நீக்கி விட்டு முன்பு போன்று அறிவாளியானவன் செய்ய வேண்டும். பின்னர் மூர்த்திஹோமம் செய்த அதன் பின் பிம்பத்திற்கு ஸ்நபனமும் செய்தல் வேண்டும்.

யுத்தத்தின் ஆரம்பம்

97. (குறித்த நாளில்) யுத்தத்தின் ஆரம்பம் இல்லாது போனால் பயிர்களின் அழிவு ஏற்படுகிறது. மூர்த்திஹோமம் செய்து பின்னர் யுத்தத்தின் ஆரம்பத்தைச் செய்தல் வேண்டும்.

ரக்ஷாசூத்திரம் இன்மை

98. ரக்ஷாசூத்திரம் இல்லாது போனால் சிறுவர்களிடத்தில் அழிவு ஏற்படும் இதற்கு பிராயச்சித்தமாக புண்யாக வாசனம் செய்து கௌதுக பந்தனத்தை தரித்தல் வேண்டும்.

கந்தோற்சவமின்மை

99. கந்தோற்சமில்லாது போனால் அரசன் இராச்சியத்தை இழப்பான். மீண்டும் உற்சவத்தை ஆரம்பித்து சாந்திஹோமத்தைச் செய்தல் வேண்டும்.

100. பின்னர் கந்தோற்சவம் செய்ய வேண்டும் அதற்கு முன்னதாக நல்லெண் ணையால் அபிஷேகம் செய்தல் வேண்டும். அறிவாளியான வன் மூர்த்தி ஹோமத்தைச் செய்து அதன் பின்னர் ஸ்நபனமும் செய்ய வேண்டும்.

101. வேறு ஒரு தினத்தில் தீர்த்தத்திற்கு முன்னதாகச் செய்தல் வேண்டும். இதில் குறைவு ஏற்பட்டால் அரசுக்கும் கிராமத்திற்கும் அழிவு ஏற்படும்.

102. முன்பு கூறப்பட்ட விதிப்படியாக அறிவாளியானவன் மீண்டும் உற்சவத் தைச் செய்தல் வேண்டும். முன்பு கொண்டிருந்த நாளினை விலக்கி அதன்பின் பொருத்தமான நாளில் உற்சவத்தைச் செய்தல் வேண்டும்.

103. உற்சவத்தன்மையுடைய செய்யத்தக்க இந்த கந்தோற்சவத்தினுடைய குறைவினால் கிராமத்தின் அழிவே ஆகிறது. திசாஹோமமும் ஸ்நபனமும் செய்யத்தக்கன.

104. முன்பு கூறப்பட்ட விதியோடு கூட மீண்டும் உற்சவத்தைச் செய்தல் வேண்டும். பீடத்தில் கூறப்பட்ட ஆசனமில்லையேல் சந்திதேவதைகள் மகிழ்வடையமாட்டார்கள்.

105. மூலமந்திரத்தினால் நூறு ஆகுதிகள் ஹோமம் செய்து பின்னர் மேல் ஆசனத்தைச் செய்தல் வேண்டும்.

சண்டயாகமின்மை

106. சண்டயாகமில்லாது விட்டால் (எதிரியால்) பிறரால் பயம் ஏற்படும்

107. சிவனுக்கு ஸ்நபன அபிஷேகம் செய்து பின்னர் சண்டயாகத்தையும் செய்தல் வேண்டும்.

தந்திர சங்கரதோஷம்

108. ஆரம்பத்திலிருந்து வேறு ஆகமபிரமாணப்படி சிவயாகத்தில் பூசைகள் செய்யப்படுமேயானால்

109. ஆகமத்திற்கு கேடு ஏற்படும். ஆகவே அதனை விடுத்து முன்பு கூறப்பட்ட விதிப்படியே பின்பு செய்தல் வேண்டும். மந்திர சங்ரதோஷத்தினால் பெரும் நோய் ஏற்படும்.

110. பலாசம் சமித்து, நெய், சரு (சாதம்) இவற்றால் அம்மந்திரங்களினால் எண்ணூறு ஆகுதி ஹோமமும், அதே அளவ ஜபமும் செய்ய வேண்டும்.

ஆசார்யதக்ஷிணையின்மை

111. ஆசார்யருக்கு தக்ஷிணை இல்லாது போனால் கர்த்தாவும் மனைவியும் அழிவர். அந்த யாகத்தினுடைய பலன் அனைத்தும் பலனற்றதாக ஆகி விடும் என்பது நிச்சயம்.

112. பின்னர் இருமடங்காக தக்ஷிணையை அளித்து தேசிகரை திருப்தி யடைந்த மனமுடையவராக செய்தல் வேண்டும். சாந்திஹோமத்தை செய்து மூலமந்திரத்தால் நூற தடவை ஜபம் செய்ய வேண்டும்.

113. ஆசார்யருக்கு இருமடங்கு தக்ஷிணை அளித்து தேசிகரை அங்கு மகிழ்வளிக்க வேண்டும். கிராமம் முதலானவைகளில் இலக்கானது எதிர்மயையான தன்மையுடையதாக ஆகிறது.

114. கிராமத்தின் தலைவன், மக்களின் தலைவன் (அரசன்) ஆகியோருக்கு மனக்குழப்பம் ஏற்படும். இதற்காக வேறு ஒரு பிம்பத்தை இத் தோஷத்தி லிருந்து நீக்குவதற்காக ஸ்தாபிக்க வேண்டும்.

115. சாந்திஹோமத்தைச் செய்து அந்தந்த ஸ்தபனத்தைச் செய்தல் வேண்டும். யாகத்தின் அனைத்துப் பொருட்களும் தேசிகருக்கு கொடுக்கத்தக்கது அல்ல.

116. அந்த யாகபூஜை பலனற்றதாக ஆகும். எனும் காரணத்தால் அதனை அவருக்கு கொடுத்து விடவேண்டும். அது பொருத்தமற்றதாக ஆனால் அங்கு சாந்திஹோமத்தால் சமாதானம் செய்தல் வேண்டும்.

117. மூர்த்தி ஹோமமும் திசாஹோமமும் நிஷ்களத்திற்கு யோக்யமாக ஆகுதி செய்யத்தக்கது. யாகத்தின் அக்கினியிலேயே முன்பு கூறப்பட்ட விதிப்படியாக அறிவாளியானவர் செய்தல் வேண்டும்.

12. ரத சங்கிரஹறரணவிதி

பூர்வ காரணாகமம் 142வது படல தமிழ்மொழி பெயர்ப்பு

01. அடுத்ததாக ரத சங்கிரஹறணத்தைக் கூறப்போகிறேன். இது மேலானதும், எல்லாப் பயங்களையும் நீக்குவதும், புண்ணியமானதும், எல்லாவித மான துன்பங்களையும் நீக்குவதும்...

02. அரசனுக்கு வெற்றியை அளிப்பதும், எல்லோரையும் காப்பதற்கும் காரணமாவதும் ஆகும். தேசிகரான சிவாச்சாரியாரானவர் தேரினதும் அங்கத்தோடும் பிரத்தியங்கத்தோடும் கூடிய நிலையைப் பார்த்து ...

03. செல்லத்தக்கது செல்லத்தகாததுமான இயல்பினை அறிந்து சிப்பியி னால் உறுதியான தன்மையைச் செய்து அதன் அங்கங்களையும் மீண்டும் பரிசோதிக்க வேண்டும். இது ஸ்தானிகரான சிவாச்சாரியாரின் கட்டளையினால் ஸ்தபதியினால் செய்யத்தக்கது.

04. பின்னர் தேரிலிருந்து அப்பொருட்களை குருவிற்கு தெரிவித்து சிவனுடைய (இந்த ரதமானது) செல்வதற்கு தகுதியானது என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டு திருத்தங்களையும் (சோதனைகளையும்) ஆரம்பிக்க வேண்டும்.

05. பழுதடைந்த அதனுடைய அங்கங்களை நீரினால் சுத்தி செய்து பின்னர் மூல மந்திரத்தால சிவஜலத்தினால் ரதத்தினை ப்ரோகக்ஷணம் செய்து நன்கு தொட்டுக் கொள்ள வேண்டும்.

06. ரத சமஸ்காரத்தோடு கூடியது எல்லா விருப்பங்களையும் அளிப்பது. பின்னர் இறைவனை நன்கு ஆவாஹனம் செய்து ரதத்தின் அங்கங்களில் இணைக்க வேண்டும்.

07. சில்லினது இரண்டு அச்சுக்களிலும் மாயா சக்தியையும், இரண்டு சக்கரங்களிலும் (சில்லுகளிலும்) சூரியன், சந்திரன் ஆகிய இருவரையும் ஆதார சக்தியென அழைக்கப்படும் அடித்தளமான இரண்டு தண்டங்களிலும் ...

08. விருஷபரூபமான விஷ்ணுவை தண்டத்தின் அதிதேவதையாகவும் வரித்துக் கொண்டு அதனைச் சுற்றியுள்ள பட்டிகாசாலையில் சதருத் திரர்கள் புகழப்படுகின்றனர்.

09. உடல்களிலும் உடலின் கட்டுக்களிலும் தர்மம் எனப்படும் விருப்பத் தையும், உடலில் இருந்து உடலின் இடையில் வாயுவையும் சைத்தியம் முதலான குணத்தோடு கூடியதுமாகவும் ...

10. ரதத்தின் பிரசாதத்தின் மேல் ஸ்தூபிகையில் எவ்விதமோ அவ்விதமே சிவனையும் ஸ்கந்தன், தக்ஷிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா அவ்வாறே ...

11. கிழக்கு முதலான நான்கு திக்குகளிலும் விளங்கத்தக்கதாகவும் பின்னர் நான்கு வேதங்களின் வடிவமாகவும் அவற்றின் வருணன், அக்கினி, வாயு, என்பனவும் ..

12. இத்தகைய ஒழுங்கில் அறிந்து கொள்ளத்தக்கதாகவும் முகபாவத்தில் வயிறு, பாதம் என்பவைகளிலும் யுகத்தினால் நுனியில் இணைக்கத் தக்கது (இது) வேதாத்மாவானது தர்மமே காரணமாகக் கொண்டது.

13. பிரம்மா ஆனவர் சாரதி வடிவமாக குதிரையை ஓட்டுபவராக இருக்க முன்புறம் குதிரை இருக்கும் அடுத்ததாகக் கூறத்தக்கது சுற்றிலும் லோகபாலகர்கள் விளங்குவர்.

14. முன்னதாக இரு மருங்கிலும் ஐயாவுடம் விஜயாவும் விளங்குவர் அவ்விதமாக சங்கல்பம் செய்து தேவர்களையும் ரதத்தின் முன்னிற் பவர்களான கிரமமாக பூஜிக்க வேண்டும்.

15. ரதத்தினை மணம் பொருந்திய மாலை முதலானவைகளால் கலை வடிவமாக நன்கு அலங்கரிக்க வேண்டும். முன்னதாக ரதத்தில் ஏறுவதற்காக இறைவனைப் பிரார்த்தனை செய்து பூஜிக்க வேண்டும்.

16. பிரபுவான சிவனை உற்சவத்திலோ, ஸ்தாபன காலத்திலோ, அயனத் திலோ அவ்விதமே விஷு புண்ணிய காலத்திலோ விஷேசமான தினங் களிலோ, சங்கிராந்தி காலத்திலோ அமாவாசையிலோ அவ்விதமே.

17. அரசனது ஜன்ம நக்ஷத்திரத்திலோ இறைவனை ரதத்தில் ஏற்ற வேண்டும் ரதாரோஹணத்திற்கு முதல்நாள் இரவில் கௌதுவ பந்தனம் செய்தல் வேண்டும்.

18. பொன்னாலோ வெள்ளி, பருத்திநூல் என்பவற்றாலோ (கௌதகபந் தனம் செய்ய வேண்டும்) சிவனின் முன் ஸ்தண்டிலத்தை செய்து எட்டு (௮) த்ரோண அளவு நெற்பரப்பி

19. அதன் நடுவில் எட்டுத் தளங்களுடையதும் கர்ணிகைகளுடையதுமான பத்மத்தைக் கீறி அதன் மீது (ஸ்தாலிகை எனும்) பாத்திரத்தை வைத்து அரிசியினால் நிரப்ப வேண்டும்.

20. அதன் நடுவில் சூத்திரத்தை வைத்து அதில் வாசுகியைப் பூஜிக்க வேண்டும். பரிசாரகரை அழைத்து உஷ்ணீஷம் உத்தரீயம் என்பவற்றால் அலங்கரித்து.

21. வஸ்திரம், ஆபரணம் என்பவற்றோடு கூடியதாகவும் சந்தனம், மாலை என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டதாகவும் தேசிகரானவர் ஸ்தாலி கையை அவரது தலையில் அஸ்திர மந்திரத்தால் வைத்து ...

22. பல்வேறு விதமான அலங்காரங்களுடன் கூடியதாகவும், பல்வேறு விதமான தீபங்களுடன் கூடியதாகவும், பல்வேறு வாத்தியங்களுடன் கூடியதும் நிருத்தம், பாடல் என்பவற்றுடன் கூடியதுமாக ..

23. கிராமபிரதக்ஷிணம் செய்து ஆலயத்தை நோக்கி நுழைந்தவர்களான நல்ல முகூர்த்தத்திலும், நல்ல லக்னத்திலும் ஹ்ருதயமந்திரத்தால் கௌதுகத்தை கட்ட வேண்டும்.

24. தேவதேவரான சிவனைப் பழம், தாம்பூலம் என்பவற்றை நிவேதித்து பூஜிக்க வேண்டும் பின்னர் விடியற்காலையில் களங்கமற்ற சுத்தமான வேளையில் அபிஷேகத்தை ஆரம்பிக்க வேண்டும்.

25. அஸ்திரமந்திரத்தால் உலர்ந்த மிருதுவான துணியால் ஈரம் துவட்டி புதிய ஆடையை (வஸ்திரத்தை) அளிக்க வேண்டும். உத்தரீயத்தை ஹ்ருதய மந்திரத்தினால் அளித்து முன்பு கூறப்பட்ட விதிப்படி பூஜிக்க வேண்டும்.

26. அங்கு பஞ்சாக்னியைப் பூஜித்து பஞ்சமூர்த்திகளின் அதிதேவதைகளை யும் பூஜிப்பதோடு மணலால் ஸ்தண்டிலம் செய்து ஒரு அக்னியினாலோ சிவாதிபனை (பூஜிக்க வேண்டும்)

27. அக்னிகார்யத்திற்குரிய வழிமுறைப்படி அக்னிமுக சமஸ்காரத்தை செய்து சமித்து நெய், சரு, நெற்பொரி, எள்ளு, சர்க்கரை, வஸ்திரம் என்பவற்றோடு கூடியதாக ..

28. "சமித்முதலானவைகளில் நெய்யை மூலமந்திரத்தினாலும் சருவை ஹ்ருதயமந்திரத்தினாலும் நெற்பொரியை வாமதேவமந்திரத்தாலும் ஹோமம் செய்ய வேண்டும்.

29. சிவமூலமந்திரத்தால் எள்ளினையும் நேத்ரமந்திரத்தால் சர்க்கரையை யும், சிவமந்திரத்தால் வஸ்திரத்தையுமாக திரவியங்களை ஒவ்வொன் றையும் இருபத்தைந்து ஆகுதியுடையதாக ஹோமம் செய்ய வேண்டும்.

30. அறிவாளியானவன் ஒரு வஸ்திரத்தை ஹோமம் செய்ய வேண்டும். ஒவ்வொரு திரவியத்தின் முடிவிலும் வியாஹகிருதி மந்திரத்தால் ஹோமம் செய்தல் வேண்டும். அதன் பின்னர் "ஸ்விஷ்டமக்னே" எனும் மந்திரத்தால் ஹோமம் செய்ய வேண்டும்.

31. ஜயாதி ஹோமத்தையும் ராஷ்ட்ர ப்ருத மந்திரத்தாலும் கிரமமாக ஹோமம் செய்ய வேண்டும். சிரோ மந்திரத்தால் பூர்ணாகுதியையும் ஹோமம் செய்து அக்னியை விஸர்ஜனம் செய்தல் வேண்டும்.

32. ஆச்சார்யாரை வஸ்திரம், பொன் மோதிரம் முதலானவைகளால் பூஜித்து மூர்த்திபர்களை அறிவாளியானவன் முன்பு கூறப்பட்ட விதிப் படியாக பூஜிக்க வேணடும்.

33. பசு, பூஜித்த கும்பம் பித்தளைப்பாத்திரம், வஸ்திரம், நீலம் (கல்) என்பவற் றினை விஷேசமாக தேசிகராகிய சிவாச்சார்யருக்கு அளிக்க வேண்டும்.

34. இந்த தானமானது சிவதானமாகிறது ஆகவே கர்த்தாவானவர் விரும்பிய படி அளிக்க வேண்டும். இது யோகிகளால் தியானத்தோடு கூடியது சிவஞானத்தின் பொருளை அறிவிப்பது.

35. வஸ்திரம் பொன்னோடு கூடியதாக சிவசந்நிதியில் அளிக்க வேண்டும். விக்னவரரை இடையூற நீக்குவதன்பொருட்டு விக்னராஜருக்கு சந்தனம், புஷ்பம் என்பவைகளால் பூஜிக்க வேண்டும்.

36. பலவிதமான பக்ஷணவகைகளையும், பலவிதமான போஜனவகைகளை யும் பாத்திரங்களில் விதிப்படியாக நிறைத்து "கணாநாம்" எனும் மந்திரத்தால் ...

37. கணேசரிடத்தில் நிவேதித்து பின்னர் இடையூறின்மையைப் பிரார்த்திக்க வேண்டும். தேசிகரானவர் கணேசரின் ஆணையை சிரத்தினால் பெற்று .

38. தேவதேவரான (சிவனை) பல்வேறு விதமான ஆபரணங்களுடன் கூடிய தாக அலங்கரிக்க வேண்டும். சுற்றிலும் க்ஷிரிகாஸ்திரத்துடன் கூடியதாக பல்வேறு விதமான வஸ்திரங்களுடன் கூடியதாக ...

39. பல்வேறு பூக்களுடன் கூடியதாகவும் சந்தனம் மற்றும் பல்வேறு வாசனை களுடன் கூடியதாகவும் விஷேசமாக பாயசான்னத்தை அளித்துப் பூஜிக்க வேண்டும்.

40. வெள்ளிப்பாத்திரம் ஒன்றினை எடுத்து சிவனின் முன் ஸ்தண்டிலத்தில் வைக்க வேண்டும். சந்தனம், அகர், கற்பூரம் என்பவற்றை மென்மை யான தூளாக்கி குங்குமப்பூவுடன் கூட ....

41. பாத்திரத்தில் நீருடன் சேர்த்து கடைந்து ஒன்று திரட்ட வேண்டும். பின்னர் மல்லிகை முதலான புஷ்பங்கள், ஜாதிப்பூ, புன்னாகப்பூ, சம்பகப்பூ என்பவைகளினால் ...

42. (சிவனின்) பாதத்தில் காமபீஜத்தினால் மந்திரத்தை அறிந்தவன் நன்கு பூஜித்து நனைந்த சம்பகத்தை கர்த்தாவானவர் சிவனின் கட்டளை யினால் சிவாச்சார்யாரானவர் கர்த்தாவுக்கு கொடுக்க வேண்டும்.

43. நனைந்த தாமரை மலரால் பாதங்களின் சுற்றிலும் சமர்ப்பித்து விட்டு நல்ல முகூர்த்தத்திலும் நல்ல லக்னத்திலும் ஸ்வஸ்தி சூக்தத்தை நன்கு உச்சரிக்க வேண்டும்.

44. பிரபுவை ரதத்தின் (இருப்பு) ஸ்தானத்திலிருந்து மெதுவாக நீக்கி விட்டு பின்னர் அதில் ஏற்றுவிக்க வேண்டும். ரதத்தின் உயரத்தையும் அகலத் தையும் கருத்திற் கொண்டு அதனது செல்லுகையைத் தீர்மானிக்க வேண்டும்.

45. உரிய விதிப்படி எல்லாவிதமான அலங்காரங்களுடன் கூடியதாகச் செய் விக்க வேண்டும். ரதத்தின் சுற்றுப்புறம் எங்கும் பொன்னைக் கொண்டு அணிவிக்க வேண்டும்.

46. ஆசார்யாரானவர் ரதத்தின் மத்தியிலிருக்கும் பசுபதியான சிவனை உலகின் காப்பாற்றுதலைக் காரணமாகக் கொண்டு ரத்தின மாலை களாலும், புஷ்ப மாலைகளாலும் தொங்கவிட்டு வழிபட வேண்டும்.

47. திரையினால் மறைத்துவிட்டு நிவேதனத்தைச் செய்தல் வேண்டும். நைவேத்தியம் செய்யும் செயல் நிறைவடைந்த நிலையில் திரையை நீக்க வேண்டும்.

48. தேசிகரான சிவாச்சார்யாரால் வாசனைப் பொருட்கள் கலந்த பூக்களை மேல் நோக்கி சொரிய வேண்டும். இவ்வாறு செய்வதால் பறவை யினங்களுக்கும் மகிழ்ச்சி அளிப்பனவாக ஆகிறது.

49. ஆகாயத்தில் திரிபவை வீசப்படும் பூக்களையும், ரத்தினங்களையும் பருகுகின்றன. இதனால் உயிரினங்களின் மகிழ்ச்சிக்காகவே பொன் னும் ரத்தினங்களும் வைக்கப்படுகின்றது.

50. ஒன்றுக்கொன்றான நிகழ்வினாலேயே பெறத்தக்க விடயங்கள் சார் பானதாக அமைகின்றது. இறைவனை எல்லா அங்கங்களுக்கும் (எல்லாத் திரவியங்களையும்) பூசி ஹ்ருதய மந்திரத்தால் நனைய வைக்க வேண்டும்.

51. பின்னர் தாம்பூலம் சமர்ப்பித்து கற்பூர (நீராஜனம்) விஷேசமாக காண் பிக்க வேண்டும். வேண்டும் பொருள் மேலும் கிடைக்க வேண்டும் என்றும் விருப்பத்தினால் மந்திரங்களுடன் கூட வழிபடுதல் வேண்டும்.

52. (இவ்வாறாகச் செய்வதால்) உடலானது பகல் வேளை முழுவதும் தாண்டிய நிலையில் பரமேஷ்டி நிலையை அடைகிறது. ஷட்தத்துவ தர்சனத்தால் சமய ஆசாரங்களானது பாதுகாக்கப்படுகிறது.

53. ஆசார்யாரை வஸ்திரம், பொன்னாபரணம் என்பனவற்றால் வழிபட்டு பக்தியுடன் அளிக்க வேண்டியவற்றைக் கொடுத்த தேரில் ஏற்றிச் செலுத்த வேண்டும்.

54. சிவனது முன்னிலையானது சன்னிதியில் எல்லாவிதமான வாத்தியங் களுடனும், பாடல்கள், ஆடல்கள் என்பவற்றுடன் கூடியதாகவும், பல்வேறு விதமான தீபங்களுடன் கூடியதாக காண்பிக்க வேண்டும்.

55. சிவனது ரதயாத்திரையை விசேஷமாக கிராமங்களில் செய்ய வேண் டும். இதனால் இவ்வுலகில் போகங்கள் பெறப்படுகின்றன. அதனால் சிவபிரசாதமும் கிடைக்கப் பெறுகின்றது.

56. ரதசேவையில் ஒன்றுபடுகின்ற ஜனங்களுக்கு சிவனானவர் இருபத் தொரு குலபேதங்களுக்கும் சிவலோகத்தில் வசிக்கச் செய்வதோடு எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கின்றார்.

57. ரதத்தின் ஆரோஹணம் இவ்விதமாகும். ரதத்தின் (பிரதிஷ்டையை) புரோக்ஷணத்தைக் கேட்பாயாக. ரதம் செய்த சந்தர்ப்பத்தில் சம்பு ரோஷணத்தைச் செய்ய வேண்டும்.

58. நல்ல முகூர்த்தத்தில் நல்ல லக்னத்தில், நல்ல நக்ஷத்திரம், கரணம் என்பவற்றோடு கூடிய நேரத்தில் தேரினைச்செய்த தக்ஷகனை (தச்சனை) வஸ்திரம் பொன் முதலியவற்றால் வழிபட்டு விடையளிக்க வேண்டும்.

59. (ரதத்தை) பஞ்சகவ்வியத்தால் ப்ரோஷணம் செய்து பவமான சூக்தம் சொல்லி புண்யாஹ வாசனம் சொல்லி அதன் பின் சாந்திஹோமத்தைச் செய்ய வேண்டும்.

60. அங்கு ஆசார்யாரை வஸ்திரம், பொன்மோதிரம் முதலானவற்றால் பூஜிக்க வேண்டும். அதன்பின் ரதத்தை அலங்கரித்து ரதரோஹணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு ரத சங்கிரஹணவிதி

படலம் முற்றும்.

9789554396210

MATHI COLOURS
021 2229285